

அனர்த்த முகாமைத்துவ நிலையம

வருடாந்த அறிக்கை - 2017

அனர்த்த முகாமைத்துவ நிலையம்.



முகவரி

வித்யா மாவத்தை
கொழும்பு 07

வெப் தளம்

www.dmc.gov.lk

மின்னஞ்சல்

info@dmc.gov.lk

அவசர நடவடிக்கை அழைப்பு

0112136222 / 2670002 / 117

வருடாந்த அறிக்கை – 2017

1		அறிமுகம்	1
	1.1	அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை	1
	1.2	அனர்த்த முகாமைத்துவ விடயத்தின் கீழ் வரும் அனர்த்தங்கள	2
2		அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம	3
	2.1	நோக்கு, பணி மற்றும் நோக்கம	3
	2.2	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்	3
	2.3	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு	4
	2.4	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாட்குழுவினரின் ஆட்சேர்ப்புக்கள்	5
	2.4.1	பணியாட்குழு ஆட்சேர்ப்பு.	5
	2.4.2	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு	7
	2.5	2017 வருடத்தில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்தின் கூற்று	8
	2.5.1	அனர்த்த தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் - 2017	8
	i.	ஒட்டுமொத்த தாக்கம் - 2017	8
	ii.	வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் - 2017	9
	iii.	ஒவ்வொரு அனர்த்தத்தினாலும் சேதமடைந்துள்ள வீடுகள் - 2017	10
	iv.	மாவட்டங்களுக்கேற்ப இடம்பெற்றுள்ள வீட்டு சேதங்கள்	11
	v.	உயிரிழப்புகள் / காணமாற்போதல் மற்றும் காயங்கள்	13
	vi.	மாவட்டரீதியிலான உயிரிழந்தவர்கள், காணமாற்போனோர் மற்றும் காயமடைந்தவர்கள	14
	vii.	மாவட்டரீதியில் பாதிக்கப்பட்டவர்கள்	15
	viii.	கடந்த மூன்று வருட கால சுருக்கம்	16
	ix.	அனர்த்த தாக்கம் பற்றிய சுருக்கம் - 2017	17
3		தேசிய ரீதியிலான பிரதான செயற்பாடுகள்	17
	3.1	அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துதல	17
	3.2	தேசிய அவசர நிலமைகளின்போதான கருமமாற்றும் திட்டம்	18
	3.3	நிறுவனரீதியான அனர்த்த முன்ஆய்த்த திட்டம் (IDMP)	18
	3.4	இடைக்கால முகாமைத்துவ குழு	18
	3.5	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு	19
	3.6	தேசிய பாதுகாப்பு தினம்	20
	3.7	அவசர நிலமைகளின் போதான பதில் நடவடிக்கைக் குழு	20
	3.8	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம	20
	3.9	**Desinventra** தகவர் களஞ்சியம	20
4		அனர்த்தங்களைக் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	21
	4.1	மாவட்ட அடிப்படையில் அனர்த்தங்களைக் குறைத்தல்	21
	4.2	வெள்ள அனர்த்தத்தை தணிக்கும் கருத்திட்டம்	26
	4.3	சேதம் மற்றும் இழப்பு மதிப்பீட்டு முறைமை (Damage and Loss Assessment System)	27
	4.4	72 மணித்தியாலத்தினுள் அனரத்தங்களுக்கு பதிலிருக்கும் செயன்முறை	27
5		முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு	27

	5.1	அறிமுகம்	27
	5.2	கிரா உத்தியோகத்தர் பிரிவுவாரியாக சமூக முன்ஆயத்த மற்றும் அவசர நிலைமைகளின்போதான பதிலிருப்பு திட்டங்களை தயார் செய்தல்	29
	5.3	தேசிய / மாவட்ட/ பிரதேச மட்டத்திலான ஒத்திகை நிகழ்ச்சிதிட்டங்கள	30
	5.4	கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலான ஒத்திகை நிகழ்ச்சிகள	33
	5.5	பாரிய நீரத்தேக்கங்களின் அணைக்கட்டுக்களை அண்மித்த இடர்கள் தொடர்பிலான முன்ஆயத்த நடவடிக்கைகள்	34
	5.6	நாட்டினுள் நீரிழ் மூழ்குவதனால் ஏற்படும் உயிரிழப்புக்களை குறைத்தல	35
	5.7	வைத்தியசாலை முன்ஆயத்த திட்டத்தை தயார் செய்தல	35
	5.8	பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்	35
	5.9	பிரதேச மட்டத்தில் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம	36
	5.10	பருவப்பெயர்ச்சிக்கான முன்ஆயத்த நிகழ்ச்சித்திட்டம் -தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச	37
	5.11	தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2018 – 2030	38
	5.12	அவசர பதிலிருப்பு திட்டம்	38
	5.13	உமா ஓயா நானாவித செயற்பாட்டு அபிவிருத்தி கருத்திட்டத்தின் தாக்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்களை அண்மித்த விசேட அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்	39
6		அறிவுறுத்தல் மற்றும் பயிற்சிப் பிரிவு	40
	6.1	தேசிய மட்டத்திலான பயிற்சி வேலைத்திட்டங்கள்	41
	6.1.1	அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சு ஆகியன இணைந்து இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்துவதற்கான பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடு	41
	6.2.2	அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் அமைப்புக்கள் இணைந்து செயற்படுத்தும் அனர்த்த முகாமைத்துவ தொண்டர் இளைஞர் அமைப்புக்களை தாபிக்கும் வேலைத்திட்டம் - 2017	44
	6.2	மாவட்டரீதியிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள	49
7		அவசர கருமமாற்றல் நிலையம் (EOC)	51
	7.1	அனர்த்தத்துக்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்	54
	7.2	முன்னறிவித்தல்கள்	58
8		நிதித் தேர்ச்சி - 2017 டிசெம்பர் மாதம் 31	66
9		பொது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 31 டிசம்பர் 2017	92
10		பொது கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் 31 டிசம்பர் 2017	109

வருடாந்த அறிக்கை

1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்துக்கான பிரதான நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும். குறிப்பிட்ட அனைத்துத் தரப்பினரதும் உதவியுடன் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இந்த நிறுவாகத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.


அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் செயற்படும் நிறுவனமாக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 13வது பிரிவின்படி இந்த நிறுவனம் நிறுவப்பட்டது. தேசிய கொள்கைகளைத் திட்டமிடல் மற்றும் மூலோபாய வழிகாட்டல்கள் தொடர்பான பணி தேசிய சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அதற்கான வழிகாட்டல் வழங்கப்படுகின்றது. பதில் நடவடிக்கைகளுக்கான பொறிமுறைக்கு அப்பால்பட்ட வகையில் சிறந்த அணுகுமுறை ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் புதிய கொள்கைகளுக்கமைய இலங்கையின் ஒட்டுமொத்த அனர்த்த முகாமைத்துவத்தை முழுமையாக உள்வாங்கி அனர்த்த பாதிப்புக்களைக் குறைப்பதற்கான கட்டமைப்பாக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க சட்டம் கருதப்படுகின்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான பணிகளாவன அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், முன் ஆயத்த திட்டமிடல், மக்களுக்கு அறிவூட்டல், பாதிப்புக்குள்ளான மக்களுக்கு முன்னெச்சரிக்கைகளை விடுத்தல், அவசர கால கருமமாற்றல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பிரதான நிறுவனங்களுடன் இணைந்து நிறுவனங்கள் மற்றும் அனர்த்தங்களுக்குப் பின்னரான நடவடிக்கைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஆகியன இடம்பெறுகின்றன. பிரதேச மட்டத்திலான இடர் அபாய நிலைமைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்துவதற்காக மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

1.1 அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ளவாறு, அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையானது 2005ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இது அனர்த்த முகாமைத்துவத்தின் தலைமை நிலையமாகக் காப்படுவதுடன், இது அதிமேதகு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தையும் கௌரவ பிரதமரது உபதலைமைத்துவத்தையும் கொண்டுள்ள உயர் மட்டத்திலான உள்ளக அமைச்சுக்களின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள ஒரு நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் ஏனைய அங்கத்தவர்களாக, சட்டத்தில் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர்கள், மாகாண சபைகளின் முதலமைச்சர் (முதலமைச்சருக்கு பங்கேற்ற முடியாத பட்சத்தில், குறிப்பிட்ட மாகாண சபையின் ஆளுநர்) மற்றும் பாராளுமன்றத்தின் எதிர் கட்சியைச் சேர்ந்த ஐந்து பேரைக் கொண்ட குழுவினர் காணப்படுவர். (குறிப்பு 1.1)

இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கூட்டநடப்பெண்



குறிப்பு : தேசிய சபையின் கூட்டநடப்பெண்

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயத்தின் கீழ் வரும் அனர்த்தங்கள்

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ் வரும் இடர்கள்

- மண்சரிவு
- புயல் காற்று
- வெள்ளம்
- வறட்சி
- கைத்தொழில் அனர்த்தங்கள்
- சுனாமி
- பூமியதிர்ச்சி
- வான் அனர்த்தங்கள்
- கடல்சார் அனர்த்தங்கள்
- தீ
- கொள்ளை நோய்கள்
- வெடிப்புகள்
- வான் தாக்குதல்
- சிவில் அல்லது உள்ளக பிரச்சினைகள்
- இரசாயன விபத்துக்கள்
- கதிர் தொடர்பான அவசர நிலைமைகள்
- உள்ளன மற்றும் கடலில் ஏற்படும் கசிவுகள் உள்ளிட்ட எண்ணெய்க் கசிவுகள்
- அணுசக்தி அனர்த்தங்கள்
- நகர மற்றும் காட்டுத் தீ
- கடலரிப்பு
- மின்னல் தாக்குதல் மற்றும் பலத்த இடியுடன் கூடிய புயல்காற்று

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பாக, பணிப்பாளர் நாயகத்தினது தலைமைத்துவத்தின் கீழ் ஆறு பிரிவுகளைக் கொண்டமைந்துள்ள நாட்டின் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதாகும். இதற்கமைய இது பின்வரும் பிரதான பிரிவுகளைக் கொண்டு காணப்படுகிறது.

1. அனர்த்த தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. முன்ஆயத்தம் மற்றும் திட்டமிடல் பிரிவு
3. பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் பிரிவு
4. அவசர கருமமாற்றல் மற்றும் முன்எச்சரிக்கை பிரிவு
5. மனித வள பிரிவு
6. நிதிப் பிரிவு

இந்த தேசிய பொறுப்பினை நாடு பூராகவும் செயற்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் அனைத்து மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டு, அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையானது வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்தப்படுகின்றது.

2.1 நோக்கு, பணி மற்றும் நோக்கம்

நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமுதாயமொன்றை ஏற்படுத்துவன் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைதல்

புணி

இயற்கை, தொழிநுட்பம் மற்றும் மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை சீராக முகாமைத்துவம் செய்வதன் மூலம் மக்கள் மத்தியிலும் பொதுவாக குடும்ப அலகுகளிலும் பாதுகாப்பான கலாச்சாரமொன்றை கட்டியெழுப்புதல்.

நோக்கம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆகிய நாடளாவிய நிருவாக கட்டமைப்பின் மூலம் பின்வரும் பணிகளை நடைமுறைப்படுத்துதல், மற்றும் மேற்பார்வை செய்தல்.


2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்

- தேசிய கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமொன்றையும், தேசிய அவசர கால திட்டமொன்றையும் வகுத்தல்.
- அனர்த்தங்களை வரைபடங்களில் உள்ளடக்குதல் மற்றும் அனர்த்த பாதிப்புக்களை மதிப்பிடலும்
- பயிற்சி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- முன்ஆயத்த திட்டங்களை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல் உட்பட அனர்த்தங்களின்போதான பதில் நடவடிக்கைகள் மற்றும் முன்ஆயத்தங்களைச் செய்தல்
- முன் அனர்த்த எச்சரிக்கைகளை விடுத்தல் மற்றும் அவற்றை பிரச்சாரம் செய்தல்

- அவசர கால நிலமைகளின்போதான கருமமாற்றல்களை முகாமைத்துதவம் செய்தல் தேடுதல் மற்றும மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- நிவாரணப் பொருட்களை பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட அனர்த்தத்துக்கு பின்னரான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- அனர்த்தங்களைத் தணித்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்
- அனர்த்த ஆபத்துக்களைக்குறைத்தல் மற்றும் அதனை அபிவிருத்திப் பணிகளில் உள்ளடங்குதல்
- காலநிலை மாற்றங்களுடன் இசைந்து செல்லும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- உரிய நேரத்தில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தலும், அனர்த்த பாதிப்புக்களைக் குறைக்கும் பணிகள் தொடர்பாக அமைச்சுக்கள், அரச அதிகாரிகள், தாபனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்
- அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், அது தொடர்பான பதில் நடவடிக்கைகளை அனர்த்தங்களை அனர்த்தங்களின் பின்னர் வழமை நிலமைக்கு கொண்டு வருவதற்காக வெளிநாட்டு நன்கொடைகளை ஒருங்கிணைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

குறிப்பில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களைக் கருத்தில் கொண்டு இந்த நிறுவன கட்டமைப்பானது தயார் செய்யப்பட்டுள்ளது. (2.1)



குறிப்பு 2.1: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாட்குழுவினரின் ஆட்சேர்ப்புக்கள்

2.4.1 பணியாட்குழு ஆட்சேர்ப்பு.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், பணியாட்குழுவினரின் ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளதுடன், வருட இறுதியில் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட மட்டத்தில் காணப்பட்ட வெற்றிடங்களில் 52.5% ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஊழியர்களின் வகை	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	மெய் ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	1	1	0
மேலதிக பணிப்பாளர் நாயகம்	1	1	0
பணிப்பாளர்	6	3	3
உள்ளக கணக்காய்வு	1	1	0
பிரதி பணிப்பாளர்	18	0	18
உதவி பணிப்பாளர்	15	14	1
உதவி பணிப்பாளர்(மாவட்டம்)	25	19	6
கணக்கீட்டு உத்தியோகத்தர்	1	1	0
நிருவாக உத்தியோகத்தர்	1	1	0
பிரத்தியேக உதவியாளர்	1	0	1
விசாரணை உத்தியோகத்தர்	1	0	1
தூர அறிகை / புவியியல் தரவு முறைமை பகுப்பாய்வாளர்	1	1	0
தரவு முறைமை பகுப்பாய்வாளர்	1	1	0
தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்	1	0	1
வலையமைப்பு முறைமை கட்டுப்பாட்டாளர்	1	0	1
நூலக அதிபர்	1	0	1
அபிவிருத்தி உத்தியோகத்தர்	101	1	100
மொழிபெயர்ப்பாளர்	2	0	2
தகவல் தொழிநுட்ப உதவியாளர்	6	6	0
நகர்வு மற்றும் நிலையான கெமரா கலைஞர்	1	1	0
தொலைத்தொடர்பாடல் தொழிநுட்பக்கலைஞர்	3	3	0
வானொலி இயக்குநர்	1	0	1
முகாமைத்துவ உதவியாளர் / அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	201	178	23
சாரதி	39	37	2
அலுவலக உதவியாளர்	35	34	1
மொத்தம்	**465**	**303**	**162**

அட்டவணை 2.1: 2017-12-31 திகதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் காணப்பட்ட ஊழியர் எண்ணிக்கை

பதவி	எண்ணிக்கை
உதவிப்ப பணிப்பாளர் (மாவட்டம்)	01
உதவிப் பணிப்பாளர் (ஊடக மற்றும் வெகுசனத் தொடர்பு)	01
விசாரணை உத்தியோகத்தர்	01
தூர அறிதல்/ புவியியல் தகவல் முறைமை பகுப்பாய்வாளர்	01
தரவு முறைமை பகுப்பாய்வாளர்	01
நூலக அதிபர்	01
முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம்)	
1. தகவல் தொழிநுட்ப உதவியாளர்	06
2. தொடர்பாடல் தொழிநுட்பக் கலைஞர்	03
3. வானொலி இயக்குநர்	01
4. நகர்வு மற்றும் நிலையான கெமரா கலைஞர்	01
முகாமைத்துவ உதவியாளெர் (தொழிநுட்பமல்லாத)	41
சாரதி	02
அலுவலக உதவியாளர்	25

அட்டவணை 2.2: 2017இல் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்புகள்

பதவி	எண்ணிக்கை
வலையமைப்பு முறைமை கட்டுப்பாட்டாளர்	**01**
தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்	**01**
முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத)	**19**

அட்டவணை 2.3: **2017** இல் அனர்த்த முனாமைத்துவ நிலையத்துக்காக புதிதாக உருவாக்கப்பட்ட பதவிகள்

நிலையத்தில் காணப்படும் பணிப்பாளர் பதவிக்கான 03 வெற்றிடங்களில் பணிப்பாளர் (கருமமாற்றல்) பதவிக்காக இலங்கை தரைப்படையில் பிகேடியர் பதவி வகிக்கும் உத்தியோகத்தரொருவர் 02 வருட காலத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் (மனித வள மற்றும் நிருவாகம்) மற்றும் பணிப்பாளர் (நிதி) பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உதவி பணிப்பாளர் பதவியிலான 18 வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள விசேட அங்கீகாரத்தின் மீது குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2017.12.31 ஆந் திகதியிலான பணியாட்குழு பற்றிய தகவல்களின் பிரகாரம், உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) பதவியில் 06 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கேற்ப, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தொட்டைம ற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இலங்கை தரைப்படை மற்றும் வான் படையினால் இணைக்கப்பட்டுள்ள இராணுவ உபகுழுக்களினால் குறிப்பிட்ட அலுவலகங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கேற்ப, குறிப்பிட்ட இராணுவ உபகுழுக்களைச் சேர்ந்த சிரேஸ்ட உத்தியோகத்தரொருவர், உதவி பணிப்பாளர் பதவியில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளமையால், இந்த வெற்றிடங்களில் அக்குறிப்பிட்ட உத்தியோகத்தரகள் கடமையாற்றுகின்றார்கள். 100 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 2017இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இற்கேற்ப இதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயார்

செய்யப்பட்டு, அவற்றை அங்கீகரிக்கும் செயற்பாடுகள் இந்த வருடத்தில் இடம்பெற்றுள்ளன. மிக விரைவில் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமல்லாத) பதவிகள் 19ஐ 2017 இறுதி அரையாண்டில் புதிதாக உருவாக்குவதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், நிறுவனத்தின் சேவையிலிருந்து நீங்கியமையின் காரணமாக ஏற்பட்ட 04 பதவி வெற்றிடங்களும் உள்ளிட்டதாக காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 23ஆகும். இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளதுடன், உள்ளூராட்சி மன்ற தேர்தல் காரணமாக ஆட்சேர்ப்புக்கள் தாமதமடைந்துள்ளன.

ஏனைய வெற்றிடங்களை 2018இல் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டுள்ளன.

தொடர்இலக்கம்	பெறுகைவழங்கல்	பொருட்களின் எண்ணிக்கை	செலவு (ரூ.மி.)
01	குடிநீர் பவுசர்களைக் கொள்வனவு செய்தல்	75	143.99
02	40 **HP** படகு என்ஜின் கொள்வனவு செய்தல்	42	18.48
03	உயிர் பாதுகாப்பு அங்கி கொள்வனவு	2000	7.00
04	சுனாமி தூண் பராமரிப்பு மற்றும திருத்தம்	77	117.17
05	கப்பற் படையினால் விசேட படகுகள் உற்பத்தி செய்யப்படுதல்	24	11.94
06	சாதாரண படகுகளின் கொள்வனவு	100	19.45
07	அங்கூரங்களைக் கொள்வனவு செய்தல்	100	12.40
08	40 **H** படகு என்ஜின் கொள்வனவு	125	100.00
09	அறிவுறுத்துவதற்கான கண்காட்சி தொகுதிகளை தயார் செய்தல்	09	52.25
10	வீடியோ கெமரா, **DSRL** கெமரா மற்றும் மடிக் கணினியைக் கொள்வனவு செய்தல்	01வீதம்	4.34
11	புகைப்பட அச்சிட்டு நடவடிக்கைகளுக்காக கணினியைக் கொள்வனவு செய்தல்	01	0.77
12	பயிற்சி மாதிரி கையேடுகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் பரிவர்த்தனை செய்தல்	06	மொழிபெயர்க்கப்படும் சொற்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கொடுப்பனவு செய்யப்படும்.


அட்டவணை 2.4: **2017** டிசெம்பர் 31ஆந் திகதியிலான பெறுகைகள் நடவடிக்கைகள்

2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு

இந்தப் பிரிவு 25 மாவட்டங்களிலும் அமைந்துள்ளது. இந்த ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகளிலும் பதவியணியானது, உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களை உள்ளடக்கியிருக்கும். மாவட்டம் அனர்த்தங்களுக்கு உள்ளாகக் கூடிய சாத்திய நிலமைக்கேற்ப மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை வேறுபடும். ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்குமிடத்து உதவிப் பணிபாளர்கள் (மாவட்டம்) 25பேர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள் 100பேர், 25 மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் 136பேர் இணைக்கப்பட்டுள்ளனர். களுத்துறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன.

பின்வரும் உருவத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பொறிமுறை காட்டப்பட்டுள்ளது.



குறிப்பு 2.2: மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பொறிமுறை

2.5 2017 வருடத்தில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்தின் கூற்று


2.5.1 அனர்த்த தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் - 2017


i. ஒட்டுமொத்த தாக்கம் - 2017


2017 ஆம் ஆண்டு வெள்ளம், மண்சரிவு, புயல் காற்று, தீ மற்றும் இடி ஆகியவற்றனால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை சுமார் 946,176 ஆகும். வறட்சியால் மாத்திரம் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2,440,290 ஆகும். கடந்த 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மேற்குறிப்பிட்ட பாதிப்புக்கு உட்பட்ட நபர்களில் அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை முறையே 356 மற்றும் 348 ஆகும். மேலும், 2016 உடன் ஒப்பிடுகையில் சேதமடைந்த மற்றும் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கையிலும் கருத்தில் கொள்ளக்கூடிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அனர்த்தம்	வருடம்		
	2015	2016	2017
மரணம் / காணாமல் செய்யப்படுதல்	123	263	509
காயங்கள்	69	70	348
அனர்த்தத்துக்கு உட்பட்வர்களின் எண்ணிக்கை	535744	1533144	3386466
வீடு (இழப்பீடு)	685	952	2679
வீடு (பகுதியளவிலான சேதம்)	6438	7279	46903

அட்டவணை 2.5: அனர்த்தங்களின் ஒட்டுமொத்த தாக்கம்







குறிப்பு :
அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் புள்ளி விபரங்களை முன்வைக்கையில் திரண்ட மொத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணம் - ஒரு நபர் ஒரு வருட காலப்பகுதியில் யாதேனும் அனர்த்தத்தினால் இரண்டு தடவை பாதிக்கப்பட்டாரெனில், மொத்த எண்ணிக்கை 02 எனக் குறிப்பிடப்படும்.


குறிப்பு : மேற்குறிப்பிட்ட குறிப்பு காரணமாக, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இங்கே உள்ளடக்கப்படவில்லை.

ii. வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் - 2017


2017ஆம் ஆண்டில் அதிகளவிலான வீட்டு சேதங்கள் நவம்பர் மாதத்திலேயே அறிக்கையிடப்பட்டுள்ளன. கடும் புயல் காற்று மற்றும் பெருவெள்ளம் காரணமாக அதிகமான சேதம் பதிவாகியுள்ளதுடன், அது 33,639 வீடுகளாகும்.இதில் அதிகளவிலான வீடுகள்

களுத்துறை மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன. அதாவது, கடும் புயல் காற்று காரணமாக 15,729 வீடுகள் சேதமடைந்துள்ளன.

காலி, கொழும்பு மாத்தறை ஆகிய மாவட்டங்களிலிருந்தும் கருத்தில் கொள்ளக்கூடியளவு அதிகளவான வீடுகள் சேதமடைந்துள்ளன.



iii. ஒவ்வொரு அனர்த்தத்தினாலும் சேதமடைந்துள்ள வீடுகள் - 2017




வெள்ளம் காரணமாக கிட்டத்தட்ட 2679 வீடுகள் பாதிப்படைந்ததடன் 46,908 வீடுகள் அழிவடைந்தன.

குறிப்பு 2.3 ஒவ்வொரு அனர்த்த தாக்கத்தினாலும் அழிவடைந்த / சேதமடைந்த வீடுகள்

அனர்த்தம்	2015		2016		2017	
	முழுமையான சேதம்	பகுதியளவிலான சேதம்	முழுமையான சேதம்	பகுதியளவிலான சேதம்	முழுமையான சேதம்	பகுதியளவிலான சேதம்
மண்சரிவு/ மண்படை உடைதல்	48	232	274	2370	325	1569
வெள்ளம்	423	5112	385	2549	1411	11946
இடி	1	31	6	25	2	40
கடும் புயல் / சூறாவளி	122	1007	71	1965	860	33290
மொத்தம்	594	6382	736	6909	2598	46845


குறிப்பு 2.5 ஒவ்வொரு அனர்த்த தாக்கத்தினாலும் அழிவடைந்த / சேதமடைந்த வீடுகள்




iv. மாவட்டங்களுக்கேற்ப இடம்பெற்றுள்ள வீட்டு சேதங்கள்


மாவட்டம்	முழுமையான வீட்டு சேதங்கள்	பகுதியளவிலான சேதங்கள்
அம்பாறை	0	118
அநுராதபுரம்	0	253
பதுள்ளை	42	933
மட்டக்களப்பு	13	76
கொழும்பு	90	4830
காலி	380	8499
கம்பஹ	9	1118
அம்பாந்தொட்டை	96	1005
யாழ்ப்பாணம்	50	263
களுத்துறை	826	16266
கண்டி	11	162
கேகாலை	21	433
கிளிநொச்சி	0	10
குருநாகல்	0	94
மன்னார்	2	15
மாத்தளை	10	385
மாத்தறை	850	8543
மொணறாகலை	12	273
முல்லைத்தீவு	10	52
நுவரெலியா	8	552
பொலன்னறுவை	0	401
புத்தளம்	3	8
இரத்தினபுரி	230	2260
திருகோணமலை	8	197
வவுனியா	8	162
மொத்தம்	**2679**	**46908**

அட்டவணை 2.6: மாவட்டரீதியில் இடம்பெற்றுள்ள முழுமையான மற்றும பகுதியளவிலான வீட்டு சேதங்கள்






மாவடட ரீதியில் பெயரிடுகையில், முழுமையாக சேதமடைந்த வீடுகள் அதிகளவில் மாத்தறையிலிருந்து பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், இது 850 ஆகும். பகுதியளவு சேதங்கள் களுத்துதுறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளதுடன், இது 16,266 ஆகும். களுத்துறை மாவட்டத்தில் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதமானது நவம்பர் மாதம் ஏற்பட்ட கடும் புயல் காரணமாகவும் மாத்தறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பகுதியளவிலான வீட்டு சேதமானது மே மாதம் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாகவும் இடம்பெற்றுள்ளன.




v. உயிரிழப்புகள் / காணமாற்போதல் மற்றும் காயங்கள்

பெருவெள்ளம் காரணமாக மே மாதத்தில் உயிரிழப்புகள மற்றும் காணமற்போனவர்களின் எண்ணிக்கை அதிதகரித்துள்ளது. மண்சரிவு காணரமாக ஏற்பட்டுள்ள அதிகளவிலான உயிரிழநதவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் எண்ணிக்கை இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், மாத்தறை, கொழும்பு, காலி ஆகிய மாவட்டங்களிலும் அனர்த்தங்கள் காரணமாக உயிரிழந்தவர்களினதும் காணாமற்போனரதும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காயத்தில் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை களுத்துறை மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், இதுவும் கடும் புயல் காற்று மற்றும் பெருவெள்ள அனர்த்தம் காரணமாக இடம்பெற்றுள்ளது.



2017 இல் காணமாற்போனரதும் உயிரிழந்தவர்களினதும் எண்ணிக்கை 509ஆகக் காணப்படுவதுடன், இதில் 52% பெருவெள்ளம் காரணமாக இடம்பெற்றுள்ளது. இரண்டாவது அதிகளவிலான உயிரிழப்புக்கள் மண்சரிவு காரணமாக இடம்பெற்றுள்ளது. மண்சரிவு காரணமாக (39%). மின்னல் தாக்குதல், கடும் புயல் காரணமாக இடம்பெற்றுள்ள உயிரிழப்புக்களின் வீதம் 8% ஆகும்.




vi. **மாவட்டரீதியிலான உயிரிழந்தவர்கள், காணமாற்போனோர் மற்றும் காயமடைந்தவர்கள்**

மாவட்டம்	இறப்புகள்	காயங்கள்	காணமற்போதல்கள்	இறப்பு மற்றும் காணாமற்போதல்கள்
அம்பாறை	0	0	0	0
அநுராதபுரம்	0	1	0	0
பதுள்ளை	3	4	0	3
மட்டக்களப்பு	1	18	0	1
கொழும்பு	33	54	0	33
காலி	29	15	13	42
கம்பஹ	5	7	0	5
அம்பாந்தொட்டை	16	15	2	18
யாழ்ப்பாணம்	10	1	0	10
களுத்துறை	82	137	63	145
கண்டி	3	7	1	4
கேகாலை	9	17	6	15
கிளிநொச்சி	2	2	0	2


குருநாகல்	3	0	0	3
மன்னார்	1	2	0	1
மாத்தளை	9	4	0	9
மாத்தறை	45	22	35	80
மொணராகலை	3	2	0	3
முல்லைத்தீவு	5	1	0	5
நுவரெலியா	1	3	0	1
பொலன்னறுவை	3	1	0	3
புத்தளம்	4	0	0	4
இரத்தினபுரி	87	35	33	120
திருகோணமலை	2	0	0	2
வவுனியா	0	0	0	0
மொத்தம்	**356**	**348**	**153**	**153**

அட்டவணை 2.7 மாவட்டரீதியிலான இறப்புகள் / காணாமற்போதல்கள் மற்றும் காயங்கள்



vii. மாவட்டரீதியில் பாதிக்கப்பட்டவர்கள்

மாவட்டம்	பாதிக்கப்பட்ட நபர்கள்
அம்பாறை	57677
அநுராதபுரம்	77068
பதுள்ளை	46982
மட்டக்களப்பு	92592
கொழும்பு	33759
காலி	189103
கம்பஹ	244316
அம்பாந்தொட்டை	29869
யாழ்ப்பாணம்	232443
களுத்துறை	412485
கண்டி	14312
கேகாலை	122914
கிளிநொச்சி	154303
குருநாகல்	261439




மன்னார்	70269
மாத்தளை	93731
மாத்தறை	209756
மொணறாகலை	68709
முல்லைத்தீவு	54586
நுவரெலியா	4148
பொலன்னறுவை	55876
புத்தளம்	243739
இரத்தினபுரி	194260
திருகோணமலை	276333
வவுனியா	145797
மொத்தம்	**3386466**

குறிப்பு :

அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்கள் பற்றிய புள்ளி விபரங்களை முன்வைக்கையில், திரண்ட மொத்தம் காட்டப்பட்டுள்ளது.


உதாரணம்- ஒரு நபர் ஒரு ஏதேனும் அனர்த்தம் காரணமாக இரு தடவை பாதிக்கப்பட்டுள்ளாரெனில், மொத்தம் 02 எனக் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.8 மாவட்டரீதியில் பாதிக்கப்பட்ட நபர்கள்




viii. கடந்த மூன்று வருட கால சுருக்கம்


2015						
Disaster	Deaths & Disappear	Injured	Affected population	Affected families 2015	Houses damaged completely	Houses damaged partially
Flood	16	18	237616	61347	423	5112
Drought	0	0	258096	73242	0	0
Cyclone	3	6	4353	1185	122	1007
Landslide	11	8	1854	478	48	232
Fire	3	3	265	64	66	30
Others	81	18	399	93	16	47
Total	**114**	**53**	**502583**	**136409**	**675**	**6428**



2016						
Disaster	Deaths & Disappear	Injured	Affected population	Affected families 2016	Houses damaged completely	Houses damaged partially
Flood	26	22	448833	110596	385	2549
Drought	0	0	1025839	274242	0	0
Cyclone	5	11	7667	1986	71	1965
Landslide	193	14	42331	11523	274	2370
Fire	4	2	282	70	53	16
Others	33	21	207	53	6	26
Total	**261**	**70**	**1525159**	**398470**	**789**	**6926**



2017						
Disaster	Deaths & Disappear	Injured	Affected population	Affected families 2016	Houses damaged completely	Houses damaged partially
Flood	210	124	676809	174186	1411	11946
Drought	0	0	2440290	667939	0	0
Cyclone	19	87	129122	36277	860	33290
Landslide	158	18	137721	34866	325	1569
Fire	4	7	357	83	19	24
Others	118	112	2049	485	64	78
Total	**509**	**348**	**3386348**	**913836**	**2679**	**46907**



ix. அனர்த்த தாக்கம் பற்றிய சுருக்கம் - 2017

- 2017இல் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள மக்களைக் கொண்ட பிரதேசங்களாக களுத்துறை, கம்பஹ, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களை பெயரிட முடியும்.
- கருத்தில் கொள்ளக் கூடிய அளவிலான பாதிப்புகளை எதிர்கொண்ட ஏனைய பிரதேசங்களாக கேகாலை, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களை பெயரிட முடியும்.
- ஒட்டு மொத்தமாக 2017இல் 19 மாவட்டங்களுக்கு வெள்ளம் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், வறட்சி காரணமாக 21 மாவட்டங்களுக்கு பாதிபபு ஏற்பட்டுள்ளது.
- ஒட்டு மொத்தத்தில் இலங்கையில் மேல் அரைக்கோளம் வறட்சி காரணமாகவும், கீழ் அரைக்கோளம் வெள்ளம் காரணமாகவும் அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ளது.

3 தேசிய ரீதியிலான பிரதான செயற்பாடுகள்

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துதல்

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்தும் பணியானது அனர்த்த முகாத்துவ நிலையத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இத்திருத்தப்பட்ட சட்ட மூலமானது சட்டமா அதிபரின் அங்கீகாரத்துக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

.

3.2 தேசிய அவசர நிலமைகளின்போதான கருமமாற்றும் திட்டம்

தேசிய அவசர நிலமைகளின்போதான கருமமாற்றும் திட்டத்தை உருவாக்கும் தேவைப்பாடு 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க தேசிய அவசர நிலைமைகளின்போதான கருமமாற்றும் திட்டத்தின் மூலம் நாட்டில் அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் தெளிவுபடுத்தப்படுவதுடன், நாட்டில் அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இந்த திட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதுடன், இலங்கையில் ஏற்படும் காலநிலை, நீர், பௌதீக, தொழில்நுட்ப மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களின்போதான பதில் நடவடிக்கைப் பொறிமுறை மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றது இலகுவாகப் பயன்படுத்தும் வகையில் தேசிய அவசர நிலமைகளின்போதான கருமமாற்றும் திட்டம் தொகுப்பு 1 மற்றும் தொகுப்பு 11 மும்மொழிகளிலும் தயார் செய்யப்பட்டன. நாட்டில் அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இந்த திட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதுடன், ஏதேனும் நிறுவனமொன்றின் சாத்தியத்தன்மை மற்றும் நிரந்தர பொறுப்பினை மீறிச் செல்லும் அவசர நிலமையின்போது தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அதற்கான பொறுப்பினைக் கையளிக்கும் பொருட்டு வசதிகளை ஏற்படுத்தும் முன்னறிவிப்பு பொறிமுறையை வலுவூட்டல் அவசர நிலமைகளின் போதான கருமமாற்றல் ஒருங்கிணைப்பு என்பன தேசிய அவசர நிலமைகளின்போதான கருமமாற்றும் திட்டத்தின் 1வது தொகுப்பு மூலம், தாபனப் பொறுப்பு மற்றும் செயலாற்றுகைத் தொகுப்பு 2இலும் விபரிக்கப்பட்டுள்ளது.

மும்மொழிகளிலும் தயார் செய்யபபட்ட அவசர நிலமைகளின்போதான தேசிய கருமமாற்றல் திட்டத்துக்கு அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் அனுமதி பெறப்படும் வரை தொகுப்பு 1 அவசர கருமமாற்றும் கூடத்தினால் முன்னெடுக்கும் பணிகளுக்கு இடைக்கால முகாமைத்துவக் குழுவின் இணக்கப்பாடு வழங்கப்பட்டது.

3.3 நிறுவனரீதியான அனர்த்த முன்ஆய்த்த திட்டம் (IDMP)

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம், நிறுவனரீதியான அனர்த்த முகாமைத்துவ திட்டத்துக்கான ஆலோசனை வழிகாட்டல் தயார் செய்யப்பட்டு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் காணப்படும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு, வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து வழிகாட்டல்கள் தயார் செய்யப்பட்டன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக, பிரதான 10 நிறுவனங்களுக்கு வதிவிட செயலமர்வொன்றை ஏற்பாடு செய்தது, குறிப்பிட்ட வழிகாட்டல்கள் தொடர்பில் நிறுவனரீதியிலான கண்காணிப்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், இறுதி ஆலோசனை வழிகாட்டலானது இடைக்கால முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டு, மீண்டும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் இலங்கை மின்சார சபை, இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறைப்படுத்தல் சபை, சுகாதார அமைச்சு, பொலிஸ் மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கமைய சுகாதார அமைச்சு, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறைப்படுத்தல் ஒழுங்குமுறைப்படுத்தல் சபை ஆகியவை வழிகாட்டல்களை தயார் செய்துள்ளதுடன், ஏனைய நிறுவனங்கள் தயார் செய்து வருகின்றன. இதன் செயற்பாட்டில் குறைபாடுகள் மற்றும் சிக்கல்கள் காணப்படுமாயின் அவற்றை திருத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

3.4 இடைக்கால முகாமைத்துவ குழு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கா அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது தலைமையில், 2017ஆம்

வருடத்தினுள் 11 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ குழுவின் கூட்ட நடப்பபெண்ணானது பின்வருமாறாகும்.

1) செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - தவிசாளர்
2) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு - பிரதிநிதி - அங்கத்தவர்
3) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு - பிரதிநிதி - அங்கத்தவர்
4) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு - பிரதிநிதி - அங்கத்தவர்
5) பணிப்பாளர் நாயகம் - தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு
6) தலைமை கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - அங்கத்தவர்
7) பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - செயலாளர்

3.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியிலான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்களின் கூட்டநடப்பெண்ணானது பின்வருமாறாகும்.

திரு.ஏ.வி.ஜனாதர (தவிசாளர்)	-	பணிப்பாளர், திறைசேரி வரவு - செலவு திணைக்களம், பொதுத்திறைசேரி
திரு.ஜ்.எல்.எஸ்.சேனாதீர (அங்கத்தவர்)	-	பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்
திரு.எச்.யூ,ஆர்.பொன்சேக்கா (அங்கத்தவர்)	-	தலைமை கணக்காளர், அனர்த்த முனாமைத்துவ அமைச்சு
திருமதி.கே.ஏ.சுபந்ரா வல்பொல (அங்கத்தவர்)	-	சிரேஸ்ட உதவி செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு
திருமதி.ஏ.பீ.ஆர்.அமரக்கோன் (அவதானிப்பாளர்)	-	கணக்காய்வு அதிகாரி, கணக்காய்வாளர் திணைக்களம்
திரு.கே.ஏ.நிஷாந்த (அங்கத்தவர்)	-	பிரதி பணிப்பாளர் - நிதி அ.மு.நி.
திரு.ஜே.எச்.பீ.ஜயலத் (அங்கத்தவர்)	-	உள்ளக கணக்காய்வாளர் , ஆ.மு.நி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் மற்றும் நிலையத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளியிடப்படும் கணக்காய்வு மதிப்பீடுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் நிலையத்தின் உள்ளக நிருவாகம் தொடர்பிலான விடயங்கள் இதன்போது பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்கின்றன. மேலும், கணக்காய்வு மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படும் அவதானிப்புகள் தொடர்பில் நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் அளவுசார் மற்றும் கணிம அளவு தொடர்பில் இதன்போது மேலதிக தரவுகள் திரட்டப்படும். பின்னர் இந்த விடயங்கள் குறித்து பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நிலையத்தில் நடாத்தப்படும் பணியாட்குழு கூட்டங்களின்போது இந்த விடயங்கள் தொடர்பிலான தேர்ச்சி குறித்து மீண்டும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்படும். 2017ஆம் ஆண்டுக்கான 04 கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்கள நடத்தப்பட்டு, நிலையத்தின் உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியை முறையாகவும் சரியாகவும் முன்னெடுப்பதற்கு தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.6 தேசிய பாதுகாப்பு தினம்

2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆந் திகதி இடம்பெறும் தேசிய பாதுகாப்பு தினத்தின் நிமித்தம் நாடு பூராகவும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் சர்வமத நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு பொதுமக்களுக்கு இடர் முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் இதில் முக்கிய இடம் பெற்றதுடன், மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் ஊடாக தொழிற்பட்டன. தேசிய நிகழ்ச்சியானது காலி பரூலிய சுனாமி நினைவுத் தூபிக்கு அருகில் மேற்கொள்ளப்பட்டது.

3.7 அவசர நிலமைகளின் போதான பதில் நடவடிக்கைக் குழு

அத்தியவசிய சேவைகளில் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அவசர நிலமைகளின்போது பதில் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பங்காளி நிறுவனங்கள், அனர்த்தங்களின்போது குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து வளங்களைப் பயன்படுத்தக் கூடியதும், அவசர பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் நேரடியாக சம்பந்தப்பட்ட பங்காளி நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக அவசர கருமமாற்றல் பிரிவு இருக்கும். 2017இல் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற இரண்டு பாரிய அனர்த்தங்களின்போது தேவையான உதவி அவசர நிலமைகளின் பதில் நடவடிக்கை குழுவினால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கேற்ப 2017 மே மாதம் இடம்பெற்ற வெள்ளம மற்றும் மண்சரிவு அனர்த்தங்களின்போது உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடுகள் பல நாட்களாக முன்னெடுக்கப்பட்டன.

3.8 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம் www.dmc.gov.lk ஆகும். இதனை இற்றைப்படுத்துதல் மற்றும் பேணும் பணிகள் இப்பிரிவின் பணிகளாகும் என்பதுடன், 2017இல் நிறுவனத்தில் ஏற்பட்ட அனர்த்த சம்பவங்களும் இந்த இணையத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதுடன், சகல அனர்த்தங்கள் தொடர்பான நிலமை அறிக்கைகள் இணையத்தளத்தில் நாளாந்தம் பதிவேற்றம் செய்யப்படும்.

3.9 Desinventra தகவர் களஞ்சியம்

அனர்த்தங்கள் பற்றிய கடந்த அனைத்துத் தரவுகளையும உள்ளடக்கிய தரவு வங்கி www.disinventra.lk சர்வதே வலைப்பின்னலில் இணைக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு சம்பவத்துடனும் சம்பந்தப்பட்ட மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அனர்த்தங்களின் அடிப்படையிலான காலகட்டங்களுக்கமைய உயிரிழப்புக்கள், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் சேதமடைந்த சொத்துக்கள் பற்றிய விபரங்கள் இந்த தகவல் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அவசர நடவடிக்கைப் பிரிவினால் வழங்கப்படும் நிலமை தொடர்பான அறிக்கைகள் மற்றும் காப்புறுதி, சுகாதாரம் போன்ற பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் இந்த தகவல் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ன. 1974-2017 வரையிலான அனர்த்தங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2012,2013,2014,2015.2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளிலான சம்பவங்கள் மற்றும் தரவுகள் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டுக்கான அனர்த்தங்கள் கடலரிப்பு, வறட்சி, தீப்பற்றுதல், வெள்ளம், காட்டுத் தீ, மண்சரிவு, மின்னல் தாக்குதல் மற்றும் கடும் புயல் ஆகிய அனர்த்தங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்டு	சம்வங்கள் (அனர்த்தம்)	தரவுகளின் எண்ணிக்கை
2012	16	512
2013	16	456
2014	13	456
2015	16	719
2016	12	500
2017	186	824

அட்டவணை 3.1 Desinventra தரவுக் களஞ்சியம்

4. அனர்த்தங்களைக் குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கரமான சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அனர்த்த முகாமைத்துவத்துக்கு முன்னுரிமை வழங்கி நிறுவப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்தங்களைக் குறைத்தல், அபிவிருத்தி, ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய கடமைப் பொறுப்பு அனர்த்த பாதிப்புக்களை மதிப்பிடுதல், அனர்த்த ஆபத்துக்களைக் குறைப்பதற்கான வழிமுறையை அபிவிருத்தியின் பிரதான நீரோட்டத்தில் சேர்ப்பதன் மூலம் பாதுகாப்பான இலங்கை மற்றும் நிலையான அபிவிருத்தி என்ற இலக்கை அடைய உள்ளது.

4.1 மாவட்ட அடிப்படையில் அனர்த்தங்களைக் குறைத்தல

2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் சம்பந்தமான தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில், உட்கட்டமைப்பு வசதிகளே பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், உயிரிழப்புக்கள் குறைந்த மட்டத்தில் இருப்பதையும் அவதானிக்க முடிந்ததுடன், உட்கட்டமைப்பு வசதிகள் மீதான பாதிப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன.

(அட்டவணை 4.1)

அனர்த்தங்கள் (சம்பங்கள்)	சம்பங்களின் எண்ணிக்கை(2016)	உயிரிழப்புகள்	வீடுகளுக்கான தேசங்கள் (பகுதி மற்றும் முழுமையானவை)
வெள்ளம்	24	26	2897
வறட்சி	28	0	0
கடும் புயல்	35	4	1897
மண்சரிவு	9	67	2020

அட்டவணை 4.1: **Desinventra**

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட அறிக்கைகளை கருத்தில் கொண்டதன் பின்னர், அனர்த்த தணிப்பு பிரிவானது ரூ. 480 மில்லியனை 2017ஆம் ஆண்டுக்காக பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகரித்துக் கொண்டுள்ளது. (அட்டவணை4.2)

ஆண்டு	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மில்லியன்)
2011	114
2012	122
2013	274
2014	500
2015	500
2016	500
2017	480

அட்டவணை: 4.2 அனர்த்த தணிப்பு பிரிவுக்கு பொதுதிறைசேரியால் வழங்கப்பட்டுள்ள நிதி

2017 இல் ஏற்பட்ட ஒவ்வொரு அனர்த்தங்களையும் கருத்தில் கொள்ளும்போது அந்த அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை கருத்தில் கொண்டு இந்தப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட பணம் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அனர்த்தம்	மாவட்டம்	நிதி ஏற்பாடுகளின் அளவு (ரூ.மில்லியன்)					2017
		2012	2013	2014	2015	2016	
வெள்ளம்	களுத்துறை	-	3	7	10	24	-
	காலி	1	10	8	6.5	9.5	9.174
	மாத்தறை	-	1	-	0.685	-	-
	அம்பாந்தோட்டை	2	96	121	14.6	-	13.038
	புத்தளம்	-	2	17	17.6	35.174	17.671
	இரத்தினபுரி	30	3	1	2.6	52.811	29.133
	குருநாகல்	-	13	9	-	127.561	105.729
	நுவரெலியா	-	3	4	1.9	12.978	21.669
	மாத்தளை	-	10	1	10.1	42	-
	கிளிநொச்சி	6	1	23	-	7.8	24.065
	முல்லைத்தீவு	-	7	-	-	23.5	-
	கேகாலை	-	13	1	8.8	16.3	11.207
	அநுராதபுரம்	4	-	1	8	16.7	3.512

	கொழும்பு	-	-	11	-	-	-
	கம்பஹ	-	-	8	60.2	-	-
	திருகோணமலை	-	-	17	5	2.2	13.455
	பொலன்னறுவை	-	-	14	34.3	33.4	32.547
	பதுள்ளை	-	-	10	-	8.1	2.499
	மட்டக்களப்பு	-	-	4	4.4	5.6	10
	மன்னார்	11	-	26	-	-	6.5
	கண்டி	7	-	23	50	-	6.375
	மொணறாகலை	-	-	10	-	3	-
	வவுனியா	-	-	6	6	17.7	15.731
	யாழ்ப்பாணம்	14	-	-	-	19.9	28.895
	அம்பாறை	-	-	-	6.6	-	-
மொத்தம்		75	**162**	**322**	**247**	**458**	**351.2**
வறட்சி	அம்பாந்தோட்டை	2	25	41	20.8	-	8.200
	புத்தளம்	-	4	-	-	-	-
	கண்டி	-	4	-	-	-	-
	மொணறாகலை	-	2	9	4.4	8.5	10
	வவுனியா	19	7	10	4	3.5	-
	குரநாகலை	-	-	4	78	-	3.926
	திருகோணமலை	-	-	1	2	-	-
	பொலன்னறுவை	-	-	7	-	-	7.603
	அம்பாறை	-	-	5	-	-	9.912
	முல்லைத்தீவு	-	6	-	6.2	-	24
	கிளிநொச்சி	3	-	-	4.7	-	-
	அநுராதபுரம்	-	-	-	4.2	-	6.162
	பதுள்ளை	-	-	-	0.9	-	8.3
	யாழ்ப்பாணம்	-	-	-	30	-	-

	கேகாலை	-	-	-	-	-	4.870
மொத்தம்		23	47	80	155	12	84.032
விலங்குகளின் தாக்குதல்	மாத்தறை	-	-	6	-	-	-
	அம்பாந்தோட்டை	-	-	-	0.6	-	-
மொத்தம்		0	0	6	0.6	0	0
உறுதியற்ற சரிவுகளைப் பலப்படுத்துதல்	கண்டி	0.8	1	-	-	7	7.387
	பதுள்ளை	1	1	6	-	3.9	2.101
	நுவரெலியா	93	6	0.2	-	-	1.5
	மாத்தளை	-	37	-	-	-	-
	கேகாலை	-	-	6	3.8	-	-
	இரத்தினபுரி	-	-	2	3.4	17.688	3,380
	காலி	-	-	-	1.5	-	-
	அம்பாந்தோட்டை	-	-	-	3	-	1.989
	குருநாகல்	-	-	-	-	-	2.032
மொத்தம்		94.8	45	14.2	11.7	28.5	18.389

அட்டவணை 4.3 ஒவ்வொரு அனர்த்தினாலும் ஏற்படும் தேசங்களின் அளவைக் கருத்தில் கொண்டு தணிப்பு பிரிவின் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி

2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியளவில் இக்கருத்திட்டங்களின் ஒட்டுமொத்த பௌதீக தேர்ச்சியானது 98% ஆகவும் முன்னேற்றமானது 81% ஆகவும் காணப்பட்டது. மாவட்ட ரீதியில் 251 அனர்த்த தணிப்பு கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், 2017 டிசெம்பர் 31ஆந் திகதியளவில் 239 கருத்திட்டங்கள் பௌதீகரீதியில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. 12 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. குருநாகல் மாவட்டத்தின் 09 கருத்திட்டங்களும் டிசெம்பர் மாதத்தில் பூர்த்தி செய்யப்படவிட்டிருக்கவில்லை. அம்பாந்தொட்டை, காலி மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்களில் 80% - 90% தேர்ச்சி எட்டப்பட்டுள்ளதுடன், குருநாகல் மாவட்டத்தில் 25% - 40% பௌதீக தேர்ச்சி எட்டப்பட்டுள்ளது. டிசெம்பர் மாதம் 25ஆந் திகதிக்கு பின்னர் முன்வைக்கப்பட்டுள்ள ரூ. 15.2 மில்லியன் பெறுமதியான பற்றுச்சீட்டை செலுத்துவதற்கு போதுமான முற்பணம் இன்மையால் கையிருப்பு பற்றுச்சீட்டாக வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

பணிகள் பூர்த்தி செய்யப்படாத 12 கருத்திட்டங்களுக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





அம்மனமுல்ல, பிபிலதெனிய நீர்க் கருத்திட்டம் - உடுபந்தாவ - குருநாகல்



அதுருவெல பிரிவில் மழையினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அத்துருவெல கல்பீல்ல பாதையை அபிவிருத்தி செய்தல் - நாரம்மல - குருநாகல்



மாஹர போமலுவ வீதியில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் இடத்தில் சிறிய பாலத்தை அமைத்தல் -அஹலியகொட - இரத்தினபுரி

அவசர அனர்த்த தணிப்பு குறுங்கால கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 480 மில்லியன் செலவுத் தலைப்பில் 7.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த நிதியானது ஆபத்தான நிலையற்ற கற்றகை அகற்றுதல், வீடுகள் அல்லது உட்கட்டமைப்பு வசதிகளுக்கு பாதிப்பபை ஏற்படுத்தியவாறு, வீதிகளில் தடையேற்படுத்தியவாறு உருண்டு விழுந்துள்ள மரங்கள் அல்லது மண்ணை அகற்றுதல் மற்றும் பயணங்களுக்கு தடையேற்படுத்தும் சிறிய பாலங்களை புனரமைத்தல், அனர்த்த நிலைமைகளின்போது அந்த அனர்த்தங்களினால் ஏற்படன்கூடிய பாதிப்பை குறைத்துக்கொள்வதற்காக இயந்திதரங்களை வாடகைக்கு பெறுதல் அல்லது எரிபொருள் செலவை ஏற்றல், அணைக்கட்டுக்கள் பாதிக்கபடக்கூடிய சந்தர்ப்பங்களில் அவற்றைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்டுள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்புதல், அனர்த்த தாக்கத்தை குறைப்பதற்கு தேவையான கருவிகள் (மண்வெட்டி, அரிவாள் போன்றன) போன்றவற்றைக் கொள்வனவு செய்அல், கிணறுகளை துப்பரவு செய்வதற்கான பம்பிகளைக் வாடகைக்கு எடுத்தல், தீடீர் அனர்த்தம் காரணமாக தேசமடைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற திடீர் அனர்த்த தணிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. ரூ.2.1 மில்லியன் ரூபாய் தற்போது பின்வரும் முறையில் அனர்த்த தணிப்புக்காக மாவட்ட ரீதியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டம்	வழங்கப்பட்டுள் நிதி (ரூ)
கேகாலை	793,500.00
அநுராதபுரம்	135,069.84
மாத்தறை	8,000.00
நுவரெலியா	13,955.00
புத்தளம்	49,590.00
குருநாகல்	732,183.75
திருகோணமலை	382,760.45
மொத்தம்	**2,115,059.04**

அட்டவணை 4.4 திடீர் அனர்த்தங்களை குறைப்பதற்காக மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி



அவசர நிலைமைகளில் பதிலிருத்தல்



அவசர நிலைமைகளில் பதிலிருத்தல் -திருகோணமலை

4.2 வெள்ள அனர்த்தத்தை தணிக்கும் கருத்திட்டம்

வெள்ள அனர்த்த தணிப்பு கருத்திட்டத்துக்காக இந்த வருடம் ரூ.80மில்லியன் பொதுத்திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்போது களுத்துறை மாவட்டத்துக்கு 2017ஆம் ஆண்டில் ரூ.31மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், களுத்துறை கலமுல்லையிலிருந்து ஆத்தகம வரையில் நீர் வடிந்தோடும் வடிகால் முறைமையை தாபிக்ககும் கருத்திட்டம் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் வெள்ளத் தடுப்பு, பிரதேசத்தில் நீர் தேங்கியிருப்பதன் காரணமாக 111 நோய் பரவுதல் ஆகியன கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கம்பஹ மாவட்டத்தில் வெள்ள கட்டுப்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் வடிகால்கள் துப்பரவு செய்யப்பட்டுள்ளதுடன், கருத்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன்போது 2017ஆம் ஆண்டுக்காக ரூ.8 மில்லியன் நிதித்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் வெள்ள அபாயத்தை தணிக்கும் முகமாக ரூ.41.00 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், நீர்ப்பாசன திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் சிலாபம் நகர சபையுடன் ஒருங்கிணைந்து கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

4.3 சேதம் மற்றும் இழப்பு மதிப்பீட்டு முறைமை (Damage and Loss Assessment System)

உலக வங்கியின் தொழிநுட்ப மற்றும் நிதி அணுசரணையில் ஒவ்வொரு துறையிலும் அனர்த்தங்களினால் ஏற்படும் சேதங்கள் மற்றும் இழப்புகளை துரிதமாக அறிக்கையிடுவதற்கான தரவு முறைமையொன்றை குறிப்பிட்ட துறைகளிலான பங்காளி நிறுவனங்களின் முழுமையான பங்கேற்புடன் தாபிப்பதற்கான கருத்திட்டமொன்றை தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம ஆகியன இணைந்து செயற்படுத்தி வருகின்றன. தற்போது குறிப்பிட்ட தரவு முறைமை தாபிக்கப்பட்டுள்ளதுடன், பங்காளி நிறுவனங்களினது உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், அத்தரவு முறைமையில் தரவுகளை உள்ளீர்த்தல் மற்றும் இற்றைப்படுத்துதல் தொடர்பில் பங்காளி நிறுவன்களது உத்தியோகத்தர்களை பயிற்றுவித்ததன் பின்னர், தரவு முறைமையானது தரவு முறைமையானது பயன்பாட்டுக்காக திறந்துவிடப்படும்.

4.4 72 மணித்தியாலத்தினுள் அனரத்தங்களுக்கு பதிலிருக்கும் செயன்முறை

உலக உணவு திட்டத்தின் தொழிநுட்ப மற்றும் நிதி அணுசரணையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த தேவைகளை உள்ளடக்கிய ஓர் அறிக்கையை 72 மணிநேரத்துக்குள் பெற்றுக்கொள்வதற்கான செயன்முறையை தாபிப்பதற்கான கருத்திட்டமொன்று செயற்படுகின்றது. இக்கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் முக்கிய நோக்கம், குறுகிய காலத்தில் அனர்த்தங்களுக்கு பதிலிருப்பதற்கு தேவையான அடிப்படை தேவைகளை உள்ளடங்கிய ஓர் அறிக்கையை குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் தயார் செய்து பங்காளி நிறுவனங்களுக்கு வழங்குவதாகும்.

5. முன்ஆயத்த திட்டமிடல் பிரிவு

5.1 அறிமுகம்


2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றுக்காக அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயார் செய்தல், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்ஆயத்த திட்டமிடல் பிரிவின் பிரதான கடமைகளில் ஒன்றாகும். வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சுனாமி, சூறாவளி ஆகிய இலங்கையில் அடிக்கடி இடம்பெறும் அனர்த்தங்களுக்கான அனர்த்த முன்ஆயத்தப் பணிகளைத் திட்டமிடுதல் அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பணிகளில் ஒன்றாகும்.

அனர்த்தங்கள் ஏற்படும்போது அது சம்பந்தமான பதில் நடடவடிக்கைகளை எடுப்பதற்காக மாவட்ட அடிப்படையில் பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்காக அதற்கு உதவும் ஆவணமாக அனர்த்த முன்ஆயத்தத் திட்டத்தைக் குறிப்பிடலாம். மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தங்களுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உச்ச நிலையில் உள்ள முகாமைத்துவ நிறுவனம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவாகும். குழுவில் அங்கத்துவம் வகிக்கும் துணைக் குழுக்கள், அவர்களின் கடமைப் பொறுப்புக்கள் எவை என்பது திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிர்வாகப் பிரதேசங்கள் தொடர்பான தகவல்கள், நிலவும் இடங்கள், ஆபத்தான நிலமைகளின் விளைவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஆபத்து நிலமைகள் தொடர்பான மதிப்பீடுகள், பிரதான நிலையம் தொடர்பான மதிப்பீடுகள், பிரதேசத்தில் உள்ள மானிட மற்றும் பௌதீக வளங்கள், அனர்த்த பதில் நடவடிக்கைப் பொறிமுறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் பொறுப்புக்கள் சம்பந்தமான தகவல்கள் இந்தத் திட்டத்தில் உள்ளடங்குகின்றன.

2017 வருடத்துக்கு கிடைக்கப்பெற்ற ரூ. 19.8 மில்லியனைப் பயன்படுத்தி மாவட்ட மட்டத்திலான செயற்பாடுகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுகள் ஊடாக செயற்படுத்தப்பட்டதுடன், நிதித் தேர்ச்சியானது 98% ஆகவும், பௌதீக தேர்ச்சியானது 100% ஆகவும் பதியப்பட்டுள்ளது.


வருடம்	பொதுத்திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி	செலவு
2015	12.00	9.94
2016	12.50	11.11
2017	19.8	19.5

5.1 அட்டவணை - அனர்த்த முன்ஆயத்தத்துக்காக கடந்த வருடங்களில் ஒதுக்கப்பட்ட நிதி




5.1 படம்- அனர்த்த முன்ஆயத்தத்துக்காக கடந்த வருடங்களில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் செலவு

2017ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களின் இடர்களுக்கான முன்ஆயத்த நடவடிக்கைகளை தயார் செய்வதற்காகவும் இது பற்றி மீளாய்வு செய்வதற்காகவும் ரூ.19.8 மில்லியன் நிதித்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. நாட்டின் கொருளாதார நிலைமை மற்றும் இடர்கள் மூலம் மக்களுக்கு ஏற்படும் தாக்கத்தை கருத்தில் கொண்டு மாவட்டங்களுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்ப்படுகின்றன. மாவட்டங்கள் மத்தியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட (5.2 படம்) மற்றும் அதன் பௌதீக மற்றும் நிதித் தேர்ச்ச்சியானது (5.3 படம்) இல் காட்டப்பட்டடுள்ளது.



5.2 படம்- முழு நிதியும் மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது



5.3 படம் - முன்ஆயத்த வேலைத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதித் தேர்ச்சி

மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக இடர் முகாமைத்துவத்தைப் பலப்படுத்தும் முகமாக பல்வேறுபட்ட முன்ஆயத்த வேலைத்திட்டங்களை திட்டமிடுவதற்காக, 2017ஆம் ஆண்டில் முன்ஆயத்த திட்டமிடல் பிரிவினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இடர் முகாமைத்துவ திட்டங்களை அச்சிடுதல் மற்றும் தயார் செய்தல் / மீளாய்வு செய்வதற்காக தரப்பினர்களுக்கான கூட்டம், செயலமர்வுகளுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வாரியாக நிதி வழங்கப்பட்டுள்ளது. சுனாமி வெள்ளம் மற்றும் மண்சரிவு பற்றிய ஒத்திகை நிகழ்ச்சிகளை நடாத்துதல், இடர்களை வரைபடமாக்குதல், அபாய நிலைமைகளை பகுப்பாய்வு செய்தல், கிராமிய மட்டத்தில் இடர் முகாமைத்துவ குழுக்களை தாபித்தல் போன்ற சமூகமட்டத்திலான இடர் பதிலிருப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல், நீர்த்தேங்கங்களினது அணைக்கட்டுகள் சிதைவடைவதற்கான ஒரு உபாயவழிமுறையாக நீர்த்தேங்களினது கீழ் மட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு அவசர சந்தர்ப்பங்களில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமூக பங்கேற்புடனான முன்ஆயத்த திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல் மற்றும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துவதற்காகவும் இப்பிரிவினால் நிதி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

5.2 கிரா உத்தியோகத்தர் பிரிவுவாரியாக சமூக முன்ஆயத்த மற்றும் அவசர நிலைமைகளின்போதான பதிலிருப்பு திட்டங்களை தயார் செய்தல்

கிராமங்களில் காணப்படும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, சமூன அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் அவசர நிலைமைகளின்போதான பதிலிருப்பு திட்டங்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக தயார் செய்யப்பட்டன. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சமூக மட்டத்திலான அனர்த்தங்களை வரைபடமாக்குதல் ஆகியன கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியான திட்டமிடல் செயன்முறையின் பிரதான செயற்பாடாகும். மேலும், சமூக மட்டத்திலான இடர் வரைபடங்களை தயார் செய்தல், பாதுகாப்பான பாதைகள் மற்றும் பாதுகாப்பான இடங்களை அடையாளம் காணுதல், முதலுதவி, உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களை

தாபித்தல் மற்றும் முகாம் முகாமைத்துவம் தொடர்பிலும் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலும் கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக சமூக முன்ஆயத்தம் மற்றும் அவசர நிலைமைகளின்போதான 171 பதிலிருப்பு திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இதன் பௌதீக தேர்ச்சி 97% ஆகும்.



கிராமிய அனர்த்த முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் - அம்பாறை



கிராமிய அனர்த்த முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் - அநுராதபுரம்



கிராமிய அனர்த்த முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் - கொழும்பு



கிராமிய அனர்த்த முன்ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் - மாத்தளை

5.3 தேசிய /மாவட்ட/ பிரதேச மட்டத்திலான ஒத்திகை நிகழ்ச்சிதிட்டங்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டரீதியாக அனர்த்த முகாமைத்துவத்துடன் நேரடியாக தொடர்புடைய உத்தியோகத்தர்களை முதன்மையாகக் கொண்டு, அனர்த்த முன் நிலைமைகள் மற்றும் அனர்த்தத்துக்குப் ˙பின்னரான சந்தர்ப்பங்களில் அவர்களது விடயப்பொறுப்புக்களை இனம் கண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஒத்திகை நிகழ்ச்சிகள்

- தேசிய ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்கள்

  2017ஆம் ஆண்டு 05ஆந் திகதி கொண்டாடப்படும் சர்வதேச சுனாமி விழிப்புணர்வூட்டல் தினத்தை கொண்டாடுதல் மற்றும் சமூகத்தை விழிப்புணர்வூட்டுவதற்காக சுனாமி அனர்த்தத்துக்கு முகம் கொடுக்கும் 17 மாவட்டங்களில் சர்வதேச சுனாமி ஒத்தினை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. (ரூ. 3,460,812.00 (ரூ. 3.4மில்லியன்) செலவு ஏற்பட்டதுடன், இதற்காக 14 மாவட்டங்களில் 29363 பேர் இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் பங்கேற்றனர்)

  சுனாமி பேரழிவின் தாக்கத்துக்கு உட்படும் 14 மாவட்டங்களான கொழும்பு, கம்பஹ, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாறை, அம்பாந்தொட்டை, புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் மாவட்டசெயலாளர்கள், சுனாமி கம்பம் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து

பங்காளி நிறுவனங்களும் இதில் பங்கேற்றனர். இப்பிரதேசங்களில் வாழும் அனைத்து மக்களும் ஊடகம், துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் விளம்பரப் பதாதைகளை காட்சிப்படுத்துவதன் மூலம் அறிவுறுத்தப்பட்டனர். களுத்துறை மாவட்ட செயலகமானது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் தலைமை கருமமாற்றல் கூடகமாகப் பயன்படுத்தப்பட்டது. சுனாமி ஒத்திகை வேலைத்திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். மேற்பார்வையாளர்களால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய, அனர்த்த தொடர்பாடல் நடவடிக்கைகளை செவ்வனே ஏற்பாடு செய்வதற்காக இந்த ஒத்திகை வேலைத்திட்டம் மிக முக்கியமாக அமைத்திருந்தது.



தேசிய மட்டத்திலான சுனாமி ஒத்திகை வேலைத்திட்டம் - கம்பஹ



களுத்துறை மாவட்ட செயலகத்தினது தலைமை கருமமாற்றல் கூடம்

- மாவட்ட ஒத்திகை வேலைத்திட்டங்கள்

I. **பதுள்ளை மாவட்ட மண்சரிவு ஒத்திகை வேலைத்திட்டம்**

மண்சரிவு அபாயத்துக்கு இலக்காகும் பதுள்ளை மாவட்டத்தில் ஒரே தடவையில் 75 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நடாத்தப்பட்ட, மண்சரிவு ஒத்திகை நிகழ்ச்சித்திட்டத்துக்காக ரூ. 810,000.00 வழங்கப்பட்டதுடன், இதில் 6740 பேர் பங்கேற்றனர்.

அனர்த்த பதிலிருப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்பினர்களை அடையாளம் காணுதல், அவர்களது பொறுப்புக்களை அவர்களுக்கு உணர்த்துதல், அவர்கள் மத்தியில் ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துல், அனர்த்த பதிலிருப்பு நடவடிக்கைகளுக்காக மாவட்ட கொள்ளவு மற்றும் பலவீனங்களை அடையாளம் காணுதல், ஆரம்பத்தில் தயார் செய்யப்பட்டுள்ள ஒத்திகை திட்டம் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள பொறிமுறையை பரிசீலித்தல், மாவட்ட செயலக அரச பொறிமுறை மற்றும் மாகாண சபை பொறிமுறைக்கிடையிலான தொடர்பு மற்றும் அரசியல் தலையீடு, அனர்த்த பதிலிருப்பு செயற்பாடுகளின் ஆற்றுப்படுத்துகை, அபாய வலயங்களில் வாழும் மக்களுக்குத் தேவையான அனர்த்த பதிலிருப்பு நடவடிக்கைகளை வினைத்திறனுடையதாக்குதல், அனர்த்த அபாய வலயங்களில் வாழும் மக்கள் மற்றும் வெளிஆட்களுக்கிடையேயான தொடர்புகளை உறுதிப்படுத்துதல், சிறந்த தரமான மற்றும் வினைத்திறனான அனர்த்த பதிலிருப்பு பொறிமுறையொன்றை சகல தரப்பினர்கள் மற்றும் மக்கள் மத்தியில் உறுதிப்படுத்துதல், சமூகத்தினுள் அனர்த்த முன்ஆயத்த கலாச்சாரம் மற்றும் பாதுகாப்பான கலாச்சாரத்தை நோக்கி மக்கறை பழக்கப்படுத்துதல்.

ஒரு பிரதேச செலயகப் பிரிவில் அதிகூடிய மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள 05 கிராம உத்தியோகத்தர் பிரிவு வீதம், 15 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேரந்த 75 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இந்த ஒத்திகை நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றின.






II. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுனாமி ஒத்திகை நிகழ்ச்சி

சுனாமி அனர்த்தத்துக்கு முகம் கொடுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடாத்தப்பட்ட ஒத்திகை நிகழ்ச்சித்திட்டத்துக்கென ரூ. 562,947.00 வழங்கப்பட்டதுடன், இதில் 1500பேர் பங்கேற்றனர்.

ஒக்தோம்பர் 13ஆந் திகதி கொண்டாடப்படும் சர்வதேச அனர்த்த தணிப்பு தினத்தை கொண்டாடும் பொருட்டு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், யாழ்ப்பாண மாவட்ட செயலகம், பொலிஸ், முப்படை மற்றும் ஏனைய பங்காளி நிறுவனங்களினதும் பங்கேற்புடன், பிரதேச செயலகப் பிரிவு வாரியாக சுனாமி ஒத்திகை (Full Scale Drill) நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராச்சி கிழக்குப் பிரதேசமானது சுனாமி மற்றும் சூறாவளியின் தாக்கத்துக்கு உட்படும் பிரதேசமாகக் காணப்படுவதுடன், 2004இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் சுமார் 1200பேர் உயிரிழந்துள்ளனர். இதன்போது அகலுவதற்கான வழி காணப்படாமையே உயிரிழப்புகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. ஆகவே, கிராமிய குழுக்களினால், களப்பின் ஊடாக 1.4 கி.மீற்றர் நீளமான தற்காலிக பாதையொன்று ரூ. 0.78 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. பின்னர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 13 மில்லியன் ரூபா செலவில் அகல்வதற்கான பாதை அமைக்கப்பட்டதுடன், இப்பாதையானது யாழ்ப்பாண மாவட்டத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தையும் இணைத்து அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் வழியாக அனர்த்த முகாமைத்துவ நிலையதின் செய்திகளை மாவட்டங்களை வழங்குதல், பின்னர் பிரதேச செயலாளர், கிராம

உத்தியோகத்தர் வழியாக கிராம மக்களுக்கு செய்தி கிடைப்பதற்கு எடுக்கும் காலம், இதற்கமைய மக்கள் அனர்த்த அபாயம் மிக்க இடங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அகல்வதல் ஆகியன இந்த ஒத்திகை நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் பெறுகிறது.



5.4 கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலான ஒத்திகை நிகழ்ச்சிகள்

2017ஆம் ஆண்டினுள், சுனாமி, பெருவெள்ளம் மற்றும் மண்சரிவு ஆகிய அனர்த்தங்களுக்கு ஆளாகக்கூடிய மாவட்டங்களில் அவசர நிலைகளின்போது மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல் தொடர்டபில் கிராமிய மட்டத்தில் ஒத்திகை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், இதன்போது சுனாமி ஒத்திகை நிகழ்ச்சிகள் 102உம், மண்சரிவு பற்றிய ஒத்திகை நிகழ்ச்சிகள் 93உம், வெள்ளம் பற்றிய ஒத்திகை நிகழ்ச்சிகள் 207உம் நடாத்தப்பட்டன.

	மாவட்டம்	சுனாமி ஒத்திகை நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	வெள்ள ஒத்திகை நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	மண்சரிவு ஒத்திகை நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை
1	கொழும்பு	5	-	1
2	கம்பஹ	8	-	-
3	களுத்துறை	7	2	3
4	மாத்தறை	9	1	1
5	காலி	9	-	1
6	அம்பாந்தோட்டை	11	1	1
7	இரத்தினபுரி	-		1
8	கேகாலை	-		2
9	பதுள்ளை	-		78

10	மொணறாகலை	-	1	1
11	நுவரெலியா	-		2
12	கண்டி	-		1
13	மாத்தளை	-		1
14	புத்தளம்	5	1	
15	குருநாகல்	-		
16	அநுராதபுரம்	-		
17	பொலன்னறுவை	-	1	
18	அம்பாறை	10	1	
19	மட்டக்களப்பு	10	1	
20	திருகோணமலை	8		
21	வவுனியா	-		
22	மன்னார்	3		
23	கிளிநொச்சி	5	2	
24	யாழ்ப்பாணம்	6	1	
25	முல்லைத்தீவு	6		
		102	12	93

அட்டவணை 5.2 - மாவட்டங்களில் நடாத்தப்பட்ட ஒத்திகை நிகழ்ச்சிகள் பற்றிய சுருக்கம்

5.5 பாரிய நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்களை அண்மித்த இடர்கள் தொடர்பிலான முன்ஆயத்த நடவடிக்கைகள்

சூறாவளி அல்லது பூமியதிர்ச்சி ஏற்படுகையில் அணைக்கட்டுக்களை அண்மித்ததாக அனர்தம் ஏற்படக் கூடிய சாத்தியத்தன்மையை கருத்தில் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட பிரதான நீர்த்தேங்கங்களின் அணைக்கட்டுக்களின் தாழ் நிலப் பிரதேசங்களில் வாழும் மக்களின் முன்ஆயத்த இயலுமையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2017ஆம் ஆண்டினுள் தற்போது அணைக்கட்டுக்களை அண்மித்த **05 விழிப்புணர்வூட்டும் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்கள் கண்டி, நுவரெலியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டுள்ளன.** தேடுதல் மற்றும் மீட்பு, முதலுதவி முகாம் முகாமைத்துவம் மற்றும் கிராமங்களின் பாதுகாப்பு ஆகிய நடவடிக்கைகளுக்கான உபகுழுக்களை அமைத்தல், அபாய முன்னெச்சரிக்கை பிரச்சார பொறிமுறையை நிர்மாணித்தல், சமிஞ்ஞை பதாதைகளை அமைத்தல் மற்றும் இறுதியாக பாதுகாப்பான இடங்களை நோக்கி மக்களை அழைத்துச் செல்லுதல் ஆகிய ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் அணைக்கட்டுக்களின் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் அபாயத்துக்கு உட்பட்ட மக்களுக்கான அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த வேலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

5.6 நாட்டினுள் நீரிழ் மூழ்குவதனால் ஏற்படும் உயிரிழப்புக்களை குறைத்தல்

இலங்கையில் நீரில் மூழ்குவதனால் ஏற்படும் உயிரிழப்புக்களானது கடந்த வருடங்களில் அதிகரிப்பினைக் காட்டியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் யாதெனில், அபாயத்துக்கு உட்பட்டுள்ள பிரதேசங்களில் சமிக்ஞை பதாதைகளை அமைத்தல் மற்றும் இதன் மூலம் அபாயம்மிக்க குளம் குட்டைகள் மற்றும் வாவிகளில் குளிக்க வேண்டாமென மக்களை அறிவுறுத்துவதாகும். பதுள்ளை, மாத்தளை, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நீரிழ் மூழ்கும் சமிக்ஞை பாதாதைகள் பொருத்தப்பட்டன. தற்போது 47 சமிக்ஞை பதாதைகள் பொருத்தப்பட்டுள்ளன.

மாவட்டம்	சமிக்ஞை பதாதைகளின் எண்ணிக்கை
பதுள்ளை	02
மாத்தளை	15
யாழ்ப்பாணம்	20
முல்லைத்தீவு	10

அட்டவணை 5.3 ஒவ்வொரு மாவட்டங்களிலும் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை பதாதைகள்

மேலும், அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் கதிர்காமத்திலான திருவிழாக் காலங்களின்போது இடம்பெறும் நீரிழ் மூழ்குவதைக் குறைப்பதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

5.7 வைத்தியசாலை முன்ஆயத்த திட்டத்தை தயார் செய்தல்

வைத்தியசாலை முன்ஆயத்த திட்டத்தை தயார் செய்வதன் முக்கிய நோக்கம், வைத்தியசாலை ஊழியர்களத பாதுகாப்பு, நோயாளர்களது பாதுகாப்பு, அவசர அனர்த்த நிலைமையின்போது வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குதல் மற்றும் அதற்கான பதிலிருப்புகளுக்கான திட்டங்களை தயார் செய்வதாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் வைத்தியசாலை மற்றும் புறுச்சுழலில் இயற்கை அனர்த்தங்கள் காரமணாக ஏற்படும் பாதிப்புக்களை அடையாளம் கண்டு, அவற்றுக்கான வரைபடத்தை தயார் செய்து, அதற்கமைய அத்தகைய அனர்த்தங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அறிவுறுத்துதல் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் பற்றிய தகவல்கள் உள்ளடங்குகின்றன. மாத்தளை, கேகாலை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 03 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

5.8 பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

கல்வி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இணைந்து அனர்த்த அபாயம் மிக்க பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றன. 25 மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 2017இல் 98 நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிதிதிட்டங்கள் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து குறிப்பிட்ட பாடசாலையின் அனர்த்த அபாய வரைபடத்தை தயார் செய்தல், அனர்த்தம் பற்றி அறிவுறுத்துதல் மற்றும் ஒத்தினை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் இதன் நோக்கமாகும்.



பாடசாலை ஆசிரியர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் - அநுராதபுரம்



பாடசாலை பாதுகாப்பு வேலைத்திட்டம் - காலி

5.9 பிரதேச மட்டத்தில் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் சமூக வலுவூட்டல், நலனோம்புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் பற்றிய அமைச்சுடன் ஒருங்கிணைந்து மாவட்ட மட்டம் முதல் கிராமிய மட்டம் வரையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை பலப்படுத்துவதற்காக பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பாதுகாப்பான இடங்களை அடையாளம் காணுதல் அனர்த்த அபாய வரைபடத்தை தயார் செய்து அவசர நிலைமைகளின்போது கிராம மக்களுக்கு அறிவிக்கும் செயன்முறை தயார் செய்யப்படுகின்றது. தற்போது களுத்துறை, காலி, கண்டி, நுவரெலியா, மாத்தளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் பிரதேச மட்டத்திலான 93 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக ரூ. 4,281,271.00 நிதித்தொகை மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2017இல் பிரதேச மட்டத்திலான பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் 93 வேலைத்திட்டங்கள் களுத்துறை, காலி, கண்டி, நுவரெலியா, மாத்தளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

	மாவட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	களுத்துறை	02	220
02	காலி	10	705
03	கண்டி	23	2721
04	நுவரெலியா	07	952
05	மாத்தளை	11	562
06	கேகாலை	11	1833
07	இரத்தினபுரி	29	1235

அட்டவணை 5.4: 2017இல் நடாத்தப்பட்ட பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை



பிரதேச மட்டத்திலான பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் - கேகாலை



பிரதேச மட்டத்திலான பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் -காலி



பிரதேச மட்டத்திலான பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் - களுத்துறை



பிரதேச மட்டத்திலான பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் - மாத்தளை

5.10 பருவப்பெயர்ச்சிக்கான முன்ஆயத்த நிகழ்ச்சித்திட்டம் -தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச



அநுராதபுரம், நொச்சியாகம, பி.செ.பிரிவு



புத்தளம் மா.செயலகம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் தென்மேற்கு மற்றும் வடகீழ் பருவக்காற்று வீசும் காலகட்டங்களில் நாட்டில் ஏற்படும் அதிகூடிய மழைவீழ்ச்சி, கடும் புயல் காற்று ஆகிய நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் பாதிப்புக்கு உட்படும் மாவட்டங்களின், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களை கூட்டி, ஏற்பட்டுள்ள நிலைமைகள் (வெள்ளம், மண்சரிவு, சூறாவளி) தொடர்பில் குறிப்பிட்ட மாவட்டங்களை தயார் செய்தல் இதன் நோக்கமாகும்.

2017ஆம் ஆண்டினுள் பருவப்பெயர்ச்சி முன்ஆயத்த நிகழ்ச்சித்திட்டமானது தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் 25 மாவட்டங்களிலுமாக 72 நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

5.11 தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் 2018 – 2030

ஐக்கிய நாடுகளின் அனர்த்த அபாயங்களைத் தணிப்பதற்கான சென்தாய் சட்டகத்துக்கு ஏற்ப தயார் செய்யப்பட்டுள்ள 2018 – 2030 வரையிலான தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமானது தற்போது வெளியிடப்பட்டுள்ளதுடன், அதன் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் (கருமமாற்றல் பட்டியல்) அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அமைனத்து பங்காளி நிறுவனங்களுக்குமு் பிரேரணைகள் மற்றுமு் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் குறித்த பொறுப்புக்கூறவேண்டிய மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான உத்தியோகத்தர்கள் மற்றுமு் உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், பங்காளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற மற்றுமு் தனியார் துறை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் தொடரின் முடிவில் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரந்த கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள இத்திட்டமானது முழுமையான ஒரு பத்திரமாக பெப்ரவரி மாத இறுதியில் அமைச்சரவை அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்படவுள்ளது.





தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம்- 2018 - 2030

5.12 அவசர பதிலிருப்பு திட்டம்

தேசிய மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள அவசர கருமமாற்றல் நிலையமானது எந்தவொரு அவசர நிலையிலும் வினைத்திறன்மிக்கதாக ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், அதற்கான பதிலிருப்புகளை மேற்கொள்ளுதல் மற்றும் முன்கூட்டிய தேவைப்பாடுகள் குறித்து கவனம் செலுத்தும். இந்த அவசர கருமமாற்றல் நிலையமானது வாரத்தின் 24 மணி நேரம் முழுவதும் செயற்படுவதுடன், இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவத்துக்கான சகல தரவுகளும் தேவையான அனைத்து வளங்களும் ஒருங்கிணைப்படுகின்றன. தேசிய அவசர கருமமாற்றல் திட்டத்தின், கருமமாற்றல் திட்டமாக இத்திட்டங்கள் (பிரதேச மற்றும் தேசிய) என தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இதில் பிரதேச திட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்கி, இது தயார் செய்யப்பட்டுள்ளது. இதன்போது அனர்த்தம் நிகழும் சந்தர்ப்பம் முதல் அதனை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கான வாய்ப்பு இத்திட்டத்தின் வழியாக கிடைக்கப்பெறுகின்றது. கருமமாற்றல் கூடமானது வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரம் முழுவதும் செயற்படும் கட்டுப்பாட்டு அறையினையும் தொடர்பாடல் கருவிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய தொடர்பாடல் அறையினையும் கொண்டுள்ளது.

மேலும், அனர்த்த முகாமைத்துவத்தின் அனைத்து சந்தர்ப்பங்களும் உள்ளடங்குமாறும் இதனுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரதும் விடயப்பொறுப்புக்கள் உள்ளடங்குமாறும்

இத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினுள் குறிப்புகள் மூலம் இச்செயற்பாடுகளின் தரப்படுத்தலும், அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள் வழியாக விபரமான குறிப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளன.இப்பிரதேச திட்டத்தினுள் அனர்த்த நிலைமையொன்றின்போது செயற்படும் அனைத்து தரப்பினரதும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மாற்று தொடர்பாடல் முறைகள் உள்ளடங்குவதுடன், குறிப்பிட்ட தரப்பினருடன் தொடர்புகொள்ளக்கூடிய காலநேரங்களும் குறிப்பிடப்படுகின்றன. இதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சயமற்ற ஓர் உத்தியோகத்தருக்கூட இத்திட்டத்தின் ஊடாக தமது கடமைகளை மிகவும் சிறப்பாகவும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக் கிட்டுகிறது.

இப்பிரதேச திட்டத்தின் வாயிலாக முப்படை மற்றும் பொலிஸாரை ஒருங்கிணைத்தல், முதலாவது நேரச் சாப்பாட்டை வழங்குதல் உள்ளிட்ட முதன்மையான அனர்த்த செயற்பாடுகளுக்கான பாரிய பங்களிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்ததை குறிப்பிட்ட ஒரு காலப இடைவெளியில் இற்றைப்படுத்துதல் கட்டாயமானது என்பதுடன், இதன் மூலம் இந்த நேரடி தரவுகளை ஒரு களஞ்சியமாக பேண முடியும்.

அனைத்து மாவட்டங்களிலுமான அனர்த்த முகாமைத்துவ பிரிவுகள் ஊடாகவும் இங்கு இணைப்புகளில் இற்றைப்படுத்தப்பட்டுள்ள தரவுகளுடன் முழுமை பெறுதல் வேண்டும். இதன் மூலம் மிகவும் சிறப்பான அனர்த்த முகாமைத்துவ செயன்முறையை உருவாக்கி, மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய சிறந்ததொரு இலங்கை உருவாகும்.
2017 செப்டெம்பர் மாத முடிவில், கேகாலை, கொழும்பு, மொணறாகலை, கம்பஹ, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு அச்சிடப்பட்டுள்ளதுடன், எதிர்கால திட்டங்கள் 2018ஆம் ஆண்டினுள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

5.13 உமா ஓயா நானாவித செயற்பாட்டு அபிவிருத்தி கருத்திட்டத்தின் தாக்கத்துக்கு உட்பட்ட பிரதேசங்களை அணிமித்த விசேட அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்





17/2327/704/025/-11 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்துக்கு ஏற்ப, உமா ஓயா நானாவித செயற்பாட்டு அபிவிருத்தி கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தென்மேற்கு 11பருவப்பெயர்ச்சி காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளுக்கு பதிலிருக்கும் முகமாக விசேட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனமானது தொழிநுட்ப நிறுவன உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு அலகாக அமைக்கப்பட்டுள்ளதுடன், இந்த அலகில் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு, பொறியியல் விடயங்கள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகம், புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப்

பணியகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் ஒரு குழுவாகச் செயற்படுகின்றனர். அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக அனர்த்த நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள இப்பொறுப்புகள் முன்ஆயத்த பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், உமா ஓயா நானாவித அபிவிருத்தி உத்தேச திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அல்ல, வெலிமட, பண்டாரவெள ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள 34 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குமான அனர்த்த் முன்ஆயத்த திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.


விசேடமாக, தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காலப்பகுதியில் ஏற்படக்கூடிய மண்சரிவு அபாயத்தின் போதான துரித தலையீடு, முன்னெச்சரிக்கைகள், அறிவுறுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுள்ளன. மேலும், நிலையத்துக்கு கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மற்றும் முறைப்பாடுகளை துரிதமாக அவதானித்து, முன்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுறுத்தும் செயற்பாடுகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும். கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான மண்சரிவு மற்றும் உமா ஓயா நானாவித செயற்பாடுகள் அபிவிருத்தி கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பிலான வரைபடங்களை தயார் செய்தல், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான அவசர கருமமாற்றல் திட்டத்தை தயார் செய்தல், இணையத்தளத்தை தயார் செய்தல் ஆகியன இதன் மூலம் இடம்பெறுகின்றன.

6. அறிவுறுத்தல் மற்றும் பயிற்சிப் பிரிவு

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்தை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் பொறுப்பானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிவுறுத்தல் மற்றும் பயிற்சிக் பிரிவானது நாட்டு மக்களுக்கு அனர்த்தங்கள் குறித்து அறிவுறுத்தும் பயிற்சிகளை வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இதற்கமைய தேசிய மட்டம் முதல் மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு வாரியாகவும், கிராமிய மட்டம் வரையிலும் நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்குமாறு அந்நத மாவட்டங்களில் காணப்படும் அனர்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ற அறிவுறுத்தும் மற்றும் பயிற்சி அளிக்கும் செயற்பாடுகள் 2017ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கேற்ப, பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடான ரூ. 25.2 மில்லியனைப் பயன்படுத்தி 25 மாவட்டங்களிலும் மாவட்ட மட்டத்திலான வேலைத்திட்டங்கள் மாவட்ட அனர்த்த அலகுகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகத்தின் அறிவுறுத்தும் பிரிவினால் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டங்கள் முன்னுரிமைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன.

இதற்கேற்ப, 2017இல் கிடைக்கப்பெற்ற நிதியான ரூ. 25.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டதுடன், அதன் தேர்ச்சியானது 99 % ஆகக் காணப்படுவதுடன் பௌதீக தேர்ச்சியானது 100% ஆக பதியப்பட்டுள்ளது. நிதித் தேர்ச்சியானது பின்வரும் படத்தில் காட்டப்படுகின்றது.



குறிப்பு 6.1: பொதுமக்களை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அறிவுறுத்துவதற்காக கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகளின் தேர்ச்சி

இதற்கேற்ப, 2017இல் முன்னெடுக்கப்பட்ட தேசிய மட்டம் முதல் கிராமிய மட்டம் வரையிலான வேலைத்திட்டங்களினது விபரம் பின்வருமாறாகும்.

6.1 தேசிய மட்டத்திலான பயிற்சி வேலைத்திட்டங்கள்

6.1.1 அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சு ஆகியன இணைந்து இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்துவதற்கான பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சு ஆகியன இணைந்து இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்துவதற்காக சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சின் உத்தியோகத்தர்களை பயிற்சியாளர்களாகப் பயிற்றுவித்து அவர்கள் ஊடாக கிராமத் தலைவர்கள், கிராமிய மட்டத்திலான உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமிய மக்களை அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் பயிற்றுவிப்பதற்கான தேசிய மட்டத்திலான வேலைத்தொடரொன்று நாடு பூராகவும் மாட்ட மட்டத்தில் இரண்டு அமைச்சுக்களினதும் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது.

முக்கியமாக, அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பாக அமைவது, எதிர்காலத்தில முகம் கொடுக்கும் அனைத்து இடர்களையும் வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் முகாமைத்துவம் செய்து, அனர்த்தங்கள் காரணமாக

ஏற்படக்கூடிய உயிர் மற்றும் சொத்து இழப்புக்களை குறைத்துக்கொண்டு நாட்டில் நிலையான அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நிலைநாட்டி வளம்மிக்கதொரு நாட்டை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு நல்குவததாகும். மேலும், சமூக வலுவூட்டல், நலனோம்புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் கீழான சமுர்த்தி இயக்கத்தின் நோக்கமும், மக்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தியவாறு பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார அபிவிருத்தியின் மூலம் வளமானதொரு தேசம், வளமானதொரு சமூகத்தை நாட்டினுள் நிலைநாட்டுவதாகும். ஆகையால், இந்த தேசிய நோக்கத்தை நிறைவேற்றும் நோக்கில் இந்த இரு அமைச்சுக்களும் ஒருங்கிணைந்து இப்பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்தன.

கிராமிய மக்களது பொருளாதார, சமூக மற்றும கலாச்சார பின்னணி குறித்த பரந்த மற்றும் ஆழமான புரிந்துணர்வினைப் போன்றே தரவு மற்றும் தகவல்களை உள்ளடக்கிய தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையிலான பலமான வலையமைப்பொன்றைக் கொண்ட அரச நிறுவனமாகவும் சமுர்த்தி இயக்கத்தை அறிமுகப்படுத்த முடியும். ஆகையால், சமூக வலுவூட்டல், நலனோம்புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் பற்றிய அமைச்சு மற்றும ் மாவட்ட செயலாளரின் கீழ் பணியாற்றும் கிராமிய மட்டத்திலான அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அறிவு மற்றும் பயிற்சியை வழங்கி அதன் ஊடாக கிராமிய மக்களுக்குத் தேவையான அறிவு, புரிந்துணர்வு மற்றும் தலைமைத்துவத்தை வழங்குதல் இந்த இரு அமைச்சுக்களும் ஒருங்கிணைந்து முன்னெடுக்கும் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகிறது. இந்த வேலைத்திட்டங்களை இவ்வாறு முன்னெடுப்பததானது இரு அமைச்சுக்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய சவால்களை வெற்றி கொள்வதற்கு பாரிய உதவியாக அமைவதுடன், இது மாவட்ட நிருவாகத்தை மேற்கொள்வதில் மாவட்ட செயலாளருக்கும் வசதியளிக்கிறது.

அந்தந்த பிரதேசங்களில் காணப்படும் அனர்த்த அபாயம் (Disaster Risk) பற்றிய தகவல்கள் மற்றும் தரவுகள் (Information and Data) தொடர்பில் சமூக வலுவூட்டல், நலனோம்புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் பற்றிய அமைச்சுக்களில் உள்ள பணியாட்குழுவினரை அது தொடர்பில் அறிவுறுத்தி, அவர்கள் ஊடாக தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையில் குறிப்பிட்ட தரப்பினர் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கேற்ப பின்வரும் மாவட்டங்களில் 2017ஆம் ஆண்டில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இதில் சில மாவட்டங்களினது விசேட சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களினது சுருக்கமான விபரம்பின்வருமாறாகும்.

நடாத்தப்பட்ட திகதி	மாவட்டம்	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
-	இரத்தினபுரி	
2017/08/02,03,04,05	கண்டி	197
2017/08/17-18	மாத்தளை	105
2017/08/24-25	கேகாலை	117
2017/08/28-29	பதுள்ளை	92

2017/09/18-19	நுவரெலியா	77
2017/10/12-13	கம்பஹ	116
2017/10/16-17	காலி	219
2017/10/19-20	களுத்துறை	166
2017/10/24-25	புத்தளம்	146
2017 10/31 – /11/01	அநுராதபுரம்	86
2017/11/20-21	மாத்தறை	150
2017/08/23-24	அம்பாந்தோட்டை	157
மொத்தம்		1628

அட்டவணை 6.1: 2017 வருடத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்



ஆரம்பநிகழ்வில் அர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ அநுர பியதர்ஷன யாப்பா



ஆரம்பநிகழ்வில் சமூக வலுவூட்டல் நலனோம்புகை கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்பீ.திசாநாயக்க

இரத்தினபுரி மாவட்டத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்





கண்டி மாவட்டத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்



மாத்தளை மாவட்டத்தில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம்



6.2.2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய இளைஞர் அமைப்புக்கள் இணைந்து செயற்படுத்தும் அனர்த்த முகாமைத்துவ தொண்டர் இளைஞர் அமைப்புக்களை தாபிக்கும் வேலைத்திட்டம் - 2017

தேசிய இளைஞர் அமைப்புக்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியன இணைந்து நாட்டில் காணப்படும் தேசிய தேவையான அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக தேசிய இளைஞர் அணியின் கீழ் பயிற்சி பெறும் இளைஞர்கள் மற்றும் யுவதிகளை பயிற்றுவித்து அனர்த்த முகாமைத்துவ தொண்டர் குழுக்களாக சமூகமயப்படுத்துதல் இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைவதுடன், இது தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நிறுவனங்களுக்கும் இடையில் 2017/09/06கைச்சாத்திடப்பட்டது.

இதற்கேற்ப, தேசிய இளைஞர் அணியின் கீழ் தற்போது நாடு பூராகவும் செயற்படும் 48 பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வரும் சுமார் 16,000 இளைஞர் யுவதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் 03 நாள் பயிற்சி வழங்கி அவர்களை நாட்டின் அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டில் கிராமிய மட்டம், பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட

மட்டத்தில் பங்கேற்கச் செய்யும் செயன்முறையை பலம்மிக்கதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் நிறைவேற்றி தேசிய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவது பிரதான நோக்கமாகும்.

இதன்போது இளைஞர் யுவதிகளுக்கு 03 நாள் பயிற்சி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற இளைஞர் யுவதிகளை அனர்த்த முகாமைத்துவ தொண்டர் இளைஞர் குழுக்களாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 03 மாத கால பதிவுசெய்யப்பட்ட காலப்பகுதியினுள் அவர்களுக்கு தேடுதல் மற்றும் மீட்பு, முதலுதவி மற்றும் முகாம் முகாமைத்துவம் தொடர்பில் 03 நாள் பயிற்சி வேலைத்திட்டத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், உரிய அனைத்து பயிற்சி வேலைத்திட்டங்களையும் பூர்த்தி செய்யும் இளைஞர் யுவதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ தொண்டர் இளைஞர் பணியாளர்களாக பணியாற்றுவதற்கான அடையாள அட்டைகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03 நாள் வேலைத்திட்டத்தின் முதலாவது நாளில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான அடிப்படை கோட்பாடுகள், தீ பாதுகாப்பு பற்றிய அடிப்படை கோட்பாடுகள் மற்றும் கருவிப் பயன்பாடு பற்றிய அடிப்படை அறிவை வழங்குவதற்கும் , இரண்டாவது நாளில், முதலுதவி பற்றிய அடிப்படை கோட்பாடுகள் மற்றும் பிரயோக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், மூன்றாவது நாளில் முகாம் முகாமைத்துவம் பற்றிய அடிப்படை கோட்பாடுகள் மற்றும் பிரயோக செயற்பாடுகள் உள்ளிட்ட வெள்ளம், சுனாமி, மண்சரிவு தொடர்பில் அரச நிறுவனங்கள், கிராமிய மக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த நடத்தையைக் காட்டும் வகையிலான ஒத்திகை பயிற்சிகள் மற்றும் பயிற்சி செயலமர்வின் இறுதியில் சான்றிதழ் வழங்குதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது.

இதன்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான விரிவுரைகளை முன்னெடுப்பதற்கான உரிய வளவாளர்களை ஒருங்கிணைத்தல், பயிற்சி கருவிகளை வழங்குதல், சான்றிதழ்களை வழங்குதல் ஆகிய செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டதுடன், வேலைத்திட்டத்தில் இளைஞர் யுவதிகளை ஒருங்கிணைத்தல், உணவு குடிபானங்களை வழங்குதல் ஆகிய செயற்பாடுகள் தேசிய இளைஞர் அணியின் ஊடாக இடம்பெறுகின்றன. வேலைத்திட்டத்துக்கான வளவாளர்கள் தேசிய நிவாரண சேவைகள் நிலையம், தேசிய செஞ்சிலுவைச் சங்கம், தீயணைப்பு பிரிவு மற்றும் இராணுவ தலைமையகம் ஆகிய நிறுவனங்களிலிருந்து பங்கேற்றார்கள்.


இலக்கம்	மாவட்டம்	பங்கேற்ற இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை
01	கம்பஹ	255
02	களுத்துறை	125
03	கேகாலை	185
04	கண்டி	270
05	மாத்தளை	95
06	இரத்தினபுரி	185
07	அம்பாந்தோட்டை	135
08	காலி	180

09	மொணறாகலை	180
மொத்தம்		**1608**

அட்டவணை 6.2: 2017 ஆண்டில் இளைஞர் தொண்டர் குழு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்ட மாவட்டங்கள்




கம்பஹ மாவட்ட தொண்டர் இளைஞர் குழுக்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள்




களுத்துறை மாவட்ட தொண்டர் இளைஞர் குழுக்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங்கள

- **தேடுதல் மற்றும் மீட்பு வேலைத்திட்டங்கள் - 2017**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கு ஏற்ப, அவசர சந்தர்ப்பங்களில் தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. முக்கியமாக, முப்படை மற்றும் மற்றும் பொலிஸார் இதன்போது முக்கிய பணியாற்றுகின்றார்கள். ஆகையால், அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை பற்றிய பரந்த புரிந்துணர்வு தேடுதல் மற்றும் மீட்பு குழுவுக்கு இருத்தல் வேண்டுமென்பதால், 2017இல் கிடைக்கப்பெற்ற நிதியைப் பயன்படுத்தி தேடுதல் மற்றும் மீட்பு தொடர்பான பயிற்சி திட்டங்கள் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. இதற்கேற்ப, 2017ஆம் ஆண்டில் பின்வரும் தேடுதல் மற்றும் மீட்பு குழுக்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.




தேடுதல் மற்றும் மீட்பு பயிற்சி வேலைத்திட்டங்கள்

தொடர் இலக்கம்	வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்ட இடம்	உள்ளீர்க்கப்பட்ட மாவட்டங்கள்	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை			மொத்தம்
			தரைப் படை	கப்பற் படை	வான் படை	
1	பாதுகாப்பு படை தலைமையகம் - மேற்கு பனாகொடை	கொழும்பு/ கம்பஹ	285	-	-	285
2	58 படையணி - பூஸ்ஸ	காலி/மாத்தறை/களுத்துறை	205	16	15	236
3	கெமுணு ஆளணிப்படை நிலையம் - குருவிட்ட	இரத்தினபுரி/கேகாலை	221	-	-	221
4	பாதுகாப்பு படை தலைமையகம் - யாழ்ப்பாணம்	யாழ்ப்பாணம் / கிளிநொச்சி	257	50	30	337
5	ii படையணி - கண்டி	கண்டி/மாத்தளை/பதுள்ளை	200	-	-	200
வேலைத்திட்டத்தில் பங்கேற்றவர்களின் மொத்த எண்ணிக்கை			**1,168**	**66**	**45**	**1,279**

அட்டவணை 6.3: 2017 இல் இராணுவ தேடுதல் மற்றும் மீட்பு குழுக்களுக்கான அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி



பாதுகாப்பு படை தலைமையகம் -பனாகொடை



58 படையணி - பூஸ்ஸ

- **இலங்கை அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் செயற்படுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்.**

அனர்த்த முகாதைத்துவ பொறிமுறையை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் செயற்படுத்துவதற்காக மவாட்ட மட்டத்தில் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு விழிப்பணர்வூட்டும் செயலமர்வுகள் நாடு பூராகவும் இடம்பெற்றன. அவசர சந்தர்ப்பங்களின்போது ஊடகவியலாளர்கள் ஊடாக மக்களை அறிவுறுத்தல் மற்றம் அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களது பொறுப்புக்கள் மற்றும் விடயப்பொறுப்புகள் தொடர்பில் இச்செயலமர்வின்போது ஊடகவியலாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். முக்கியமாக அனர்த்த நிலைமைகளின்போது மக்களுக்கு சரியான தகவல்களை விரைவாக வழங்குவதன் மூலம் அவர்களது உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக தொடர்பாடலில் காணப்படும் முக்கியத்துவம் மற்றும் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஊடுகவியலாளர்களது பங்களிப்பை வழங்க வேண்டிய வதம் குறித்தும் இச்செயலமர்வில் ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இச்செயலமர்வானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முழுமையான முன்னெடுப்பில் மேற்கொள்ளப்படுவதுடன், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட விடயப் பரப்பு தொடர்பில் அறிவுறுத்தப்பட்டார்கள். இதற்கேற்ப பின்வரும் மாவட்டங்களில் 2017 முதல் இதுவரையில் பிரதேச ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இதில் சில மாவட்டங்களில் விசேட சந்தர்ப்பங்களிலான புகைப்படங்கள் மற்றும் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

தொடர்இலக்கம்	மாவட்டம்	பங்கேற்ற ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை
01	குருநாகல்	84
02	பொலன்னறுவை	36
03	அம்பாறை	67
04	திருகோணமலை	35
05	அநுராதபுரம்	42
06	புத்தளம்	25
07	களுத்துறை	76
08	மாத்தறை	69
09	நுவரெலியா	37

அட்டவணை 6.4: 2017ஆம் ஆண்டில் பிரதேச ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் கருத்திட்டம்



குருநாகல் ஊடகவியலாளர்களை அறிவுறுத்துதல்



அம்பாறை ஊடகவியலாளர்களை அறிவுறுத்துதல்





அநுராதபுரம் ஊடகவியலாளர்களை அறிவுறுத்துதல்

6.2 மாவட்டரீதியிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

2017ஆம் ஆண்டு மாவட்டம், பிரதேசம் மற்றும் கிராமிய மட்டத்திலான வேலைத்திட்டங்கள் மாவட்ட அனர்த்த முகாத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் ஊடாக சகல மாவட்ட அலுவலகங்கள் ஊடாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கேற்ப அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் அனர்த்த அபாயங்களைப் புரிந்துகொண்டு பொதுமக்களை அறிவுறுத்துதல் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

மாவட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களைப் போன்றே அனர்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொழிநுட்ப நிறுவனங்களினதும் பங்கேற்புடன் மாவட்ட மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையில் அனர்த்த அபாயம் மிக்க பிரதேசங்களில் பொதுமக்களினதும் பங்கேற்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களில் அவசர நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான பிரயோக அறிவு மற்றும் புரிந்துணர்வு உள்ளடங்குகின்றது.



அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முதலுதவி பயிற்சி வேலைத்திட்டம்

- **அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவின் கொள்ளவு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்**

பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் பிரிவுக்கு அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை நாடு பூராகவும் வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் தொழிற்படுத்தும் நோக்குடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினருக்காக நவீன தொழிநுட்ப அறிவு, தொழிநுட்ப அறிவு மற்றும் கள அறிவினை பெற்றுக்கொள்வதற்காக 2.5மில்லியன் ரூபாய் பயிற்சி மற்றும் அறிவுறுத்தும் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒழுக்கநெறி நடைமுறை

தொடர்பிலான வதிவிட இரண்டு நாள் பயிற்சி வேலைத்திட்டம் மே மாதம் 05 மற்றும் 06ஆந் திகதிகளில் ஹேக்டர் கொம்பேகடுவ விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

2017ஆம் ஆண்டுக்காக அட்சேர்க்கப்பட்ட புதிய முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் 40பேருக்கான இரண்டு வார கால பயிற்சி வேலைத்திட்டம் நடாத்தப்பட்டது. இப்பயிற்சி வேலைத்திட்டத்தின் விடயப்பரப்பில், அலுவலக செயன்முறை, விடயம் பற்றிய கோட்பாடுரீதியான மற்றும் நடைமுறைரீதியான அறிவு, தீப் பாதுகாப்பு போன்ற நடைமுறைரீதியான வேலைத்திட்டங்களும் உள்ளடங்கியதுடன், களுத்துறை மாவட்டத்தில் மண்சரிவு மற்றும் வெள்ளத்தை முகாமைத்துவம் செய்யும் செயன்முறை தொடர்பில் அறிவுத்தும் செயற்பாடுகளும் கள விஜயங்களும் உள்ளடங்குகின்றன.

மேலும், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளில் கடமையில் ஈடுபடும் உதவி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் 45பேருக்கான வினைத்திறன்மிக்க தொடர்பாடல் (Effective Communications) பற்றிய வேலைத்திட்டமொன்று பிலிமதலாவ கிராம அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் 2017 நவம்பர் மாதம் 21 மற்றும் 22ஆந் திகதிகளில் நடாத்தப்பட்டது. மேலும், கண்டி மாவட்டத்தில் மண்சரிவை குறைப்பதற்கான பிரயோக அறிவை வழங்குவதற்காக கள விஜயமும் மத்திய மாகாணத்தில் வெள்ள முகாமைத்துவபொறிமுறை தொடர்பில் அறிவை வழங்குவதற்காக ரன்தெனிகல / ரன்டெப நீர்த்தேக்கம், மினிப்பே அணைக்கட்டு மற்றும் மகாவெலி கருத்திட்டமும் அவதானிக்கப்பட்டதுடன், இதன்மூலம் இந்த உத்தியோகத்தர்களுக்கு வெள்ள முகாமைத்துவம் பற்றிய பிரயோக அறிவு வழங்கப்படுகின்றது.

மேலும், தலைமை அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளர்கள் 45 பேருக்கான இருநாள் தலைமைத்துவ பயிற்சி வேலைத்திட்டம் மாதுறுஓயா இராணுவ விசேட பயிற்சி மகளீர் பயிற்சிப் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

2017இல் 25மாவட்டங்களுக்கும் ஆட்சேர்க்கப்பட்ட புதிய அலுவலக உதவியாளர்கள் 25பேர், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சகல சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்காக அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடைமுறை பற்றிய ஒருநாள் பயிற்சி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினருக்காக அவர்களது விடயப்பரப்புடன் நேரடியாக தொடர்புபடும் 20 குறுங்கால பாடநெறிகளுக்கும், 2017இல் 7 பயிற்சி செயலமர்வுகளுக்குமு் நிதி வழங்கப்பட்டுள்ளது. பொருளியல் விஞ்ஞானம் பற்றி பட்டப்பின் படிப்பினை பயில்வதற்காக உதவிப் பணிப்பாளரொருவருக்கு நிதி ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் உதவி பணிப்பாளர்கள் 31பேர், அனர்த்த இடர் முகாமைத்துவம் பற்றிய வெளிநாட்டு பயிற்சி, செயலமர்வு, கூட்டங்கள் உள்ளிட்ட 53வேலைத்திட்டங்களில் 2017இல் பங்கேற்றுள்ளார்கள்.




அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்குழுவினரது கொள்ளளவு திறன் அபிவிருத்தி

7. அவசர கருமமாற்றல் நிலையம் (EOC)

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்தவ சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தாபிக்கப்பட்டுள் ளஅவசர கருமமாற்றல் பிரிவானது 24 x 7 மணிநேரம் முழுவதும் இயங்குவதுடன், அனர்த்த நிலைமைகள் வளர்ச்சியடையும் விதம், பதிலிருக்க வேண்டிய மட்டம் ஆகியவற்றை தொடர்ச்சியாக அவதானிக்கும். அனர்த்தத்தின் அளவானது பிரதேச மட்டத்திலான முகவர் நிறுவனங்களினால் கட்டுப்படுத்தக்கூடிய வரையறையைக் கடக்கையில், அவசர கருமமாற்றல் பிரிவு, அவசர பதிலிருப்பு குழுவுடன் இணைந்து தேடுதல்,மீட்பு மற்றும் அபாயத்துக்கு உட்பட்டுள்ள மக்களை அகற்றும் பணிகளின்போது மேலதிக ஒத்துழைப்பை வழங்குகின்றது.

அவசர கருமமாற்றல் நிலையத்தின் ” தயார் நிலையை” தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அவசர அழைப்பு நிலையத்துடன் 24 மணி நேரம் முழுவதும் தொடர்ச்சியாக செயற்படுவதற்குத் தேவையான வளங்களை அதிகரிப்பதன் மூலம் நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.




24 x 7 மணிநேர அவசர கருமமாற்றல் நிலையம்

<u>மீதொட்டமுல்ல திண்மக் கழிவு கொள்கலன் நிலையத்தில் இடம்பெற்ற அனர்த்தம்</u>

அனர்த்தத்துக்கு இலக்கான குடும்பங்களின் எண்ணிக்கை - 418, அனர்த்தத்துக்கு இலக்கான நபர்களின் எண்ணிக்கை -1782, உயிரிழப்புக்கள் -32, காயமடைந்தவர்கள் -11, வீடுகள் - முழுமையாக சேதமடைந்தவை -60, பகுதியளவில் சேதமடைந்தவை- 22 பாதுகாப்பான இடங்கள் - டெரன்ஸ் கல்லூரி - 76 குடும்பங்களைச் சேர்ந்த 284பேர் மற்றும் மக்களது பாதுகாப்பு தொடர்பில் அறிவுறுத்தப்பட்டு மின்சார துண்டிப்பு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டன. கொலன்னாவை பிரதேச செயலாளருடன் இணைந்து பாதுகாப்பான


இடங்களில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் நீர் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிவாரண முகாம்களில் இருந்த மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கு தேசிய நிவாரண சேவைகள் நிலையத்தின் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது.




மீதொட்டமுல்ல திண்மக்கழிவு கொள்கலன் இடத்தில் இடம்பெற்ற அனர்த்தம்




அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ அமைச்சரது தலைமையில் இடம்பெற்ற மீதொட்டமுல்ல திண்மக் கழிவு கொள்கலன் இடத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தின் பதிலிருப்பு கூட்டம்



வெல்லவத்த கட்டிடம் உடைந்து வீழ்ந்த சந்தர்ப்பம்

கொழும்பு மாவட்டத்தில் திபிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், வெல்லவத்தையில் அமைந்துள்ள ஆறு மாடிகளைக் கொண்ட "Excellency" கட்டிடம் உடைந்து வீழ்ந்தது. இந்த அனர்த்தம் காரணமாக இரு நபர்கள் உயிரிழந்தார்கள் என்பதுடன், 23பேர் காயமடைந்து

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். அவசர கருமமாற்றல் பிரிவின் ஒருங்கிணைப்பினால் இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தப்பட்டு அப்பிரதேசத்தில் மின்சாரத்தை துண்டிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், ஆட்களை மீட்டல் மற்றும் அகற்றும் பணிகளுக்காக கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவு, இராணுவம், பொலிஸ் மற்றும் தீயணைப்பு பிரிவுகளை குறிபிபிட்ட இடத்துக்கு ஆற்றுப்படுத்துதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.




வெல்லவத்த கட்டிடம் உடைந்து வீழ்தல்

2017 தென்மேற்கு பருவப்பெயர்ச்சியினால் ஏற்பட்ட மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு

2017 ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 171,433 ஆகும். மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவினால் கோரப்படுகையில் அவசர கருமமாற்றல் பிரிவினால் பொலிஸார் மற்றும் ஆயுதப்படைகளின் ஒத்துழைப்புடன், மீட்பு, மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லுதல் மற்றும் அவசர நிலைமைகளின்போதான நிவாரண கருமமாற்றல் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

2017 மே மாதத்தில் நிலவிய பாதகமான காலநிலையுடன் வெள்ள அனர்த்தம் காரணமாக களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி, காலி, கேகாலை, கம்பஹ, அம்பாந்தோட்டை, கொழும்பு, மாத்தளை, கண்டி வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, நுவரெலியா, புத்தளம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. நிலவிய கடும்ட மழைவீழ்ச்சி காரணமாக களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டன.

உரிய தொழிநுட்ப நிறுவனங்களை அழைத்து பருவப்பெயர்ச்சிக்கான ஆயத்தம் (Monsoon Meeting) மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடி, வளிமண்டலவில் உத்தியோகபூர்வ அறிக்கையின் பிரகாரம் பாதிப்புக்கு இலக்காகக் கூடிய அனைத்து பிரதேசங்கள் குறித்தும் ஊடகம், தொலைபேசி, பெக்ஸ், இணையம் மற்றும் சமூக வலையமைப்புகள் ஊடாக பொதுமக்களை தொடர்ச்சியாக அறிவுறுத்தும் செயற்பாடுகள் (2017 மே 24 முதல்) மேற்கொள்ளப்பட்டன. வெள்ளம் காரணமாக சிக்கியிருந்தவர்களை மீட்பதற்காக படகுகள் மற்றும் மீட்பு குழுக்கள் அமர்த்தப்பட்டதுடன், பெரும்பாலான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தமையின் காரணமாக தரைவழியாக உதவி குழுக்களை அனுப்ப முடியாமையால், மக்களை மீட்பதற்காக உலங்குவானூர்திகளின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்ட முன்கூட்டிய அகல்வதற்கான அறிவித்தல்கள்

பொது ஊடகங்கள், பொலிஸார், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ வலையமைப்பின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுதுடன், இதனால் 90% மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அகன்றதுடன், சுமார்ர 10% மக்கள் வெள்ளத்தில் சிக்கினர். இந்த மக்களைப் பாதுகாப்பதற்கு முப்படை மற்றும் பொலிஸாருடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சானது தொடர்ச்சியான செயற்பாடுகளை மேற்கொண்டது.

மண்சரிவு

பாதகமான காலநிலையின் அதிகரிப்புடன் மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாய நிலைமைகள் இரத்தினபுரி, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றதுடன், இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் பாரிய பல அனர்த்தங்கள் இந்த அனர்த்த காலத்தில் இடம்பெற்றுள்ளன. மண்சரிவு தொடர்பில் இராணுவ தலைமையகம் மற்றும் கட்டளைஅதிகாரி - பாதுகாப்பு படை தலைமையகத்துக்கு (மேற்கு) அறிவித்து தேடுதல மற்றும் மீட்பு பணிகளுக்காக இராணுவ ஆளணியினர் ஈடுபடுத்தப்பட்டார்கள்.




தேடுதல் மற்றும் மீட்பு பணிகள்

தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் காரணமாக 155659 குடும்பங்களைச் சேர்ந்த 603724 பேர் அனர்த்தத்துக்கு இலக்காகினர். இதன்போது 212பேர் உயிரிழந்தனர் என்பதுடன் 152பேர் காயமடைந்து 78பேர் காணாமற்போயுள்ளார்கள். 3038 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், 19924வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 3619 குடும்பங்களைச் சேர்ந்த 13180 பேர் 149 பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்.

7.1 அனர்த்தத்துக்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

- மழைக்காலம் ஆரம்பித்ததும் சகல ஊடகங்களையும் அறிவுறுத்தும் செயற்பாடுகள் 24 மணி நேரம் முழுவதும் தொடர்ச்சியாக இடம்பெற்றன. மேலும், சகல முன்னறிவித்தல்களும் கிடைக்கப்பெற்றதும் உடனடியாக ஊடகங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டன.
- வெள்ளம் மற்றும் மண்சரிவு பற்றிய முன்னறிவித்தல்களுக்காக தொழிநுட்ப தரவுகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெறுவதுடன், இது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அவசர கருமமாற்றல் பிரிவின் ஊடாக முன்னறிவித்தல் முறையினால் பாதிப்புக்கு இலக்காகக்கூடிய மக்களுக்கு வழங்கப்பட்டது. இதன்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னறிவித்தல முறைமை மற்றும் முப்படை, பொலிஸாரின் தொடர்பாடல் வலையமைப்பின் மூலம் இந்த செய்தியானது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.
- களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள், இலங்கை

கப்பற்படை, பொலிஸ், கப்பல் பிரிவுகளின் மூலம் விமானப் படையினையும் ஒருங்கிணைத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். வீடுகளின் மேல் மாடங்களில் பாதுகாப்பாக தங்கியிருந்த மக்களுக்கு தொடரச்சியாக உணவு வழங்கும் செயற்பாடானது கப்பற்படை, விமானப்படை மற்றும் தொண்டர் குழுக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டன. இராணுவம் மற்றும் பொலிஸார் மனித உயிர்களைப் பாதுகாத்தல் மற்றும் நிவாரண சேவைகளுக்கான காலாட்படை நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

- இடம்பெயர்ந்தவர்களுக்கான சமைத்த உணவு, உலர் உணவு, துணி மணிகள், தற்காலின வீடுகள் (Tent) வழங்கப்பட்டதுடன், அவை அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் பங்கிடப்பட்டன.

- அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்ட 180 படகுகள் பயன்படுத்தப்பட்டதுடன், கப்பற்படை, பொலிஸ் மற்றும் தரைப்படைக்குச் சொந்தமான படகுகளும் இதற்காக பயன்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக மீனவர்களுக்கு சொந்தமான படகுகளும் கடற்றொழில் அமைச்சின் ஒருங்கிணைப்புடன் மீனவ சங்கங்கள் ஊடாக 265 படகுகள் மாவட்ட செயலாளர்களின் ஆலோசனையின் பிரகாரம் வாடகைப்பு பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இதற்கான கொடுப்பனவுகள் மாவட்ட செயலகம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டன. அனர்த்த முகாத்துவ நிலையம் 13 படகுகளுக்கு மாத்திரம் பணத்தை கொடுப்பனவு செய்தது.



அவசர கருமமாற்றல் கூடத்திலான விமானப்படை உலங்குவானூர்த்தி தேடுதல் மற்றும் மீட்பு பணிகளின் ஒருங்கிணைப்பு

<u>நாட்டைச் சூழ ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக நிகழ்ந்துள்ள அனர்த்தம்</u>

2017 நவம்பர் மாதம் 29ஆந் திகதி நாட்டைச் சூழ ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக காலி, களுத்துறை, மாத்தறை, மொணறாகலை, அம்பாந்தோட்டை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, பதுள்ளை, கம்பஹ, புத்தளம், கேகாலை, மாத்தளை, குருநாகல், கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் தாழமுக்கத்தினால் பாதிக்கப்பட்டன. இதனால், 36,128 குடும்பங்களைச் சேர்ந்த 128,118பேர் பாதிக்கப்பட்டார்கள். 15பேர் உயிரிழந்ததுடன், 77பேர் காயமடைந்தனர். மேலும், 848 வீடுகள் முழுமையாக சேதமடைந்ததுடன், 33,105 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததுடன், 1421 குடும்பங்களைச் சேர்ந்த 5435 பேர் 66 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.




நாட்டைச்சூழ ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தம்

கடும் புயல்

2017இல் கடும் புயல் வீசிய சம்பவங்கள் 301 இடம்பெற்றுள்ளதுடன், 36,148 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டன. மீட்பு பணிகளை ஒருங்கிணைத்தல், பாதைகளை வெட்டித் துப்பரவு செய்தல், தொடர்பாடல் மற்றும் மின்சார வழங்கலை வழமைக்கு கொண்டு வருதல் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஒத்துழைப்புடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு முடிந்தது. பருவப்பெயர்ச்சி காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர், தமது வீடுகளுக்கு அருகிலான ஆபத்தான மரங்கள் மற்றும் கிளைகளை அகற்றுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையமானது பொதுமக்களை அறிவுறுத்தியது.

காட்டுத் தீ / ஏனைய தீப்பிடித்தல்களின்போது அவசர பதிலிருப்பு செயற்பாடுகள்

2017 ஜனவரி முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் நகரத்தில் 45 தீப்பற்றல் சம்பவங்களும், 66 காட்டுத் தீப்பற்றல் சம்பவங்களும் பதியப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் காணப்படும் வினைத்திறனான தொடர்பாடல் முறைமையைப் பயன்படுத்தி துரிதமாக, பொலிஸார், விமானப்படையினர் மற்றும் இராணுவத்தினரது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு தீயணைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மனிதர்கள், சொத்துக்கள் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய பாரியளவிலான தேசங்களை இதன் மூலம் தவிர்த்துக் கொள்ள முடியும். வன பாதுகாப்பு திணைக்களம் மற்றும் கிராமத்தவர்களது ஒத்துழைப்புடன், இக்காட்டுத் தீகளை கட்டுப்படுத்துவதற்காக இராணுவம், விமானப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளை துரிதமாக ஈடுபடுத்துவதற்கும் இதன் மூலம் முடிகின்றது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள்

2017 ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 21 மாவட்டங்களில் அறிக்கையிடப்பட்ட (திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, அநுராதபுரம், புத்தளம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், இரத்தினபுரி, மொணறாகலை, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, நுவரெலியா, பதுள்ளை, கேகாலை) வறட்சி காரணமாக 667,939 குடும்பங்களைச் சேர்ந்த 2,440,290 நபர்கள் பாதிக்கப்பட்டார்கள். மாசட்ட ஒருங்கிணைப்பு பிரிவினால் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 75 டிரெக்டர் பவுசர்கள் கொள்வனவு செய்யப்பட்டு மக்களுக்கு நீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


வெள்ளம் மற்றும் ஏனைய இடர்கள் பற்றிய அவசர பதிலிருப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான கருவிகளைக் கொள்வனவு செய்தல்

நிறைவேற்று பியஸ்டா மேசை	1	31,250.00
கண்ணாடி கெபினட் புதிய மனைப்பொருள் நிலையம் - அநுராதபுரம்	1	17,000.00
உருக்கு கபட் சனோரா மனைப்பொருள் - அநுராதபுரம்	1	9,500.00
சோபா செட்	1	59,415.00
விருந்தினர்களுக்கான கதிரைகள்	3	30,375.00
கதிரைகள்	1	21,165.00
அலுவலக கதிரைகள்	1	8,041.00
புத்தக மேசை	1	8,890.00
உருக்கு அலுவலக கபட்	1	12,490.00
அலுவலக கபட்	1	11,126.50
உருக்கு அலவலக கபட் ஒன்றிய பொறியில் வேர்க்ஸ்	1	85,000.00
பியேஸ்ரா கதிரைகள் L/B - ECLO1	7	50,190.00

டபள் பங்கர் கட்டில்	5	114,137.50
நான்கு இலாச்சுக்களைக் கொண்ட பயில் கெபினட் (மரத்தாலான)	6	149,445.00
கதிரை கட்டில் 72 x 36 x 60 நிசாக்கோ	2	24,070.00
கட்டில; 72 x 36 DLR plus kihgstar	4	15,280.00
மொத்தம்	**69**	**1,002,839.50**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்- **2017** **உப குறிப்பு 05:01**

குறிப்பு 05 - சொத்து, கிரயம் மற்றும் இயந்திரங்கள

வருடத்தினுள் சேர்க்கப்பட்டுள்ள கணினி கருவிகள்

பொருள்

கணினி மற்றும் கருவிகள்	**அளவு**	**ரூ சதம்**
பிரின்டர்	2	45,800.00
UPS - குறைத்தல் பிரிவு	2	35,900.00
UPS	1	8,497.50
வினைத்திறன்மிகு கணினி	1	776,750.00
பவர் பெங்	1	7,500.00
பெக்ஸ் இயந்திரம் – Brother 2840	1	37,950.00
மொத்தம்	**8**	**912,397.50**

வருடத்தினுள் சேர்க்கப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள

பொருள்

மோட்டார் வாகனம்	**அளவு**	**ரூ சதம்**
டிரெக்டர் மீது காணப்படும் நீர் பவுசர்	75	143,992,500.00
மொத்தம்	**75**	**143,992,500.00**

வருடத்தினுள் சேர்க்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பாடல் கருவிகள்

பொருள்

	அளவு	**ரூ சதம்**
வயர் வோல் முறைமை FG-200 D	1	1,909,643.51
சர்வர் வேர்க் ஸ்டேஷன் HP DL 120 GN –வின்டோஸ் சர்வர் 2016	2	1,308,758.95
மொத்தம்	**3**	**3,218,402.46**

வருடத்தினுள் சேர்க்கப்பட்டுள்ள மென்பொருட்கள்

பொருள்	**அளவு**	**ரூ சதம்**
கணக்கீட்டு மென்பொருள் நவீனமயப்படுத்தல் -2 Accounts Pro-New Modification	1	22,000.00
கூகல் மேல் சொலியூஷன் கூகல் அப்	58	445,945.50
BizPay Payroll System - 2016	1	175,000.00
GIS மென்பொருள் தீர்வு® GIS-2016	1	5,484,093.76
	61	**6,127,093.26**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்- 2017

குறிப்பு 06- கையிருப்பில் உள்ள அனர்த்த பதிலிருப்பு கருவிகள் 2017 2016

பொருள்	அளவு	மொத்த பெறுமதி ரூ சதம்	அளவு	மொத்த பெறுமதி ரூ சதம்
சங்கிலி வாள்	13	964,275.00	72	5,340,600.00
உயிர்பாதுகாப்பு அங்கிகள்	47	164,500.00	-	-
படகு என்ஜின்	30	13,200,000.00	-	-
படகு	38	7,077,800.00	70	12,397,000.00
அ.மு.நி. இனம்காணும் அங்கிகள்	2286	1,131,570.00	-	-
மனுவல் சய்ரன்	2	48,840.00	-	-
மழைமானி	371	1,020,250.00	1000	2,750,000.00
கத்தி	10	6,328.00	-	-
தேடுதல் மற்றும் மீட்பு கயிறுகள்	16	1,349,600.00	132	11,134,200.00
தேடுதல் லைட்	57	105,660.00	30	63,000.00
கட்டுமரன்	10	1,240,000.00	1	134,000.00
கம்பூட்	21	27,039.60	-	-
ஜெனரேட்டர்	1	38,080.00	-	-
அ.மு.நி.இனம்காணும் அங்கிகள்	2000	990,000.00	-	-
மீட்கு கைப்பை	1192	1,966,800.00	-	-
நீர்த் தாங்கி 10001	46	373,244.00	-	-
இறப்பர் கையுறை	236	41,300.00	4000	700,000.00
முகமூடிகள்	1030	153,212.50	4000	540,000.00
கோடாரி STC	-	-	5	3,070.05
உருக்கு சவல் STC	-	-	5	2,686.30
மண்வெட்டி	-	-	5	4,250.00
கம்பூட் STC	-	-	30	59,700.00
மெஹா போன் TC	-	-	1	10,700.00
தோல் கையுறை STC	-	-	30	9,549.30
கத்தி	-	-	280	464,800.00
கண்ணுக்கான கோகல்ஸ்	-	-	550	232,375.00
A முறைமை- அ.மு.நி. A2120 H	-	-	55	7,154,618.90
மழைஅங்கிகள்	374	576,334.00	2000	3,082,000.00
கையால் இயக்க வாள்கள்	-	-	5	8,850.00
நீர் மோட்டார் BGVSP 2 SP	5	155,400.00	-	-
படகு - ஏனைய - இலங்கை கடற்படை	24	11,939,592.75	-	-
மொத்த பெறுமதி		**42,569,825.85**		**44,091,399.55**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்- **2017**	2017 **ரூ சதம்**	2016 **ரூ சதம்**
குறிப்பு 07- பொருட் பட்டியல்		
காகிதாகிகள்	345,861.24	2,054,545.00
கணினி டோனர் மற்றும் காட்ரிஜ்	4,447,710.00	11,796,485.00
துண்டுப் பிரசுரங்கள்	756,250.00	807,000.00
கைநூர்ல்	1,529,420.00	3,825,367.00
வாகனங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்	782,880.90	3,805,001.70
ஏனைய	77,000.00	779,906.73
மொத்தம்	7,939,122.14	**23,068,305.43**
	-	
குறிப்பு 08 - முற்கொடுப்பணவு மற்றும் முற்பணம	**ரூ சதம்**	**ரூ சதம்**
முற்பணம் - வைபவம்	107,000.02	175,750.02
முற்பணம் - முத்திரை	-	19,788.85
முற்பணக்கொடுப்பனவு	2,252,158.87	7,910,812.50
அ.மு.அ. உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்ட அலுவலகத்துக்கான முற்பணக் கொடுப்பனவு	100,000.00	-
முற்பணக் கொடுப்பனவு - நிதி தலைமை அலுவலகம்	47,659.30	67,324.35
முற்பணக் கொடுப்பனவு - சேவைகள் மற்றும் பராமரிப்பு தலைமை அலுவலகம்	11,666.75	-
முற்பணக்கொடுப்பனவு - நிதி மாவட்டம்	-	588,463.84
முற்பணக்கொடுப்பனவு - முன்ஆயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு	**7,590.00**	200,165.53
முற்பணக்கொடுப்பனவு - மாவட்ட பயிற்சி மற்றும் திட்டமிடல்	6,175.88	98,943.20
முற்பணக்கொடுப்பனவு - எரிபொருள் - மாவட்டம்	**118,213.34**	222,763.34
முற்பணக்கொடுப்பனவு - சேவைகள் மற்றும் பராமரிப்பு - மாவட்டம்	-	22,984.00
	2,650,464.16	**9,306,995.63**
குறிப்பு 09 - வைப்பு மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவை	**ரூ சதம்**	**ரூ சதம்**
டொங்கல் மீதான வைப்பு	3,000.00	3,000.00
வைப்பு - இலங்கை மின்சார சபை	1,108,500.00	1,108,500.00
வைப்பு - நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு	51,500.00	51,500.00
ஏனைய கிடைக்க வேண்டியவை	450,509.55	490,509.55
	1,613,509.55	**1,653,509.55**

குறிப்பு 10- காசு மற்றும் காசுக்கு சமனானவை	**ரூ சதம்**	**ரூ சதம்**
இலங்கை வங்கி - 2744646	10,224,766.82	30,353,922.06
கையிருப்பு	10,224,766.82	30,353,922.06

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்- **2017** குறிப்பு 11 - மூலதன வழங்கல் மீதான முதலீடு	**2017** **ரூ சதம்**	**2016** **ரூ சதம்**
மூலதனச் செலவு		
இயலளவு அபிவிருத்தி - பணியாட்குழு பயிற்சி	2,126,521.03	2,472,535.44
மாவட்டங்களில் நடுத்தர அனர்த்தங்களைக் குறைப்பதற்கான கருத்திட்டம்	370,893,723.18	558,548,530.26
திடீர் வெள்ளங்களின்போது கருவிகளைக் கொள்ளவனவு செய்தல்	51,811,941.45	27,774,077.00
முன்ஆயத்த திட்டமிடல், அரச முகவல் நிறுவனங்களுக்கான ஒத்துழைப்பு	19,421,748.84	11,349,750.88
அனர்த்த முன்ஆயத்தம் மற்றும் முகாமைத்துவம் பற்றிய அறிவூட்டல்	12,016,631.10	11,964,515.10
வெள்ள தணிப்பு தொடர்பான வேலைத்திட்டம்	47,159,752.87	-
இலங்கையில் பல்இடர் தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள்	205,200.00	5,806,862.26
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - கையகப்படுத்தல் மற்றும் ஏனையவை	-	-
கட்டிடம் மற்றும் மாதிரி - பயிற்சி நிலையம்	-	-
டிரெக்டர் பவுசர் மற்றும் படகுகளைக் கொள்வனவு செய்தல்	401,333.15	
மூலதன வழங்கல் மீதான தேறிய முதலீடு	**504,036,851.62**	**617,916,270.94**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்- 2017

குறிப்பு 12 - ஏனைய அமைப்புக்களிடமிருந்தான வழங்கல்கள்

	2017 ரூ சதம்	2016 ரூ சதம்
UNDP	966,420.00	966,420.00
ADPC	265,242.30	265,242.30
CSE	234,493.31	234,493.31
தகவல் தொழிநுட்பம்சார் கொள்வனவுகள் A/C	37,795.22	37,795.22
உலக சுகாதார தாபனம் - WHO	168,234.44	37,547.41
தேசத்திற்கு மகுடம் மீதான அனர்த்த முகாமைத்துவ அமைச்சு	120,672.92	120,672.92
UNHABITAT படிமுறை II	86,144.48	86,144.48
NEOP இற்கான UNDP	4,953.22	4,953.22
ADPC பாதுகாப்பு தினம்	32,724.85	32,724.85
வேலைத்திட்டங்களுக்கான SAARC	1,755,917.10	1,755,917.10
மீரியபெந்த வீட்டுக்கருத்திட்டம் China CAMC Engineering Co, Ltd	-	1,000,000.00
IDM இற்கான UNDP	1,103,600.00	1,103,600.00
RSSDP இற்கான UNDP	159,930.20	159,930.20
SFDRR இற்கான UNDP	981,418.49	981,418.49
DOSEG இற்கான UNDP	667,848.00	667,848.00
அனர்த்த தணிப்பை உள்ளூராட்சி மட்டத்துக்கு கொண்டுபோதல் UNDP	1,000,000.00	1,000,000.00
NDMP இற்கான UNDP	4,583.43	-
அ.மு.அ. உமா ஓயா கருத்திட்ட அலுவலகம்	2,517,760.18	-
	10,107,738.14	**8,454,707.50**

அனர்த்த முகாமைத்துவ நிலையம்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்- 2017

குறிப்பு 13- ஓய்வூதிய நன்மைகளின் பொறுப்புக்கள்	2017 ரூ சதம்	2016 ரூ சதம்
2017 ஜனவரி 01இற்கான மீதி	**23,408,696.82**	21,174,185.63
வருடத்துக்கான நிதி ஏற்பாடு	5,174,589.16	2,823,545.69
கொடுப்பனவு	154,579.50	589,034.50
2017 டிசெம்பர் 31ஆம் திகதிக்கான மீதி	**28,428,706.48**	**23,408,696.82**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு அவர்கள் அந்த அமைச்சில் பணியாற்றிய வருடங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு வருடத்தினதும் நிதி ஆண்டினுள் இறுதி மாதத்தில் பெற்ற சம்பளத்தின் அரைவாசியைக் கணிப்பீடு செய்து, செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடையைச் செலுத்துவதற்காக 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது 1111 பொறுப்புவிලමිවෙ වගකීම් கீழ் குறிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஏற்பாட்டுக்கு வெளி நிதியங்களிடமிருந்தான கிடைப்பனவுகள் அல்லது ஆயுட்காலம் கணிப்பிடப்படுவதில்லை.

இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் 19இற்கு ஏற்ப- இலங்கை பட்டய கணக்காளரது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள பணியாளர் நன்மை நியமங்களுக்கு ஏற்ப அதன் 57வது பந்தி மற்றும் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானக் காரணிகளில் , நிறுவனத்தின் ஓய்வூதிய நன்மைகளை தயார் செய்வதற்கான ஏதுக்கள் காட்டப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட ஒரு நிவனத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 100ஐ விஞ்சுமிடத்து ஈ அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும். அத்தியாயம் டி (2) இல் பொருள் விற்பனையில் ஈடுபடும் அல்லது சேவை வழங்கலில் ஈடுபடுமுட் அரச கூட்டுத்தாபனங்களாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்- 2017

குறிப்பு 14 - ஏனைய செலுத்த வேண்டியவை	2017 ரூ சதம்	2016 ரூ சதம்.
செலுத்த வேண்டிய ஊ.சே.நி.	2,243,424.89	-
செலுத்த வேண்டிய ஊ.சே.நிதி	336,513.73	-
செலுத்த வேண்டிய உழைக்கும்போதான மற்றும் SRL	9,750.00	-
கேள்விப்த்திர வைப்பு - மீள்செலுத்தப்படும்	-	123,800.00
செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு	-	23,020.00
செலுத்த வேண்டிய முற்பணக்கொடுப்பனவு	1,924,399.31	489,335.75
செலுத்த வேண்டிய போக்குவரத்து செலவு	917,176.26	195,415.00
செலுத்த வேண்டிய எரிபொருள் செலவு	63,290.00	
செலுத்த வேண்டிய வாகன பராமரிப்பு செலவு	158,586.82	
செலுத்த வேண்டிய கிரயம், இயந்திரம் மற்றும் ஏனைய கருவிகளின் பராமரிப்பு	1,895,639.55	
செலுத்த வேண்டிய வாடகை மற்றும் உள்நாட்டு வரி	145,921.30	
செலுத்த வேண்டிய தபால் மற்றும் தொலைதொடர்பாடல்	74,500.00	
செலுத்த வேண்டிய இலத்திரனியல் மற்றும் நீர்	2,974,847.60	
செலுத்த வேண்டிய ஏனைய சேவைகள்	1,045,142.22	
செலுத்த வேண்டிய தணிப்பு கருத்திட்டங்கள்	-	
செலுத்த வேண்டிய காப்புறுதி	22,123,430.21	-
செலுத்த வேண்டிய விளம்பர அறிவித்தல் செயற்பாடுகள்	342,485.62	-
செலுத்த வேண்டிய பாதுகாப்பு சேவைகள்	203,371.75	-
செலுத்த வேண்டிய துப்பரவேற்பாட்டு சேவைகள்	448,027.42	104,348.12
இலங்கை அரச வணிக கூட்டுத்தாபனம்	121,778.24	121,333.04
	5,160.00	-
	35,033,444.92	**5,450,101.19**

குறிப்பு 15 - ஏனைய நிதி ஏற்பாடுகள்	ரூ சதம்	ரூ சதம்
கையிருப்பு இழத்தல் மீதான கொள்கைகள்	206,011.56	206,011.56
	206,011.56	**206,011.56**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. } டீஎம்ஜீ/ஏ/டீஎம்சீ/1/17/13

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2018 அக்தோபர் 16

பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14 (2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவுகள் முகாமைத்துவ சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2 நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டு பெறுமதி ரூபா 29,091,561 தொகைக்கான 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத அனர்த்தங்களை குறைக்கும் 12 செயற்திட்டங்களுக்காக 04 மாவட்ட செயலகங்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 9,185,679 இற்கான தொகை, நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டுவதற்கு பதிலாக ஆதனங்கள், பொறித்தொகுதிகள் உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் ஒதுக்கங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 308,559,783 தொகைக்கான திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த மூலதன மானிய மீதி, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் ரூபா 675,361,071 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது.

2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 2,060,785 தொகை மதிப்பீட்டு பெறுமதியான கொண்ட ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெல்ஜியம் வீடமைப்பு முறைமையின் ஒரு பகுதியில் வடிகால் முறையில் திருத்த வேலைகள் மற்றும் தேவையான இடங்களில் மதகுகள் நிர்மாணிக்கும் 2 வேலை விடயங்கள் தொடர்பாக உரிய விரிவான மொத்த திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்களுடன் தொடர்பு		இணக்கமின்மைகள்
(அ)	2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் பந்தி 5	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்தம் குறைந்தளவு முகாமைத்துவ சபையின் கூட்டங்கள் 04 தடவைகள் கூட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 02 தடவைகள் மாத்திரம் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.
(ஆ)	ஆரச பெறுகை வழிகாட்டல் கோவை	
	(i) வழிகாட்டல் 3.4.3	நிலையத்தின் பெறுகைகள் அலுவல்களுக்காக வழங்குனர்கள் பதிவு செய்தல் தொடர்பாக பெறுகைகள் வழிகாட்டல்கள் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
	(ii) வழிகாட்டல் 5.3.11(அ)	ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட ரூபா 23,228,675 மதிப்பீட்டு பெறுமதியான 09 அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களுக்காக விலைமனு பாதுகாப்பு பிணைமுறி சமர்பித்திருக்கவில்லை.
(இ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 104(3)	2015 முதல் 2018 மே 30 திகதி வரை இடம் பெற்ற 17 வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை அனுப்பியிருக்கவில்லை.

(ஈ)	நிலையத்தினால் வழங்கப்பட்டிருந்த 2017/01 ஆம் இலக்க 2017 பெப்ரவரி 21 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி	செயற்திட்டமொன்று தெரிவு செய்யும் போது பொது மக்களின் எதிர்புக்கள் குறைவாக இருக்கக் கூடியவிதமாக மற்றும் அடிக்கடி திருத்தங்கள் மேற்கொள்வதற்கு தேவைப்படாத செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் எனினும், மதிப்பீட்டு பெறுமதி ரூபா 85,213,525 தொகைக்கான 8 மாவட்டங்களில் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த 16 செயற்திட்டங்கள் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக 2017 ஆண்டில் செயற்படுத்தி இருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிலையத்தின் செயற்பாட்டு அலுவல்களின் விளைவுகள் ரூபா 62,963,156 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,159,474 தொகையாக காணப்படாமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகளின் ரூபா 56,803,682 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டிற்கான வருமானம் ரூபா 77,935,871 தொகை இனால் அதிகரித்திருந்த போதிலும் செலவு ரூபா 138,275,300 இனால் அதிகரித்தல் இந்த வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 9,452,720 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், 2014 ஆண்டின் போது ரூபா 2,616,061 இற்கான மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன், மீண்டும் 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது முறையே ரூபா 12,255,473 , ரூபா 6,159,474 , ரூபா 62,963,156 பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 274,159,353 தொகையான பங்களிப்பு 2014 ஆண்டின் போது வளர்ச்சியடைந்து 2015 ஆண்டின் போது வீழ்ச்சி ஒன்றிற்கு ஆளாகியிருந்த போதிலும் மீண்டும் 2016 ஆண்டு முதல் வளர்ச்சி அடைந்து 2017 ஆண்டின் போது ரூபா 261,166,505 தொகை ஆகியிருந்தது.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் திருத்த அலுவல்கள் 2008 ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், 2017 திசெம்பர் 31 திகதி வரை உரிய திருத்தங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை பேரழிவு முகாமைத்துவ சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்தின் 2(அ) வின் பிரகாரம் நிலையத்தினால் தேசிய இடர் முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 2017 ஆண்டின் போது ரூபா 2 மில்லியன் நிலையத்திற்கு வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் 2018 – 2030 வரையான காலப்பகுதிகளுக்காக புதிய திட்டமொன்று தயாரித்தல் 2017 மார்ச் 07 திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அவ் அலுவல்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செந்தாய் சட்டகத்தின் பிரகாரம் அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் திட்டமொன்று தயாரிப்பதற்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 2015 ஆண்டின் போது நிலையத்திற்கு வழங்கியிருந்த ரூபா 1,300,000 இற்கான தொகையில் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் நிலையத்தினால் ரூபா 318,582 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. மேற்கூறிய திட்டத்தை தயாரிக்கும் அலுவல்கள் அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டுமென நிலையத்தினால் கடந்த ஆண்டு கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும் அமைச்சினால் அவ்வாறான திட்டமொன்று தயாரிப்பதற்காக 2017 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

நிலையத்தின் அனர்த்தங்கள் குறைக்கும் செயற்திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமை காரணமாக கொழும்பு, கம்பஹா மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முறையே 1,095 தொகை, 10,408 தொகை மற்றும் 4,596 தொகை ஆக காணப்பட்டதுடன், 2016 ஆண்டின் போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை முறையே 255,188 தொகை, 138,045 தொகை மற்றும் 6,583 தொகையாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த மாவட்டங்களில் வெள்ள அனர்த்தம், ஆபத்தினை சரியான முறையில் பெறுமதி மதிப்பீடு செய்திருக்காமையால், 2017 ஆண்டிற்காக அம்மாவட்டங்களுக்கான பணம் ஏதும் ஏற்பாடு செய்திருக்கவில்லை.
மேலும், மேற்கூறிய மாவட்டங்களுக்கு ஒப்பாக குருநாகல் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் அதாவது 2015 ஆண்டில் 556, 2016 இல் 12,048 தொகைகளில் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது வெள்ள அனர்த்தை குறைத்தல் தொடர்பாக ரூபா 354,434,069 இற்கான ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தியிருந்த 176 செயற்திட்டங்களில் 87 செயற்திட்டங்கள் அதாவது, மொத்த செயற்திட்ட எண்ணிக்கையில் 49 சதவீதத்திற்காக மொத்த ஏற்பாடுகளில் 21 சதவீதம் அதாவது, ரூபா 73,913,285 தொகை செலவிடப்பட்டு குருநாகல் மாவட்டத்தில் செயற்படுத்தியிருந்தது. அவ்வாறாயினும், கூடுதலான எண்ணிக்கையானவர்கள் பாதிக்கப்பட்ட காலி, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் 2.5 சதவீதம் முதல் 8 சதவீதம் எண்ணிக்கை மாத்திரமே. அதற்கு மேலதிகமாக 11 புனர்நிர்மாண செயற்திட்டங்களுக்காக ரூபா 12,809,434 தொகை மற்றும் மழையினால் பாதைகள் சேதமடைவதை குறைக்கும் 12 செயற்திட்டங்களுக்கான ரூபா 22,006,835 தொகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த அனைத்து செயற்திட்டங்களும் குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வெள்ளம், வரட்சி, மண்சரிவு, விலங்குளின் உபத்திரவங்கள், அவசர அனர்த்தங்கள் ஆக பெயரிடப்பட்டிருந்த 05 வகையான முக்கிய அனர்த்தங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 480 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் விலங்குகளின் தாக்குதல்கள் காரணமாக 2016 மற்றும் 2017 ஆண்டின் போதும் ஆட்கள் மரண

எண்ணிக்கை முறையே 68 தொகை மற்றும் 58 தொகை ஆகவும், அதன் மூலம் விபத்திற்குள்ளாகிய ஆட்கள் எண்ணிக்கை 2,043 தொகை மற்றும் 6,947 தொகை என குறிப்பிட்டிருந்தது போதிலும், அதற்காக மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்திருந்த மொத்த தொகை ரூபா 1.78 மில்லியன் அதாவது, நபர் ஒருவருக்கு ரூபா 254 மாத்திரமே. இதன் காரணமாக விலங்குகளின் உபத்திரவங்கள் மூலம் ஏற்படும் அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாக நிலையத்தினால் கூடிய கவனம் செலுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) நிலையத்தினால் வழங்கியிருந்த அறிவுரைகளின் பிரகாரம் மாவட்ட செயலாளர்களினால் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களின் அலுவல்கள் முடிவடைந்தவுடன் வேலை முடிவடைந்தற்கான அறிக்கைகள் நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டியதுடன், அதன் அடிப்படையில் இறுதி கொடுப்பனவு மேற்கொள்ள்ப்படும். எவ்வாறாயினும், கணக்காய்வுத் திகதியாகிய 2018 பெப்ரவரி 17 அளவிலும் இறுதி வேலை அறிக்கைகள் சமர்பித்திருக்காத 08 செயற்திட்டங்களுக்காக ரூபா 13,507,644 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அநுராதபுரம், பதுளை, நுவர-எலிய, கொழும்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்ட செயலகங்களில் ஊடாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 42,185,609 தொகைக்கான 07 செயற்திட்டங்களுக்காக குறிப்பிட்ட மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 4,512,287 இற்கான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பல்வேறு காரணங்களுக்காக அச் செயற்திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முற்பணக் கணக்கு மீண்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. குறிப்பிட்ட செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்ட 1½ மாதங்கள் முதல் 8½ மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னரேயாகும்.

(உ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்தலின் கீழ் அவசரச் செயற்பாட்டு பிரிவுக்காக இரண்டு ஹயிபிரிட் வீடுகள் ரூபா 1.2 மில்லியன் ஏற்பாடுகளின் மீது கொள்வனவு செய்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், அவ்விடயத்தை நிறைவேற்றுவதற்காக கூறுவிலை அழைப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணமாக பணிப்பாளர்

நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் அப்பெறுகை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ii) பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் திடீர் வெள்ள அனர்த்தங்களுக்கு பதில் கொடுப்பதற்காக 2017 பாதீட்டு ஏற்பாடுகளின் கீழ் 125 படகு என்ஜின்கள் கொள்வனவு செய்தவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், செய்முறையில் ஏற்பட்ட சிக்கல் தன்மையின் காரணத்தினால் 2017 திசெம்பர் 08 ஆம் திகதியில் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் அந்த பெறுகையும் இரத்து செய்யப்பட்டது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வளிமண்டளவியல் திணைக்களத்திற்கு சொந்தமான காணி ஒன்றில் ரூபா 1,034,399,368 தொகை செலவில் நிலையத்தின் தலைமை அலுவலகக் கட்டிடம் 2010 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக் காணி மற்றும் கட்டிடம் நிலையத்திற்கு உரித்தாக்கும் விடயங்கள் மீளாய்வாண்டு இறுதி தினம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலம் 2005 மற்றும் 2006 ஆண்டுகளின் போது 07 மோட்டார் சைக்கிள்களும், 2015 ஆண்டின் போது 02 மோட்டார் சைக்கிள்களும் மற்றும் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்கள் சமர்பிக்கப்படாத 09 மோட்டார் சைக்கிள்களுமாக நிலையத்திற்கு கிடைத்திருந்த 18 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அவற்றின் ஓட்ட நிலைமை, நம்பிக்கை பொறுப்பு தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினர் ஆகிய விடயங்கள் தொடர்பாக தொடர் விபரப் பரிசோதனை ஒன்று நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், குறிப்பிட்ட சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படல் போலவே சொத்துக்களின் நீடித்திருத்தல் தொடர்பாகவும் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

(இ) 2017 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திலும் உட்படுத்தப்பட்டிருக்காத இரண்டு மோட்டார் வாகனங்கள் 05 வருட காலப்பகுதிக்காக செயற்பாட்டு லீஸின் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2017 திசெம்பர் 11 திகதி அனுகியிருந்த உடன்படிக்கையின் 7(இ) பந்தியை ஒருதலைபட்சமாக மீறிய

காரணத்தினால் ரூபா 3,293,941 இற்கு தண்டப்பணம் ஒன்று செலுத்தும் படி வழங்குனர் நிறுவனத்தினால் நிலையத்திற்கு 2018 மே 23 திகதி எழுத்துமூலம் அறிவித்திருந்தது. அதேபோல் 2016 பெப்ரவரி 23 திகதி முதல் 2018 ஜூன் 30 திகதி வரையும் வெற்றிடமாக காணப்பட்ட 02 பதவிகளை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமல் அப் பதவிகளுக்காக இணைப்பதற்காக அந்த வாகனங்கள் பெறப்பட்டிருந்தன என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்காக எல்லா வகையிலும் நிறைவான பயிற்சி நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக 2015 ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 123 மில்லியன் தொகையும் 2017 குறைநிரப்பு ஏற்பாடுகளின் மூலம் ரூபா 50 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நிலையத்தை நிறுவுவதற்காக பொருத்தமான காணி ஒன்று பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் நிர்மான வேலைகள் 2017 திசெம்பர் 31 திகதி வரை செயற்பட்டிருக்கவில்லை.

4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

அனர்த்தங்களுக்காக பதில் அளிக்கும் விடயங்களின் கீழ் கொள்வனவு செய்திருந்த ரூபா 7,166,319 பெறுமதியான 10 வகையான உபகரணங்கள் மற்றும் ரூபா 6,264,773 தொகைக்கான 09 வகையான நிலையான சொத்துக்களும் பல்வேறு நிறுவனங்களில் இருந்து நிலையத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த புத்தகங்கள் மற்றும் வீடியோ நாடாக்கள் பாரிய எண்ணிக்கையானவைகளும், 01 வருடம் முதல் 3½ வருடங்கள் வரையான காலம் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், ரூபா 110,100 பெறுமதியான தோண்டும் இயந்திரங்களின் 02 டயர்களும் 08 வருடங்களை அண்மித்த காலம் களஞ்சியத்தில் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

4.4 பதவியணிகள் நிருவாகம்

2016 ஆகஸ்ட் 25 திகதி முதல் நிலையத்தில் பணிப்பாளர் நிதி மற்றும் பணிப்பாளர் மனித வளம் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், அப் பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்காக 2018 ஜூன் 15 திகதி நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால், பணிப்பாளர் நிதி பதவிக்கு தகைமையுடைய ஆளொன்றை விதப்புரைத்திருந்த போதிலும், நிலையத்தினால் அவ்வெற்றிடத்தை நிரப்பியிருக்கவில்லை. எவ்வாறாயினும், பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் மற்றும் நிலையத்தின் இடைக்கால குழுவின் அங்கீகாரமும் இன்றி அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயலாளரின்

MDM/AD/05/DMC/NR(D)/VOL – III - 2017 இலக்கம் கொண்ட முறையே 2018 ஜூலை 18 மற்றும் 2018 ஜூலை 26 வழங்கியிருந்த மேற்கூறிய இரண்டு பதவிகளில் பதில் கடமை ஆற்றுவதற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

5 நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு "நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் எல்லா அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

6 கணக்களிப்பொறுப்பும் நல்ல ாளுகையும்

6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செய்முறை

6.1.1 பெறுகைகள்

நிலையத்தினால் தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டங்கள், பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் விதந்துரையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகைகள் செயல்முறைகளை செயற்படுத்தும் போது ஏற்பட்டிருந்த பலவீனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) களஞ்சிப்படுத்தல், குறிததொதுக்கிய விநியோக நடைமுறையொன்றினை திட்டமிடல் மற்றும் தடுத்து வைக்கும் போது ஏற்படக்கூடிய சுற்றாடல் சார் காரணிகள் மீது கவனம் செலுத்தாமல் அவசர கொள்வனவு என 100 படகுகளுக்கான பூட்டுகள் கொள்வனவு செய்தவதற்கான திருத்திய வருடாந்த பெறுகை திட்டத்தின் மூலம் ரூபா 13 மில்லியன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 10 படகுகளுடைய பூட்டுக்கள் மாத்திரம் பெற்றுக்ககொள்வதற்கு நிலையம் நடவடிக்கை எடுத்திருந்தது. ரூபா 11,160,000 பெறுமதியான 90 படகு பூட்டுகள் அத்திகதி உள்ளவாறு வழங்நரிடம் பொறுப்பில் காணப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 77 பூர்வ விபத்து அறிவித்தல் கோபுரங்களின் மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்புக்களுக்காக விலைமனுதாரர்களினால் பல்வேறு விடயங்களின் எண்ணிக்கையை பயன்படுத்தி மற்றும் சில விடங்களுக்காக கூறுவிலைகளை சமர்பிக்காமல் விலைமனுக்கள் சமர்பித்திருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் விலைமனுதாரர்கள் சமர்பித்திருந்த மொத்த கிரய பெறுமதியை பயன்படுத்தி விலைமனு மதிப்பாய்வு செய்த காரணத்தினால் குறைந்த விலைமனுவை விட ரூபா 41,993,083 தொகை கூடிய பெறுமதிக்கான ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. மேலும், சமர்பித்திருந்த விலைமனு பதிவேடுகளின் கணக்கு எண் கணிதம், தவறுகள், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் சரிசெய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிலையத்தினால் 75 டிரக்டர் மவுன்டட் குடிநீர் பவுசர்கள் பெற்றுக்கொள்வதற்காக பெறுகையின் போது டிரக்டர் நீர் மற்றும் பவுசர்கள் ஒரு விடயம் எனக் கணித்து கூறுவிலை அழைக்கப்பட்ட காரணத்தினால் அலகு ஒன்றிற்கு ரூபா 1,919,900 தொகை செலவிடுவதற்கு நேரிட்டிருந்ததுடன், அக் காலப்பகுதியில் தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினாலும் மேற்கூறிய முறையில் டிரக்டர் மற்றும் நீர்பவுசர்களுக்காக வெவ்வேறாக கூறுவிலைகள் அழைக்கப்பட்டு அலகு ஒன்றிற்கு ரூபா 1,749,000 இற்கான விலைக்கு குறிப்பிட்ட பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிலையத்தினால் அலகு ஒன்றிற்கு ரூபா 170,900 வீதம் டிரக்டர் பவுசர் குடிநீர் பவுசர் 75 கொள்வனவு செய்வதற்காக ரூபா 12,817,500 தொகை மேலதிகமாக செலுத்தியிருந்தது. மேலும், மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஏப்ரல் 03 திகதிக்கு முன்னர் பெறுகை நிறைவேற்றப்பட வேண்டும் எனினும், அத் திகதியில் உள்ளவாறு கிடைத்திருந்த டிரக்டர் மவுன்டட் குடிநீர் பவுசர்கள் 55 தொகை மாத்திரமாமே.

(ஈ) கடந்த ஆண்டின் போதும் மற்றும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 36,348,392 தொகைக்காக கொள்வனவு செய்திருந்த 152 வள்ளங்களுக்காக என்ஜின்கள் காணப்படாமையால், உரிய விடயங்களுக்கு பயன்படுத்த முடியாதிருந்ததுடன், 2017 மே மாதத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ள சந்தர்ப்பங்களில் வெளிசாராரிடம் வாடகை அடிப்படையில் பெற்றிருந்த வள்ளங்களுக்காக ரூபா 600,000 தொகை செலுத்துவதற்காக நிலையத்திற்கு நேரிட்டிருந்தது. மேலும் அனர்த்தங்கள் ஏதும் காணப்படாத சந்தர்ப்பங்களில் அவசர கொள்வனவுகள் என கணித்து ரூபா 18.48 மில்லியன் கிரயத்தில் 2017 ஜூன் மாதத்தில் 42 வள்ளங்களுக்கான என்ஜின்கள் கொள்வனவு செய்திருந்தது. அவற்றில் 12 வள்ளங்களின் என்ஜின்கள்

விநியோகித்திருந்ததுடன், விநியோகிக்கப்படாமல் 30 என்ஜின்கள் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2016 ஆண்டின் போது பல்மாதிரி அனர்த்த ஆபத்துக்கள் பகுப்பாய்வு அலுவல்களுக்காக ரூபா 5,806,862 தொகை செலவிடப்பட்டு மென்பொருள் கணினி முறைமையொன்று மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், 2017 ஆண்டிற்கான ஏற்பாடுகளின் மூலம் ரூபா 205,200 தொகை செலவிடப்பட்டு இந்த விடயத்திற்காக பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தது. அதே போல் 2017 ஆண்டில் இவ்விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 53 மில்லியன் தேசிய கட்டிட ஆய்வு அமைப்பிற்கு திறைசேரி அங்கீகாரத்தின் மீது மாற்றியிருந்ததுடன், பலமாதிரி அனர்த்தங்கள் ஆபத்து பகுப்பாய்வு அலுவல்கள் உரிய விதத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தேசிய தேவை மீது நிலையம் முறையான கவனம் செலுத்தியிருக்கவில்லை.

6.1.2 ஒப்பந்த நிருவாகக் குறைபாடுகள்

அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 413,053,476 இற்கான தொகையொன்று மாவட்ட செயலகங்களுக்கு ஏற்பாடு செய்திருந்ததுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாக அலுவல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கெப்பிட்டியாவ வடக்கு பிரிவில் கலேவெல குளம் ரூபா 04 மில்லியன் தொகை செலவிடப்பட்டு புணரமைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், குளத்தில் அணைக்கரையில் சில இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அணைக்கட்டிற்கு அண்மையில் போடப்பட்டிருந்த மண் சிறந்த முறையில் நெருக்கப்படாமல் புற்கள் பிடித்திருக்காமையால் மண் கரைந்து செல்வதற்கு இடம் காணப்பட்டமையால் குளத்தில் அணைக்கரையில் பாதுகாப்பிற்கு சவாலாக இருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ii) ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த அங்குனுகொல பெலஸ்ஸ திஸாகே குளம்

புணரமைப்பு செய்யும் செயற்திட்டம் 05 வேலை விடயங்களுக்காக ரூபா 3,528,725 இற்கான பெறுமதிக்கு நிர்மாண வேலை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ரூபா 2,614,158 பெறுமதியான 02 வேலை விடயங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்துடன், மீதியான 03 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் குளத்தில் 5,112 கன மீற்றர் வண்டல் மண் இயந்திரத்தின் மூலம் அகற்றப்பட்டு ¼ மைல் தூரத்திற்கு எடுத்து செல்வதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 2,371,968 தொகை செலுத்தியிருந்த போதிலும், குளத்தின் கொள்திறன் அதிகரிக்கக்கூடிய விதமாக வண்டல் மண் அகற்றப்பட்டிருக்காததுடன், அகற்றப்பட்ட வண்டல் மண் குளத்தில் இரு பக்கங்களிலும் போடப்பட்டிருந்தது.

(ஆ) நுவரஎலிய மாவட்டத்தில் வெள்ள அனர்த்தங்களை குறைப்பதற்கான செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நுவரஎலிய பிரதேச செயலகத்துடன் இணைந்த சீதாஎலிய கிராமத்தின் ஊடாக ஓடக்கூடிய கால்வாயில் 77 மீற்றர் பகுதியொன்று ரூபா 1,838,170 தொகை செலவிடப்பட்டு விரிவாக்கப்பட்டிருந்த போதிலும், மேலும் 30 மீற்றர்கள் பகுதியொன்று தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டிக் காணப்பட்டதினால் கால்வாயினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) நுவரஎலிய பிரதேச செயலகத்துடன் இணைந்து கடுமான ரோஸ் பூந்தோட்ட உள்ளக பாதையினை கொங்கிரீட் பரப்பி வடிகால் முறையை தயாரித்து தரும்படி பிரதேச மக்கள் பிரதேச செயலாளரை வேண்டியதுடன், அதற்காக ரூபா 1,889,207 தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 2,656,000 இற்கான மதிப்பீட்டு விலைக்கு பாதையை காபட் பரப்புவதற்கு மாத்திரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(இ) கேகாலை மாவட்டத்தில் 06 குடிநீர் கிணறுகள் நிர்மாணிக்கும் அலுவல்கள் ரூபா 1,443,972 தொகை செலவிடப்பட்டு 2017 நவம்பர் அளவில் பூர்த்தி செய்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே 30 திதகி வரையும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த வேலை பெறுமதி ரூபா 6,788,416 தொகைக்கான பதுளை மாவட்ட மீகஹகிவுல கரதகஹமட அணைக்கட்டின் புணர்நிர்மாண வேலைகள் ரூபா 5,713,609 தொகை செலவிடப்பட்டு 2017 மே 17 அளவில் பூர்த்தி செய்திருந்த போதிலும், அவ்வாறு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இரண்டு இடங்களில் நீர் ஒழுகுவதாக 2018 மே 14 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. 2018 ஆகஸ்ட் 02 திகதி வரை இந்த குறைபாடுகளை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2016 ஆண்டின் போது ரூபா 10,776,598 தொகை செலவிடப்பட்டு கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி நகரத்தில் வெள்ள நிலைமையை குறைப்பதற்காக வடிகால் முறை ஒன்றினை தயாரித்திருந்த போதிலும் மழை காலங்களில் பாதை மற்றும் அண்மித்த பிரதேசங்களில் நீர் நிரம்புகிறது என 2018 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

(ஊ) 2014 ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட மதிப்பீட்டு கிரயம் ரூபா 32,900,000 தொகைக்கான அக்குரணை நகரில் வெள்ள அனர்த்தங்கள் குறைக்கும் செயற்திட்டம் தொடர்பாக கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் கீழ் அக்குரணை பிரதேசத்தில் மற்றும் பிகா ஓயா மற்றும் வஹகல் ஓயா சேற்றினை அகற்றும் கருமங்கள் ஒரே ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட ஒப்பந்த உடன்படிக்கை 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த வேலை சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கவில்லை.

(ii) குறிப்பிட்ட ஆற்று வடி நிலங்களில் 20 கிலோ மீற்றர் தூரத்திற்குள்ள வண்டல் மண் 17,116 கியுப்களை தோண்டி எடுத்துச் சென்றிருந்ததுடன் 1992 இன் 35 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் அதற்கான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(iii) வண்டல் மண்/ மண் 3000 கனமீற்றர் எடுத்துச் செல்வதற்காக ரூபா 4,850,000 (வரி இன்றி) தொகைக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் உண்மையாகவே வண்டல் மண்/ மண் 4,416.78 கனமீற்றர் அகற்றப்பட்டதாக குறிப்பிட்டு சமர்பித்திருந்த சிட்டைக்காக ரூபா 7,088,553 தொகை (வரி இன்றி)

கொடுப்பனவு செய்திருந்த காரணத்தினால் உடன்பட்டிருந்த தொகையை மிகைத்து ரூபா 2,238,553 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

6.1.3 தாமதமான செயற்திட்டங்கள்

உடன்படிக்கையின் பிரகாரம் 2017 நவம்பர் 30 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய குருநாகல் மாவட்டத்தின் எஹடுவெவ பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,980,088 தொகைக்கான 09 செயற்திட்டங்களை உரிய நியமங்களுடனான துண்டுக் கற்கள் பெற்றுக் கொள்ள முடியாமையினால் 2018 பெப்ரவரி 26 திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்து ஒப்படைக்கப்பட்டிருந்தது.

6.2 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்

நிலையத்தினால் 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை 2018 ஜூன் 19 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

6.3 தீர்க்கப்பட்டிருக்காத கணக்க்காய்வு பந்திகள்

2012 ஆகஸ்ட் 16 ஆம் திகதி நிலையத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனம் ஒன்று விபத்துக்கு உள்ளாகி ஆண் ஒருவர் இறந்த காரணத்தினால் பங்கமுற்ற தரப்பினரால் 2014 ஆகஸ்ட் 07 திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நிறுவகத்திற்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்திருந்ததுடன், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள்		அவதானிப்புகள்
(அ) பெறுகை	(i)	அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் இன்றி செயற்பட்டு லீஸின் முறையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளல்.

(ii) செயலாற்றுகை பிணைமுறி மற்றும் விலைகூறல் பிணைமுறி பெற்றுக்கொள்ளாமல் மற்றும் விலைகூறல் ஆவணங்களின் குறிப்பிடப்படாத அவதானிப்புக்கள் அடிப்படையில் கொண்டு மதிப்பாய்வுகள் மேற்கொண்டிருத்தல்.

(iii) திடீர் அனர்த்த தேவைகளுக்கு பயன்படுத்த முடியாதவாறு அவசர தேவையின் கீழ் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம் நிலையத்தின் அனைத்து பிரிவுகளையும் பிரதிபலிக்கும் விதத்தில் செயல் நடவடிக்கை திட்டம் தயாரித்திருக்கவில்லை.

(இ) அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்கள் செயற்திட்டங்களை அடிக்கடி மாற்றியமைத்தல்.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
306/72,
பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பிலான தங்களது அதேஇலக்க டீஎம்ஜீ**/**ஏ**/**டீஎம்சீ**/01/17/13** மற்றும் 2018 ஓகஸ்ட் மாதம் 02ஆந் திகதிய கடிதத்துடன் தொடர்புடையது. இது தொடர்பிலான விடயங்கள் பின்வருமாறாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தல்

2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) உடன்பட முடியாது

2017இல் அனர்த்த தணிப்பு கருத்திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக உள்ளக சுற்றறிக்கையொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், குறிப்பிட்ட வருடத்தினுள் பூர்த்தி செய்யக்கூடிய கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை மாத்திரம் முன்னெடுக்குமாறும், பூர்த்தி செய்யப்பட்டுள்ள பணிகளுக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கான பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்குமாறும் ஆலோசைன வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 2017 ஆம் ஆண்டுக்காக பூரத்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள இறுதி பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம், மொத்த பணத்தொகையும் குறிப்பிட்ட மாவட்ட பொறியியலாளர்களின் விதப்புரைகள் மற்றும் மாவட்ட செயலாளர்களது அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களுக்கு மாத்திரமே இவ்வாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகையால், பூர்த்தி செய்யப்படாத் பணிகளென எதுவும் அடுத்த வருடத்துக்கு முன்கொண்டு போகப்படவில்லை.

(ஆ) உடன்பட முடியாது.

2017 டிசெம்பர் 31ஆந் திகதியிலான நிதி நிலைமை கூற்றில், மூலதன வழங்கல்களின் கிடைப்பனவு, செலவுகள், சொத்து வழங்கல்களின் கிடைப்பனவு, சொத்து வழங்கல்களின் தேய்வினை குறைத்தல் மற்றும் சொத்து மீள்கணிப்பீட்டு மிகையினை சீராக்கியதன் பின்னர் கிடைக்கப்பெறும் பெறுமதியாக ரூ.**1,276,930,358.60** காட்டப்பட்டுள்ளது. மேலும், சமபங்கு மாற்றல் கூற்றின் மூலம், மூலதன வழங்கல்களின் கிடைப்பனவு, செலவுகள் மற்றும் சொத்து மீள்கணிப்பீட்டு மிகை மற்றும் மொத்த பற்றாக்குறை ஆகிய மீதிகளாகும். இங்கு சொத்து வழங்கல்களின் கிடைப்பனவுகள் உள்ளங்கவில்லை. ஆகையால், இதன் பெறுமதி ரூ**.675,361,071.00** ஆகவும் குறிப்பிட்ட மீதிகளுக்கிடையே மாற்றம் உள்ளதாக அவதானிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், சமபங்கு மாற்றல் கூற்றுக்கு சொத்து வழங்கல் கிடைப்பனவுகளை சீராக்கீயதன் பின்னர் பெறப்படும் பெறுமதியானது நிதி நிலைமை கூற்றின்

பெறுமதிக்கு சமனாகும். ஆகையால், எதிர்காலத்தில் அதாவது 2018இல் நிதி நிலைமைக் கூற்றின் பெறுமதியும் சமபங்கு மாற்றல் கூற்றின் பெறுமதியையும் தெளிவாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில், குறிப்பிட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேனென தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.2.3 கணக்காய்வுக்கான சாட்சியங்கள் காணப்படாமை

இக்கருத்திட்டம் தொடர்பில் நிலையத்துக்கு கணக்காய்வு மதிப்பீடு முன்வைக்கப்படவில்லை என்பதுடன், மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட DSH/ACC/2/1/2018-08 ஆம் இலக்க **2018.09.05** ஆந் திகதிய கணக்காய்வு பதிலுக்கு ஏற்ப 1111 திட்டத்தை தயார செய்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார். கைதவறுதல் காரணமாக இது குறிப்பிட்ட ஆவணக்கோவையில் உள்ளடங்கவில்லை என்பதுடன், இதன் பிரதிகளை இணைப்பு 01இன் மூலம் சமர்ப்பிக்கின்றேன்.

2.3 சட்ட திட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இசைந்தொழுகாமை

(அ) 2005 ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தின் 05ஆம் பந்தி

உடன்படுகின்றேன்.
தற்போது இந்த நடவடிக்கைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றன.

(ஆ) அரச பெறுகை வழங்கல் வழிகாட்டல் கோவை

(i) 3.4.3 வழிகாட்டல்

உடன்படுகின்றேன்.

தற்போது பெறுகை வழங்கல் வழிகாட்டல் கோவையின் 3.4.3 உபபிரிவின் மூலமான ஏற்பாடுகளின் பிரகாரம், பெறுகை வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வழங்குநர்களை 50 தொகுதிகளாக வகைப்படுத்தி, அதற்கான விளம்பரத்தை தயார் செய்து பிரபல்யமான பத்திரிகைகள் வாயிலாக விண்ணப்பப்படிவங்கள கோரப்பட்டுள்ளன. பின்னர் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் குறிப்பிட்ட நிரம்பலாளர்களை பதிவு செய்வதற்கான விதப்புரைகளைப் பெற்றுக்கொண்டு இதற்காக நிறுவன தலைவரது அங்கீகாரத்துடன் நிரம்பலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

(ii)5.3.11 (அ) வழிகாட்டல்
உடன்படுகின்றேன்.

இதற்கான விலை மனுக்கோரல்கள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்படுவதை தெரியப்படுவத்துவதுடன், இதற்கான உள்ளக சுற்றறிக்கை மாவட்ட அனதர்த்த பிரிவுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய இது தொடர்பில் ஆராய்ந்துபார்த:து பிழைகளை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன்.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண கோவை நிதிப் பிரமாணங்கள் (104 (3))

2015முதல் 2018 மே மாதம் வரையில் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்கள் தொடர்பான 16 ஆரம்பநிலை அறிக்கைகள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளன. மீதி விபத்துக்கள் பற்றிய ஆரம்பநிலை அறிக்கைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன்.

(ஈ) 2017 பெப்ரவரி 21 ஆந் திகதிய 2017- 01 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பந்தி 03

இக்கருத்திட்டங்களை 2017ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தினுள் உள்ளடக்குகையில், மேற்கொள்ளப்பட்டுள்ள இசைவு ஆய்ந்தறிக்கையில் வெளிப்படாத விடயங்கள் இக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தயாராகையில் வெளிப்பட்டமையால் இந்த 16 கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. எவ்வாறெனினும், இதிலிருந்து கிடைக்கப்பெற்ற அநுபவங்களை பயன்படுத்தி, எதிர்காலத்தில் வேலைத்திட்டங்கைள தயார் செய்கையில், இத்தகைய சந்தர்ப்பங்களை குறைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

3.நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவு

உடன்படுகின்றேன்.

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளுக்குத் தேவையான நிதியை திறைசேரி நிதி ஏற்பாடுகள் மூலம் பெற்றுக்கொள்கின்றத. எமது நிறுவனமானது இலாபமீட்டலில் ஈடுபடுவதில்லை என்பதுடன, திறைசேரியினால் கிடைக்கப்பெறும் நிதி ஏற்பாடுகள் குறிப்பிட்ட வருடத்தினுள் வருமானமாகக் காட்டப்பட்டுள்ளது.

திறைசேரி நிதி வழங்குகையில், உண்மையாகவே பணவடிவில் மேற்கொள்ளப்படும் செலவுகளுக்காக மாத்திரம் நிதி ஏற்பாடுகளை வழங்குமெனினும், நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்கையில், திரண்ட அடிப்படையில் செயற்படுவதனால், வருடத்துக்கான அனைத்து செலவுகளையும் பணவடிவில் செலுத்தப்படிம், செலுத்தப்படாவிடினும் அவை யாவும் செலவாகக் காட்டப்பட்டுள்ளன. மேலும், சொத்துக்கான தேய்வு ஒதுக்கீடும் வருடத்துக்கான தேய்வு ஒதுக்கீடாகக் காட்டப்பட்டுள்ளபோதிலும் இது பணவடிவில் மேற்கொள்ளப்படும் செலவு அல்ல.

இந்நிலைமையின் கீழ் நிறுவனத்தின் கருமமாற்றல் விளைவினைக் காட்டும் கூற்றுக்களில் பெரும்பாலும் குறைபாடுகள் காணப்படுவதுடன், இது நேரடியாக நிறுவனத்தின் தேறிய சொத்துக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தற்போதுள்ள அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் எதிர்கால நோக்கின் பிரகாரம், மூலதன கருத்திட்டங்களுக்கான நிதி வழங்கலானது வருடாவருடம் வேறுபடும். நிருவாக செலவுகள், ஊழியர்களது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், வாகன பராமரிப்பு, எரிபொருள் செலவு, தொலைபேசி மற்றும் தொடர்பாடல் செலவுகள், மின்சாரம் மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்களுக்கு ஏற்ப மாறுபடும்.

4. கருமமாற்றல் மீளாய்வு

4.1 வினைத்திறன்

4.1.1திட்டமிடல்

(அ) **2005** ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தை திருத்தும் செயற்பாடுகள் நீர்ப்பாசன, நீர் வளமூல மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்காக பல தடவைகளில் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது விதப்புரைகளை வழங்கியுள்ளது.

(ஆ) தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயார் செய்தலானது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முதன்மை பொறுப்பாக காணப்பட்டதுடன், ஆலோசனை குழுவொன்றினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளுக்கும் (TOR) நேரசூசிக்கும் ஏற்ப இத்திட்ட தயாரிப்புகள் இடம்பெற்றன. இதற்கமைய, தேசிய மட்டத்திலான பல்வேறு பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து பிரதேச மட்டத்தில் 10 மாவட்டங்களைத் தெரிவு செய்து, ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதிகள், உள்ளூராட்சி பிரதிநிதிகள் மற்றும் புலமையாளர்களுடன் வெவ்வேறாக கூட்டங்களை நடாத்தி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு இத்திட்டம் தயார் செய்யப்பட்டது.இதற்மைய இந்த சட்ட வரைபினை தேசிய மற்றும் பிரதேச பங்காளிகளது கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களிடம் வழங்கப்பட்டு, அவர்களது கருத்துக்களை ஒன்றுசேர்த்து வழிகாட்டலுடன், இறுதி சட்ட வரைபானது 2018 மே மாதம் 02ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின பணிப்பாளர் நாயகத்துக்கு கையளிக்கப்பட்டது. எனினும், மீண்டுமொரு தடவை இத்திட்டம் குறித்து அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர்களது விதப்புரைகளைப் பெற்றுக்கொண்டு, நீர்ப்பாசன, நீர்வளமூல மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர், இது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் நீர்ப்பாசன, நீர்வளமூல மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் முன்னெடுக்கப்படுமென்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(இ)

இது தொடர்பான முதலாவது செயலமர்வு 2015 நவம்பர் மாதம் அனர்த் முகாமைத்துவ அமைச்சினால் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதற்காக ரூ**. 318,582** செலவு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் திட்டமொன்று தயார் செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

4.1.2 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

(அ) முன்னைய வருடங்களின் அனர்த்த நிலைமை மற்றும் அவற்றின் தாக்கங்களைக் கருத்தில் கொண்டு தயார் செய்யப்பட்ட மாவட்ட அபாய கோட்பாடு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட பிரேரணைகளை சுருக்கி பணிப்பாளர் நாயகம் - அனத்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஆற்றுப்படுத்தியுள்ளதுடன் பின்னர் பணிப்பாளர் நாயகம் -அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் கௌரவ அனர்த்த முகாமைத்துவ அமைச்சருக்கு அறிவித்ததன் பின்னர் கௌரவ அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்), அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம்,அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தலைமை கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் (தணித்தல்,ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு) ஆகியோரது தலைமையில் **2016.12.28** மற்றும் **2017.03.08** ஆகிய திகதிகளில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரது அலுசலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், மாவட்ட மட்டத்தில் கருத்திட்டங்களுக்கான நிதி ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இது தொடர்பில் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தீர்மானித்து, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இப்பொறுப்பானது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு எழுத்து மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

(இ) கருத்திட்டங்களுக்கான பணி பூர்த்தி அறிக்கையின் பிரகாரம், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், இறுதி பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இறுதி அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) இக்கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் இசைவாக்கம் காட்டப்பட்டமையால், குறிப்பிட்ட முற்பணக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கருத்திட்டங்களை முன்னெடுக்கையில் முகம் கொடுக்க நேர்ந்த நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இக்கருத்திட்டங்களை ஆரம்பிக்க முடியவில்லை. ஒவ்வொரு கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்காக முயற்சிகள மேற்கொள்ளப்ட்ட காலப்பகுதி ஒன்றொன்றுக்கு மாறுபட்டதாகையால், மீண்டும் முற்பணக் கொடுப்பனவுகளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பெற்றுக்கொள்வதற்கு ஒரு மாதத்துக்கும் எட்டு மாதத்துக்கும் இடைப்பட்ட காலம் எடுத்தது.

கருத்திட்டங்களை செயற்படுத்த முடியாதென ஏதுவான காரணிகளுடன் அறிவுறுத்தப்பட்டதும், அந்த முற்பணக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

(உ)

(i) அவசர கருமமாற்றல் பிரிவின் தேவைக்கேற்ப அங்கு 24 மணிநேரம் முழுவதும் பணியாற்றும் உத்தியோகத்தர்களது தேவைகருதி அவர்களுக்காக தற்காலிக ஓய்வு அறையை (Rest Room) வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டு இது தொடர்பில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் பல்வேறுபட்ட பிழரேரணைகள் முன்வைக்கப்பட்டிருந்தமையால், இந்த இடத்தை அமைப்பது தொடர்பில் உரிய தீர்மானமொன்று மேற்கொள்ளப்படவில்லை. இத் தேவையினை பூர்த்தி செய்யும் வரையில், முப்படை / பொலிஸாருக்கு தற்காலிகமான 03 வாகனங்களை வழங்குமாறு அமைச்சரவை செயலாளர் முன்னேற்ற மீளாய்வு அமர்வில் ஆலோசன வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அவசர கருமமாற்றல் பிரிவின் தேவை தொடர்ந்து நிலவுவதனால், இது தொடர்பிலான நிரந்தர தீர்மானமொன்று தேவையென்பதை அறியத்தருகின்றேன்.

(ii) உடன்படுகின்றேன்.

குறிப்பிட்ட 125 படகு என்ஜின்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை வழங்கல் செயன்முறையை நடைமுறைப்படுத்தி **2017.11.24** ஆந் திகதி திணைக்கள பெறுகைகள் வழங்கல் குழுவின் தீர்மானத்தை நீர்ப்பாசன, நீர்வளமூல மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரிடத்தில் அங்கீகாரத்துக்காக முன்வைத்ததன் பிற்பாடு, விலைமனுக் கோரல் செயன்முறையின்போது எழுந்துள்ள சிக்கல் நிலை காரணமாக குறிப்பிட்ட பெறுகை வழங்கலுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் கிடைக்கப்பெவில்லை.

குறிப்பிட்ட பெறுகை வழங்கல் குழுத் தீர்மானமானது **2017.11.24** ஆந் திகதி எடுக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட வருடங்களுக்கா ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஏற்பாடுகள் குறிப்பிட்ட வருடம் நிறைவடைவதற்கு முன்னர் **2017.12.31**ஆந் திகதி நிறைவு செய்யப்பட வேண்டுமாகையால்,குறிப்பிட்ட வருடத்தினுள் மீண்டும் குறிப்பிட்ட பெறுகை வழங்கல்

செயற்பாட்டை செயற்படுத்துவதற்கான காலம் போதாமையால், 2017ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்ட பெறுகை வழங்கலை கைவிட வேண்டி நேர்ந்தது.

4.2முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) இக்காணிகளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு கையேற்பது தொடர்பான கோரிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இக்காணி 2012ஆம் ஆண்டு 04ஆம் இலக்க மேல்மாகாணத்தின் காணி அபிவிருத்தி பிரகடனத்தின் 10வது பிரிவின் பிரகாரமும் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 95வது பிரிவு மற்றும் 224வது காணிக் கட்டளைகள் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு கையகப்படுத்துவதற்காக கௌரவ மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்குமான பிரதி சகிதம் மேல்மாகாண காணி ஆணையாளருக் க/அனxi/**02/30-2016** இலக்க **2017.07.26** ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் உறுதி செய்யப்பட்ட இக்கடிதத்தின் பிரதியை நிலையம் பெற்றுக்கொண்டது. (இணைப்பு 03)

இக்காணியை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு கையகப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை குறித்து நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் காரணிகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர், கிடைக்கப்பெற்றுள்ள ஆலோசனைகளின் பிரகாரம், நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ குழுவுக்கு **05/05/2017** ஆம் திகதி அறிக்கையிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட குழு நிரூபம் 2017 ஜூலை மாதம் 04ஆந் திகதி இடம்பெற்ற இடைக்கால முகாமைத்துவ குழு பேச்சுவார்த்தைக்கு எடுக்கப்பட்டுள்ளதுடன், இதன் தீர்மானம் இணைப்பு 04இல் காட்டப்பட்டுள்ளது.

"அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ள கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை , காணி அமைச்சினால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு கையகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும், அதற்கான அமைச்சரவை பத்திரமொன்றை முன்வைப்பதாகவும் காணி அமைச்சின் செயலாளர அறிவித்துள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தாரல். இது தொடர்பில் கணக்காய்வு மதிப்பீடு முன்வைக்கப்பட்டுள்ளமையால், கணக்காய்வுக்கு இற்றைப்படுத்தப்பட்ட விடயங்களை சமர்ப்பிக்கக்கூடிய வகையில், அதன் பிரதியை அமைச்சு பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட ஆவணக்கோப்பில் சேர்ப்பதற்கும் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனை கிடைக்கப்பெற்றுள்ளது"

இதற்கேற்ப குறிப்பிட்ட காணியை கையகப்படுத்தும் செயற்பாடுகள் அமைச்சினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இப்பணிகள் நிறைவடைந்ததும், கணக்குகளில் பதியப்படும்.

(ஆ) உடன்படுகின்றேன்.

இவற்றில் பெரும்பாலான மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதுடன், அச்சொத்துக்களின் உரிமையை நிலையத்துக்கு கையகப்படுத்துவத்கான நடவடிக்கைகள் இது வரையில் மேற்கொள்ளப்படாமையால், நிறுவனத்தின் கணக்குகளில் பதியப்படவில்லை.

மேலும், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், நன்கொடையாக 2006இல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு 12 மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றின் உரிமை தொடர்ந்தும் குறிப்பிட்ட நிறுவனங்களிடம் காணப்படுவதன் காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரச நிதி திணைக்களத்க்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

2015/07/10 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் **2/2105** இற்கு ஏற்ப அல்லது **2017/12/21** ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை **2/2017** இற்கு ஏற்ப தகுந்த முறையில் செயற்படுமாறு குறிப்பிட்ட திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மோட்டார் சைக்கிள்களின் பதிவு உரிமை அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் காணப்படாமை மற்றும் இவற்றின் ஆயுட்காலம் தற்போது 11 வருடங்களைக் கடந்துள்ளமையால், அவற்றைப் பயன்படுத்துவது பொருளாதார ரீதியில் பயனுடையதாக அமையாமையால், சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் **2/2017** இன் **02,** iii,**(**ஆ**)** மூலமான ஏற்பாடுகளுக்கு அமைய செயற்படுவது உகந்த விடயமென அவதானக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, குறிப்பிட்ட பிரிவினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் செயற்படுகையில், நிரல் அமைச்சின் செயலாளரது பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய குழுவினால் விதப்புரை செய்யப்பட்டு குறிப்பிட்ட வாகனங்கள் பற்றிய விபரம் கொம்ப்ரோல் ஜெனரல் அலுவலகத்துக்கு முன்வைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பிரதி பணிப்பாளர் (முன்னறிவித்தல்) அ.நி. திரு.கே.டி.டி.பி.கே.கொடிப்பிலியின் பங்கேற்புடனான அமைச்சரவை பிரதிநிதியையும் உள்ளடக்கிய மூவர் உள்ளடங்கிய குழு இதற்காக நியமிக்கப்பட்டுள்ளதுடன், இக்குழு அறிக்கையின் மீது எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

(இ) உடன்படுகின்றேன்

பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிக்கையில் விலை மனுவை முன்வைப்பதற்காக கணிப்பீடு செய்யப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை தவறுதலாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

விலை மனுக்களை மதிப்பீடு செய்கையில் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பின்வரும் அவதானிப்புகள் விதப்புரைகள் நியாயப்படுத்தப்பட்டுள்ளன.

அவதானிப்புகள் (observation)

01. இரு விலை மனுதாரர்களும் அடிப்படை தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள்

02. பெறுகை வழங்கலுக்கான தொழிநுட்ப குறியீட்டு விபரங்களுக்கு ஏற்புடைத்தான வாகனங்களின் கொள்ளளவு 1800 குதிரை வலு கொண்டதாக இருப்பினும், இரு விலை மனுதாரர்களும் 1500 குதிரை வலுவினையே முன்வைத்துள்ளதாகவும், அதனை சாதாரண கைதவறுதலாகக் கருதியுள்ளமை

03. மாதாதந்த ஆகக்குறைந்த பயணத் தூரமான 3000 கி.மீற்றருக்கான ஆகக்குறைந்த விலையினை சென்ரல் பினான்ஸ் கம்பனியில் முன்வைக்கப்பட்டுள்ள Toyota G Axio வகைக்கு எனவும், அதன் உற்பத்தி வருடம் 2016 ஆகவும் காணப்படுதல்.

04. மேற்குறிப்பிட்ட ஆகக் கூடிய பயண தூரத்துக்கு கீழ்ப்பட்டு பயணத் தூரத்துக்கு கிங்ஸ் ரேன்ட் ய தனியார் கம்பனியானது 2017ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள மோட்டார் கார்கள் தொடர்பிலேயே முன்வைத்துள்ளது.

05. ஆகக் குறைந்த விலையினை முன்வைத்துள்ள நிறுவனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் மாதாந்த வாடகையிலான மாற்றம் ரூ.**5734.50** மாத்திரமே.

06. மேலதிக பயண தூரத்தை கருத்தில் கொள்கையில், கிங்ஸ் ரேன்ட் அ தனியார் கம்பனியே ஆகக் குறைந்த விலையை முன்வைத்துள்ளது.

நியாயப்படுத்தல் (Justification)

01. எதிர்வரும் 05 வருட காலப்பகுதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தேவைகள் குறித்து கவனம் செலுத்துகையில், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அனர்த்த நிலைமைகள் மற்றும் கடந்தகால வினைத்திறனை கருத்தில் கொண்டு மேலதிக உயரிய பயண நிலைமைகள் குறித்து கருத்தில் கொள்ளுதல்.

02. **4247**கி.மீற்றர் பயணித்ததன் பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்படும் மாதாந்த வாடகையை முன்கூட்டியே தீர்மானித்து அவ்வாறு பயணம் மேற்கொள்ளப்படின் (அதாவது **1247** கி.மீற்றரர் பயணித்தால்) எனும் முன்கூட்டிய தீர்மானங்களுக்கு அமைய செயற்பட்டு கிங்ஸ் ரேன்ட் அ கார் தனியார் கம்பனியை தெரிவு செய்வதற்கு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு விதப்புரை செய்துள்ளது.

03. கிங்ஸ் ரேன்ட் அ கார் தனியார் கம்பனி இரண்டாவது ஆகக் குறைந்த விலையை முன்வைத்துள்ள போதிலும், அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள மோட்டார் காரின் உற்பத்தி வருடம் 2017 ஆகக் காணப்படுவதாகவும், ஆனால் ஆகக் குறைந்த விலையை முன்வைத்துள்ள கம்பனியானது 2016இல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதொரு வாகனத்தையே முன்வைத்துள்ளதாகவும்.

மேற்படி பெறுகை வழங்கலுக்கு அமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தலைமை உள்ளக கணக்காய்வாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு மதிப்பீட்டுக்கான பதில் அனுப்புவதற்காக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிடமிருந்து தெளிவுபடுத்தலை பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதன் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 05) ஒரு தலைப்பட்சமாக ஒப்பந்தங்களை மீறியதன் காரணமாக செலுத்த வேண்டிய தெண்டப் பணத்தொகை தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனைக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவதற்கான உரிமையுடைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படக் கூடிய 04 வாகனங்கள் மாத்திரம் நிலையத்திடம் காணப்பட்டதுடன், அந்த உத்தியோகத்தர்கள் குழுவில் 05 பேர் அப்போது சேவையில் ஈடுபட்டிருக்கையில் தகுந்த வாகனங்கள் காணப்படாமையால், உத்தியோகத்தரொருவருக்கு தமது தனிப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக குறிப்பிட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், பணிப்பாளர் (மனித வள மற்றும் நிருவாகம்) மற்றும் பணிப்பாளர் (நிதி) ஆகிய பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளும் அப்போது முன்னெடுக்கப்பட்டபோதிலும், குறிப்பிட்ட பதவிகளுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும்கூட மேலும் 02 வாகனங்களுக்கான தேவை எழுந்துள்ளமையால், அதனையும் கருத்தில் கொண்டு தேசிய வரவு - செலவு சுற்றறிக்கை இலக்கம் **1/2016** இற்கு ஏற்ப இரண்டு வாகனங்களை நிலையத்துக்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான அங்கீகாரத்தை தேசிய வரவு - செலவு திணைக்களத்திடமிருந்து

பெற்றுக்கொள்வதற்காக DMC/02/03/18 (VOL-I) இலக்க **2017.02.06** ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரிடத்தில் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 06)

இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் MDM/AD/05/DMC/MISC/VOL-VI/2017 ஆம் இலக்க 2017.03.14 திகதிய கடிதத்துக்கான பதிலிருப்பாக தேசிய வரவு - செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் BD/RDS/106/02/02 ஆம் இலக்க 2017.04.25 திகதிய கடிதத்தின் வாயிலாக இரண்டு கார்களை கருமமாற்றல் குத்தகை முறையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இரண்டு பணிப்பாளர்களையும் ஆட்சேரக்காது, இரு கரர்களை பெற்றுக்கொள்ளுதல் காரணமாக, மீண்டும் அந்த இரு வாகனங்களையும் குறிப்பிட்ட நிறுவனத்துக்கு கையளிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு முன்னர், நிலையத்தின் வாகனங்களின் தேவைப்பாடு குறித்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு DMC/02/03/18 (VOL- II) ஆம் இலக்க **2018.01.30** ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அதற்கமைய, இந்த இரண்டு வாகனங்களையும் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடு குறித்து விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரதியை இத்துடன் இணைத்துள்ளேன். (இணைப்பு 07)

(ஈ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் தாபிப்பதற்கு உத்தேசித்துள்ள பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வது அமைச்சின் உயர் முகாமைத்துவத்தின் பொறுப்பாகையாலும், 2018 ஜூன் மாதம் 21ஆந் திகதி அமைச்சரவையின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கணக்காய்வு குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இதற்காக இப்பயிற்சி நிலையத்தை அமைப்பதற்காக காணியொன்றை இதுவரையில் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

4.3 செயழிலந்துள்ள மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

செயழிலந்துள்ள மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்களாக காட்டுப்பட்டுள்ள ரூ.**7,166,319** பெறுமதியில் அனர்த்தங்களுக்கான பதிலிருப்பின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள 10 வகையான கருவிகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

பொருள்	2018 ஜூன் 08ஆந் திகதி எஞ்சியுள்ள கையிருப்பு	எஞ்சியுள்ள கையிருப்பு பற்றிய விபரம்
சங்கிலி வாள்	06	அவசர அனர்த்த நிலைமைகளின்போது பயன்படுத்துவதற்காக சங்கிலி வாள்கள் ஆகக்குறைந்தவு கையிருப்பில் உள்ளன.
மீட்கும் கயிறுகள்	**15**	எதிர்காலத்தில் பங்கிடப்படவுள்ள படகுகளுக்காக எங்களால் தாபிக்கப்பட்ட 90 கருமமாற்றல் அலகுகளுக்கு வழங்குவதற்காகவும்

		கையிருப்பில் உள்ளது. தற்போது இவை பகிர்ந்தளிக்கப்பட்டு ஆகக் குறைந்த கையிருப்பு எஞ்சியுள்ளது.
நீர் பாய்ச்சும் மோட்டார்கள்	**05**	அவசர நிலைமையின்போது வழங்குதற்காக இத்தொகை கையிருப்பில் உள்ளது
மழைமானிகள்	**241**	World Vision நிறுவனத்தினால் நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ள இந்த மழைமானிகளை அவர்களால் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் இனம் காணப்பட்ட இடங்களுக்கு மாத்திரம் வழங்குவதற்காக தற்போது 119 மழைமானிகள் கையிருப்பில் உள்ளன.

தேடுதல் மின்சூழ்கள்	**57**	இந்த மின்சூழ் மீண்டும் திருத்த முடியாதவாறு உடைந்துள்ளது.
அடையாளம் காணும் மேல்அங்கிகள் - DMC	**2286**	மாவட்டங்களில் அமைந்துள்ள குழுக்களின் தேவையின் மீது கிரமமாக வெளியிடப்படுவதுடன், தற்போது 448 தேவையான இடங்களுக்கு வழங்குவதற்காக கையிருப்பில் உள்ளது.
அடையாளம் காணும் மேல்அங்கிகள் - UNDP	**2000**	இந்த மேல் அங்கிகள் தேசிய பாதுகாப்பு தினத்தையொட்டி பகிர்ந்தளிக்கப்பட இருந்தவையென்பதுடன், இத்தினம் கடந்த சில வருடங்களாக கொண்டாடப்படாமையால், பகிரப்படவில்லை. மேலும், தேவைக்கேற்ப பகிர்ந்தளிப்பதற்காக 750 மேல் அங்கிக் கையிருப்பில் உள்ளன.
தேடுதல் மற்றும் மீட்பு பொதிகள்	**920**	மாவட்டங்களுக்கு படகுகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் அவற்றுக்காக OBM வழங்கப்படவில்லை. OBM கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர், ஒரு படகுக்கு 05 தேடுதல் மற்றும் மீட்பு பொதிகள் வீதம் வழங்குதவற்காக 245 கையிருப்பில் உள்ளன.

மின் பிறப்பாக்கி இயந்திரங்கள்	**01**	DMC தேவைக்காக கையிருப்பில் உள்ளன.
மழை அங்கிகள்	**324**	இந்த மழைஅங்கிகளை பயன்பாட்டுக்கு எடுத்ததன் பின்னர், அனர்த்த நிலைமைகளின்போது சேதமடைவதனால், மீதி கையிருப்பாக பேணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட கருவிகள், செயலிழந்த குறைபயன்பாடுடைய சொத்துக்களாக காட்டப்படினும், இந்த உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக தேவையான இடங்களுக்கு வழங்குவது தாமதமடைந்துள்ளது. சில பொருட்களை பகிர்ந்தளிக்கையில் ஏனைய சில கருவிகளுடன் சேர்த்து வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது. அதாவது, படகுகளை வழங்குகையில் பாதுகாப்பு கவசங்களை வழங்குதல், அவற்றுக்குத் தேவையான வீசக்கூடிய பொதிகள் மற்றும் கயிறுகளை வழங்குவதும் தேவையாகிறது. சில அத்தியவசிய கருவிகளை குறிப்பிட்ட இடங்களுக்கு பகிர்ந்தளித்தன் பின்னர், எமக்கு பெற்றுக்கொள்வதற்கு அதிக காலம் எடுப்பதனாலும், அந்த உபகரணங்களின் செயற்பாடு தொடர்பில் நாம் சான்றுரை வழங்க வேண்டுமாகையாலும் கொள்வனவு செய்யப்படும் கருவிகளில் ஒரு தொகை கையிருப்பாக பேணப்படுகிறது. ஆகையால், இவற்றில் சில கருவிகளை அவசர நிலைமைகளின்போது குறிப்பிட்ட இடங்களுக்கு நேரடியாக விடுவிக்க முடியாத காரணத்தினால், எமது தலைமை களஞ்சியசாலையில் அவற்றின் ஆகக் குறைந்த ஒரு தொகை கையிருப்பாக பேணப்படுவதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

- ரூ. **6,264,973** பெறுமதியான 09 வகையான நிலையான சொத்துக்கள் பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

projector	03	புரோஜெக்டரொன்று அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 02 புரோஜெக்டரில் ஒன்று உமா ஓயா கருத்திட்டத்துக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அது மீண்டும் DMC இற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. நிறுவனத்துக்கு வெளியில் மேற்கொள்ளப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்களின்போது பயன்படுத்துவதற்காக ஒரு தொகை கையிருப்பிலுள்ளது.
Scanner	04	தணிப்பு மற்றும் ஆராய்ச்சி இலக்கம் 01இற்காக Scanner இயந்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய இயந்திரங்களை தேவைக்கேற்ப பிரிவுகள் மற்றும் மாவட்டங்களுக்கு வழங்க முடியாமையால், தற்காலிக அடிப்படையில் வழங்குவதற்காக கையிருப்பில் உள்ளது. 25 மாவட்ட அலுவலகங்களிலும் Scanner இயந்திரங்கள் காணப்படாமையால், தேவையான சந்தர்ப்பங்களில வழங்குவதற்காக தற்காலிகமாக வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

GPS	04	அவசர நிலைமைகளின்போது பயன்படுத்துவதற்காக DMC இல் ஆகக்குறைந்த தொகை கையிருப்பாக உள்ளது.
Printer	01	இக்கருவிகள் DMC மற்றும் மாவட்ட பிரிவுகளில் இடம்பெறும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள், அவசர பதிலிருப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களில் தற்காலிகமாக பயன்படுத்துவதற்காக களஞ்சிசாலைகளில் கையிருப்பில் உள்ளது. இதற்கு மேலதிகமாக, அனர்த்தமொன்று ஏற்படுகையில் தேவைகருதி பெறுகை வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, கருவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிட்டதொரு காலப்பகுதி தேவைப்படுவதனால், துரித அவசர பதிலிருப்பு தேவைக்காக இத்தகைய தொழிநுட்ப கருவிகளைப் பயன்பாட்டுக்காக DMC தலைமை களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
Web cam & Head phone	08	
Digital Camera	02	
Laptop	02	
LED TV	01	
Exhibition Tools	**09**	அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் முன்கூட்டிய விழிப்புணர்வூட்டும் நோக்கில், 09 மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு 09 கண்காட்சி தொகுதிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதன்போது கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, மொணறாகலை, மாத்தறை, அநுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு வழங்குவதற்காக தீர்மானிக்கப்பட்டது. குறிப்பிட்ட கேந்திர மாவட்டங்களின் 25 உத்தியோகத்தர்களை தலைமை அலுவலகத்துக்கு அழைத்து இப்புதிய கண்காட்சி தொகுதிகளை பொருத்துவது தொடர்பில் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், குறிப்பிட்டகேந்திர மாவட்டங்களின் அலுவலங்களில் இத்தொகுதிகளை களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான இடவசதிகளை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர், குறிப்பிட்ட மாவட்டங்களிலிருந்து லொறிகளை எடுத்துவந்து இதுவரையில், கண்டி, இரத்தினபுரி, மாத்தறை, மொணறாகலை, மட்டக்களப்பு, குருநாகல ஆகிய மாவட்டங்கள் கண்காட்சி தொகுதிகளை எடுத்துச் சென்றுள்ளதுடன், யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளும் குறிப்பிட்ட மாவட்டங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொழும்பு மாவட்ட அலுவலகத்திலான இடப்பற்றாக்குறை காரணமாக, கம்பஹ, கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட கண்காட்சி தொகுதிளை தலைமை

		அலவலகத்தில் வைத்துக்கொண்டு குறிப்பிட்ட மாவட்டங்களின் வேண்டுகோளுக்கமைய கண்காட்சிகளுக்காக வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறுபட்ட நிறுவனங்களிடமிருந்து நிலையத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்து புத்தகங்கள் மற்றும் வீடியோ ஒலிநாடாக்கள் அனைத்தும் **2018.11.16** ஆந் திகதி நிலையத்தில் இடம்பெற்ற மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டத்தின்போது 25 மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அகழ்வு இயந்தி டயர்கள் 02உம், லுணுகம்வெஹர பிரதேச சபையின் கோரிக்கைக்கமைய அங்கு காணப்படும் நிறுவனத்துக்கு உரித்தான JCB இயந்திரத்தின் பயன்பாட்டுக்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் **23/07/2018** ஆந் திகதி வழங்கப்பட்டது. அவர்களுக்கு அதனை விரைவில் எடுத்துச் செல்லுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4.4 பணியாட்குழு நிருவாகம்

பணிப்பாளர் (நிதி) பதவிக்காக நேர்முகப்பரீட்சை சபையினால் ஒருவர் விதப்புரை செய்யப்பட்டிருந்தபோதிலும், அந்த விதப்புரையை இடைக்கால முகாமைத்துவ குழுவுக்கு முன்வைத்தன் பின்னர், அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட 23 புள்ளிகளும் போதியதாக இல்லையென தீர்மானிக்கப்பட்டது. இதற்மைய நிறுவனத்தின் பணிகளை வினைத்திறனாகவும் முறையாகவும் முன்னெடுக்கும் நோக்கில், தற்காலிக தீர்வாக பணிப்பாளர் (நிதி) மற்றும் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகிய இரு பதவிகளிலும் பதில் கடமையாற்றுவதற்காக நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது MDM/AD/**05**/DMC/NR(D)/VOL-III/**2017** மற்றும் **2018.07.26** ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக இடைக்கால முகாமைத்துவ குழு மற்றும் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினது பதில் கடமையாற்றும் அங்கீகாரத்துடன் நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தலைமை கணக்காளர் திரு.ஜீ.எஸ்.கே. சமரதுங்க மற்றும் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி. எச்.எம்.எஸ்.பீ.திசேரா ஆகியோர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதற்கமைய அவர்கள் **2018.08.01** கடமைக்கு சமூகமளித்துள்ளார்கள். இப்பதவிகள் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது நியமிக்கப்பட வேண்டிய பதவிகள் அல்ல என்பதனால், பணிப்பாளர் (நிதி) மற்றும் பணிப்பாளெர் (மனித வள மற்றும் நிருவாகம்) பதவிகளில் கடமையாற்றுவதற்காக நியமிப்பது தொடர்பில் 2018.09.12 ஆந் திகதி இடம்பெற்ற இடைக்கால முகாமைத்துவ குழுவுக்கு முன்வைக்கப்பட்டு பதில் கடமையாற்றும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

5. நிலையான அபிவிருத்தி

5.1 நிலையான அபிவிருத்தியின் நோக்கங்களை அடைதல்

நிலையான அபிவிருத்தியின் நோக்கங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் வைத்திட்டங்களை முன்னெடுத்து, நிறுவனத்தின் 2019ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு திட்டத்தில் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை உள்ளடக்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

6. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

6.1 பெறுகை வழங்கல் மற்றும் ஒப்பந்த செயன்முறை

6.1.1 பெறுகை வழங்கல்கள்

(அ) 2017 டிசெம்பர் முதல் சகல இணைத்தோணிகளும் உற்பத்தி செய்யப்பட்டிருந்தபோதிலும், நிலையத்தின் இடவசதியின்மை காரணமாக 10 இணைத்தோணிகள் மாத்திரம் எமது நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டதுடன், ஏனைய அனைத்தும் உற்பத்தி நிறுவன வளாகத்திலிருந்து குறிப்பிட்ட இடங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. திட்டமிடல், இருப்பில் வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளின்போது ஏற்படக் கூடிய சுற்றாடல் காரணிகளைக் கருத்தில் கொண்டதன் பின்னர், மேற்படி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன். மேலும் இத்தகைய கருவிகளை தேவைகருதி கொள்வனவு செய்கையில் இருப்பில் வைத்திருப்பற்கான இடவசதி காணப்படாமையால், இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு முடிந்துள்ளது. இருந்தபோதிலும் தற்போது இக்கருவிகள் மாவட்டங்களுக்கு பங்கிடப்பட்டுள்ளன.

(ஆ) குறிப்பிட்ட அபாய முன்னறிவித்தல் கம்பங்களை திருத்தி பராமரித்தல் மிகவும் சிக்கலான தொழிநுட்ப செயற்பாடு என்பதனால், அதன் நடவடிக்கைகளை பல்வேறு நிறுவனங்களுக்கு கையளிக்க முடியாது. இதனால் அப்பொறுப்புக்களை கையளிப்பது தொடர்பில சிக்கல் ஏற்படும். ஆகையால் காணப்படும் தொழிநுட்ப சிக்கல் காரணமாக குறிப்பிட்ட விடயத்துக்காக ஒரு நிறுவனத்தை தெரிவு செய்யும் நோக்கில், தெரிவு செய்யும் கருவியாக மொத்த விலைப் பெறுமதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

அளவுகோல் பயன்படுத்தலாக குறிப்பிடப்பட்டபோதிலும், ஒவ்வொரு பொருளினதும் வெளிச்செல்லல் காரணமாக அவை அனைத்தையும் ஒரே தளத்துக்கு எடுப்பதற்காக அவர்கள் வழங்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதன் மூலம் தீர்மானங்கள் எடுக்கும் செயற்பாடு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Rehabilitation, Corrective மற்றும் Preventive என்பது ஒரு கம்பத்தை திருத்தி முன்னெடுப்பதற்காக தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் பிரேரணை செய்யப்பட்டு அதற்கான ஒரு விடயமாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது ஒவ்வொரு விடயத்தின் கீழும் பகுதிகள் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன. அப்பகுதிகள் விலை மனுதாரர்களின் வசதி கருதி வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு பகுதிகளினதும் விலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆகக் குறைந்த விலையில் நிறுவனங்களை தெரிவு செய்வதற்காக அல்ல. இதன்போது விலை மனுதாரர்கள் இது பற்றிய தெளிவின்றி, விலைகளை முன்வைத்துள்ளார்கள்.

தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை பட்டியலில் காணப்பட்ட எண்கணித பிழைகள் திருத்தப்பட்டுள்ளன. ஆனால், பெறுகை வழங்கலில் காணப்பட்ட சிக்கல் காரணமாக முன்வைக்கப்பட்டுள்ள விலைகளில் காணப்பட்ட அளவுகளிலான முரண்பாடுகள் திருத்தப்படவில்லை.

பெறுகை வழங்கல் மதிப்பீட்டு மொத்த விலைப் பெறுமதியைக் கருத்தில் கொள்கையில் ஆகக்குறைந்த மொத்த விலை மனுப் பெறுமதியைக் கொண்ட விலை மனுதாரருக்கு பெறுகை வழங்கலை வழங்குவதற்கு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு விதப்புரை செய்துள்ளதுடன், இந்த விதப்புரையின் பிரகாரம் பெறுகை வழங்கல் சபையானது இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த விலை மனுப் பெறுமதி ஒரு அலகுக்கான செலவின் மீது கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியாகையால், சுட்டிக்காட்டப்பட்டுள்ள வித்தியாசம் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் ஆகக்குறைந்த மொத்த விலை

மனுவினை முன்வைத்துள்ள நிரம்பலாளரது அலகுக்கான செலவின் மீது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதனால், மொத்த ஒப்பந்த செலவும் குறையும் வகையிலான பெறுகை வழங்கல் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பெறுகை வழங்கல் தீர்மானமொன்றை மேற்கொள்கையில், நிரம்பலாளரது கடந்தகால இதனை ஒத்த பெறுகை வழங்கல் செயற்பாடுகளை மேற்கொள்வதிலான அனுபவங்கள் மற்றும் பெறுகை வழங்கலின்போது வழங்கப்படும் இதர சேவைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(இ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு டிரெக்டர் பவுசர்களைக் கொள்வனவு செய்கையில், பின்வரும் குறிப்பில் காட்டப்பட்டுள்ள அம்சங்களைக் கருத்தில் கொண்டு அத்தேவைகளுடன் இசைந்தொழுகும் வகையில் தொழிநுட்ப குறியீட்டு விபரங்கள் உள்ளடங்கும் பொருளொன்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் பகுதிகளைக் கொண்ட டிரெக்டர் மற்றும் பவுசர்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இந்த விலை நெகிழ்ச்சி காட்டப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	**பொருதள்**	**தேவைப்பாடு**
01	டிரெக்டரில் சாரதி இருக்கைக்கு மேலாக கூரை அமைத்தல் **(**R.O.P.S Canopy)	சாரதிக்கு மழை வெப்பத்திலிருந்து பாதுகாப்பளித்தல், ஸ்டீரிங்வீல் மீற்றர் முறைமை மற்றும் ஏனைய கட்டுப்பாட்டு கருவிகளின் பாதுகாப்புக்காக (இது இல்லையெனில் மீற்றர் தொகுதியின் பாதுகாப்புக்காக காணப்படும் கண்ணாடி சேதமடையும், சாரதி இருக்கை விரைவில் சேதமடைதல், அசுத்தமடைதல்)
02	பவுசருக்கான பவரை பொருத்துதல்	நீர்த்த தொட்டி மற்றும் நீர் மோட்டாரின் பாதுகாப்புக்காக
03	மேலதிக சக்கரம் (டயர் மற்றும் டியும் சகிதம்)	சேவையில் ஈடுபடுத்துகையில் அத்தியவசியமான கருவியாகக் காணப்படுதல் (கஷ்டப் பிரதேசங்களில நீர் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகளில் அத்தியவசியமானதாக இருத்தல்)
04	நீர் குழாய்களை மேலதிக நீளம் கொண்டவையாக அமைத்தல் (35 அடிக்கு அதிகம்)	ஆழ் கிணவு, நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகள் போன்ற தூர இடங்களிலிருந்து நீரை இழுப்பதற்காக)
05	மேலதிக உத்தரவாதக் காலத்தைப் பெற்றுக்கொள்ளுதல். (பவுசர் வண்டிகளுக்கு ஆயுட்கால் உத்தரவாதத்தைக் கோருதல்)	மிகத் தரமான குடீநீர் பவுசர் வண்டியைப் பெற்றுக்கொள்ளுதல்.

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையமானது தனியான பெறுகை வழங்கல் அமைப்பினைக் கொண்டுள்ளதுடன், இதற்கமைய இந்த நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டுள்ள தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் குறிப்பிட்ட நிறுவனத்தின் தேவைக்கேற்ப தயார்

செய்யப்பட்டுள்ள தொழிநுட்ப குறியீட்டு விபரங்களை உள்ளடக்கிய விலை மனுப் பத்திரங்களின் மீது தொழிற்படும் பெறுகை வழங்கலாகக் காணப்படுவதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தேவைகளுக்கேற்ப தயார் செய்யப்பட்டுள்ள தொழிநுட்ப குறியீட்டு விபரங்களை உள்ளடக்கிய மற்றும் இதற்காக நிலையத்தினால் நியமிக்கப்பட்டுள்ள பிறிதொரு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களினால் ஆகும். இதற்கமைய, இந்த பெறுகை வழங்கல்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு பெறுகை வழங்கல் முறைகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இரு பெறுகை வழங்கல்களாகக் காணப்படுவதனால், 02 நிறுவனங்களினதும் பெறுகை வழங்கல் குறியீட்டு விபரங்களுக்கு அமைய இந்த விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மேலும், தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் 100 டிரெக்டர்கள் மற்றும் பவுசர்களுக்கான பெறுகை வழங்கல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 50 டிரெக்டர்கள் மற்றும் பவுசர்களுக்காக மாத்திரம் பெறுகை வழங்கல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதாவது இது அதஅன் அரைப்பங்காகக் காணப்படுகிறது. (**50%** மீள்கொள்வனவுக் கட்டளையானது பிறகு ஏற்பட்ட தேவைக்கேற்ப விடுக்கப்பட்டுள்ளது) இதற்கேற்ப கொள்வனவு செய்வதற்கு உரித்தான பொருட்களின் எண்ணிக்கை அலகொன்றின் விலை கூடிக் குறைவதற்கு காரணமாக அமையலாம்)

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொள்கையில், குறிப்பிட்ட இரு நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ள பெறுகை வழங்கலில் ஒரு அலகுக்கான விலையில் இவ்வாறு வித்தியாசம் ஏற்பட முடியும்.

டிரெக்டர் / பவுசர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு விடயத்துக்குப பொறுப்பான அமைச்சரின் தலைமையில் அவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதற்கேற்ப, குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அவற்றை வழங்கும் செயற்பாடுகள் பல கட்டங்களில் நடைபெற்றன. (கௌரவ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிக்கு வசதியான நாட்களைப் பொறுத்து) இதற்கமைய பங்கிடப்படவிருந்த 50 டிரெக்டர்களையும் நிலையத்தில் வைத்து பங்கிடுவதற்காக அவற்றை தரித்து வைப்பதற்கான இடவசதி காணப்படவில்லை. மேலும் டிரெக்டர் / பவுசர் வழங்கப்படவிருந்த அனைத்து நிறுவனங்களையும் ஒரே நாளில் அழைப்பதும் கடினமானதாக இருந்தது. இதற்கமைய, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது ஆலோசனைக்கு ஏற்ப, பங்கிடலை பல நாட்களில் மேற்கொள்ள வேண்டி நேர்ந்தது. மேலும், நிலையத்துக்கு உண்மையாகவே கிடைக்கப்பெற்ற பொருட்களுக்காக மாத்திரம் GRN வழங்க வேண்டி ஏற்படுவதனால், ஏற்கனவே, டிரெக்டர் / பவுசர் வழங்குவதற்கான அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், நிலையத்தின் வேண்டுகோளுக்கேற்ப பல தடவைகளில் நிரம்பல் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதற்கமைய, நிலையத்தின் வேண்டுகோளுக்கமைய இப்பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளமையால், தாமதமடைந்துள்ள 04 நாட் காலப்பகுதியையும் தாமதமாகக் கருத முடியாது.

(ஈ) இதன்போது ஏற்பட்ட பெறுகை வழங்கல் சிக்கல் காரணமாக என்ஜின் பெறுகை வழங்கலை குறிப்பிட்ட வருடத்தினுள் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதுடன், இப்பெறுகை வழங்கலை நிலையத்தின் சார்பில் அமைச்சினால் **2018.11.23** ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2017 மே மாதம் இடம்பெற்ற திடீர் பெருவெள்ள அனர்த் நிலைமைக்கு துரித பதிலிருக்கும் முகமாக குறிப்பிட்ட வருடத்தில் காண்பட்ட நிதி ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு 42 படகு என்ஜின்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அப்போது நாட்டில் காணப்பட்ட பெருவெள்ளம் மற்றும் மண்சரிவு நிலைமைகளின் கீழ் பத்திரிகையில் விளம்பரப்படுத்தி கொள்வனவுகளை மேற்கொள்வதற்கான போதிய காலம் காணப்படாமையால், அவசர கொள்வனவாக 42 என்ஜின்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவை தேவையினைக் கருத்தில் கொண்டு தற்போது தரைப்படை, கப்பற் படை மற்றும் பொலிஸாருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) **2016/2017** வருடத்துக்காக 136 மில்லியன் ரூபாவுக்கான செயற்பாட்டு திட்டமொன்று அடையாளம் காணப்பட்டு, இதற்காக உள்ளக முகாமைத்துவ குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கமைய, 2016ஆம் ஆண்டுக்காக 60 மில்லியன் ரூபாவுக்கான பெறுகை வழங்கல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், இந்நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாக இது 2017ஆம் ஆண்டுக்கு முன்கொண்டு செல்லப்பட்டதுடன், பெறுகை வழங்கலினான சிக்கல் காரணமாக இதனை 2017இலும் ஆரம்பிக்க முடியவில்லை. இதற்கமைய, குறிப்பிட்ட செயற்பாடுகளை தற்காலிகமான ஆரம்பிக்காமலிருக்க முகாமைத்துவம் தீர்மானம் மேற்கொண்டு இப்பணத்தை 2017இல் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தியது.

பெற்றுக்கொண்ட GIS மென்பொருள் கணினி முறைமை 2016 தொடக்கம் இதுவரையில் இக்கருத்திட்டத்தின் ஏனைய செயற்பாடுகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்காக பயன்படுத்தப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

6.1.2 ஒப்பந்த நிருவாகத்திலான குறைபாடுகள்

(அ)

(i) இக்கருத்திட்டமானது மாவட்ட செயலாளரது விதப்புரைக்கமைய அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட அறிக்கைகள் மற்றும் தொழிநுட்ப அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மாவட்ட செயலாளருக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் இன்மையால், இக்கருத்திட்டத்தை செயற்படுத்துகையில் தொழிநுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் மாவட்ட மட்டத்தில் இதற்கான தொழிநுட்ப நிறுவனத்தின் பொறியியலாளர் / தொழிநுட் உத்தியோகத்தர் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாவட்ட மட்டத்திலான விதப்புரைகளுக்கமைய நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

(ii) இக்கருத்திட்டமானது மாவட்ட செயலாளரது விதப்புரைக்கமைய அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட அறிக்கைகள் மற்றும் தொழிநுட்ப அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மாவட்ட செயலாளருக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் இன்மையால், இக்கருத்திட்டத்தை செயற்படுத்துகையில் தொழிநுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் மாவட்ட மட்டத்தில் இதற்கான தொழிநுட்ப நிறுவனத்தின் பொறியியலாளர் / தொழிநுட் உத்தியோகத்தர் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாவட்ட மட்டத்திலான விதப்புரைகளுக்கமைய நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

(ஆ)

(i) காணப்பட்ட பெறுகை வழங்கல் மட்டுப்பாடுகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட விடயத்தை மட்டுப்படுத்துவதற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்கொள்ளப்பட்ட விடயம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட உதவி பணிப்பாளரினால்

முன்வைக்கப்பட்ட மா.செ.நு**/05/10/01/03/15/** சீதாஎலிய கடிதத்தின் வாயிலான அறிவிக்கப்பட்டுள்ளது.(இணைப்பு 08)

(ii) வீதியில் கார்பட் போடுமாறு மக்களால் உள்ளூராட்சி நிறுவனத்துக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை கருத்தில் கொண்டு மாவட்ட செயலாளரினால் **05/10/01/01/1/15** இலக்க **2017/06/01** ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக இக்கருத்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 09) இதற்கமைய எதிர்காலத்தில் கணக்காய்வு மதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ளவாறு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உடன்படுகின்றேன்.

(இ)

உடன்படுகின்றேன்.

இக்கருத்திட்டமானது மாவட்ட செயலாளரது விதப்புரைக்கமைய அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட அறிக்கைகள் மற்றும் தொழிநுட்ப அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மாவட்ட செயலாளருக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

(ஈ)

இந்த நீர் ஊற்று இக்கருத்திட்டம் காரணமாக ஏற்பட்டதல்லஎனவும், ஆறுகளுக்கு குறுக்காக அமைந்துள்ள அனைத்து ஊர் ஊற்றுக்களையும் மூடுவது நடைமுறை சாதத்தியமற்றது எனவும், அவற்றை அவ்வாறே ஓடுவதற்கு விடவேண்டுமெனவும் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கருத்திட்டத்தினால் விவசாயிகள் எதிர்பார்த்த நோக்கங்கள் சிறப்பாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

(உ) குறிப்பிட்ட அனர்த்த கருத்திட்டத்தின் ஆரம்ப களப் பரிசீலனையின்போது இந்நிலம் அமைந்துள்ள மலை சார்ந்த பிரதேசமானது மண்சரிவுக்கு உட்படுவதற்கான ஆரம்ப அம்சங்களைக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது. மேலும், தர்மநிலையம் அமைந்துள்ள மலைப் பிரதேசத்தில; Failure Surface மேலிருந்து வீதி வரையில நீடித்திருந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் Failure surface உறுதிப்படுத்துவதற்காக அணைக்கட்டானது Surface கீழ் திருப்புமுனையில் உறுதியாக அமைக்கப்படுதல் வேண்டும். இதற்கமைய இதற்கு பொருத்தமான வகையில் இந்த அணைக்கட்டானது திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 10)

(ஊ)

(i)

இக்கருத்திட்டம் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தனியாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக **2018.08.09** ஆந் திகதி உதவிப் பணிப்பாளர் - கண்டியினால் பணிப்பாளர் நாயகத்துக்கு கணக்காய்வு பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், **2018.04.04** உள்ளக மமோவின் மூலம் கணக்காய்வு மதிப்பீடுகளுக்கான பதில் வழங்கப்பட்டுள்ளது.

(ii)

இக்கருத்திட்டமானது மாவட்ட செயலாளரது விதப்புரைக்கமைய அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்ட அறிக்கைகள் மற்றும் தொழிநுட்ப அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக மாவட்ட செயலாளருக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

(iii)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் இன்மையால், இக்கருத்திட்டத்தை செயற்படுத்துகையில் தொழிநுட்ப ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் மாவட்ட மட்டத்தில் இதற்கான தொழிநுட்ப நிறுவனத்தின் பொறியியலாளர் / தொழிநுட் உத்தியோகத்தர் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாவட்ட மட்டத்திலான விதப்புரைகளுக்கமைய நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

6.1.3 தாமதமடைந்த கருத்திட்டங்கள்

அஹட்டுவெவ பிரதேச செயலாளரது அறிக்கையின் பிரகாரம், உரிய தரத்திலான கற்களை பெற்றுக்கொள்வது முக்கிய சிக்கலாகக் காணப்பட்டதுடன், பல பாரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குத் தேவையான கற்களுக்கான கொள்வனவுக் கட்டளைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருத்தல் மற்றும அப்போது நிலவிய காலநிலை இதில் தாக்கம் செலுத்தியுள்ளது. (இணைப்பு 11- பிரதேச செயலாளரு அறிக்கை (ஆ))

6.2 வருடாந்த அறிக்கைகளை சபாபீடத்தில் சமர்ப்பித்தல்

2014 வருடாந்த அறிக்கையின் ஒப்பச்சிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், திருத்தங்களை மேற்கொண்டு புத்தகம் கட்டும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

2015 வருடாந்த அறிக்கையினை புத்தகம் கட்டுவதற்கும் மற்றும் அச்சிடுவதற்கான விலை மனுக் கோரல் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2016 வருடத்துக்கான வருடாந்த அறிக்கையின் மொழிபெயர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

6.3 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

உடன்படுகின்றேன்.

2012.08.16 ஆந் திகதி இடம்பெற்ற விபத்தின்போது மூன்றாம் தரப்பினருக்கு ஏற்பட்டு சேதத்துக்கான நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றது. இந்த வாகனம் பூரண காப்புறுதி செய்யப்பட்ட வாகனமாகையால், மூன்றாம் தரப்பு கோரும் நஷ்டஈட்டை வழங்குவதென நீதிமன்றம் தீர்மானிக்கும் பட்சத்தில், அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை செலுத்துமாறு காப்புறுதிக் கம்பனிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட தரவுகளை சரியாக நிதிக் கூற்றுக்கள் மூலம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. முறைமை கட்டுப்பாடு

(அ) பெறுகை வழங்கல் செயன்முறை

(i) உடன்படுகின்றேன்
தற்போது குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

(ii) இந்நடவடிக்கைகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்படுவதனால், இதற்காக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(iii) எதிர்காலத்தில் இது குறித்து விசேட கவனம் செலுத்தப்படும்.

(ஆ) செயற்பாட்டு திட்டத்தை தயார் செய்தல்

2017 வரையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாட்டுத் திட்டத்தில், முன்ஆயத்த பிரிவு, ஆராய்ச்சி மற்றும் தணிப்பு பிரிவு அவசர கருமமாற்றல் பிரிவு மற்றும் பயிற்சிப் பிரிவின் நடவடிக்கைகள் மாத்திரமே உள்ளடங்கின. 2019ஆம் ஆண்டு முதல் கணக்கீட்டுப் பிரிவு மற்றும் மனித வளப் பிரிவின் நடவடிக்கைகளையும் செயற்பாட்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றேன்.

(இ) அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை அடிக்கடி திருத்துதல்

கருத்திட்டததை செயற்படுத்துகையில் முகம் கொடுக்க நேர்ந்துள்ள தவிர்க்க முடியாத நடைமுறை சிக்கல்கள் காரணமாக கருத்திட்டத்தை திட்டமிட்டவாறே செயற்படுத்த முடியாத நிலை காணப்படுவதுடன், கருத்திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல ஆகிய இரு சந்தர்ப்பங்களிலும் கருத்திட்டங்களை அடிக்கடி திருத்த வேண்டி ஏற்படுகிறது.

கலாநிதி எஸ். அமலநாதன்
பணிப்பாளர் நாயகம்
அனர்த்த முகாமைத்துவ நிலையம்
2018.11.30